Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன்: 389

National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம், சுபகிருது மார்கழி 29 ஆம் நாள் ஷஃபான் பிறை 16 (13-1-63) ஞாயிற்றுக்கிழமை இதழ் 334

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |


வட கீழ் மாகாணங்களில்

# சிங்கள உத்தியோகஸ்தர் மேலும் நியமனம்

## உத்தியோக மொழிச் சட்டத்தை துரிதமாக செயல்படுத்த முடிவு

### அரசாங்க இலாகா அதிபர்களுக்கு திறைசேரியின் சுற்று நிருபம்

கொழும்பு, சனி

'சிங்களம் மட்டும்' சட்டத்தை பூரணமாக செயல்முறைக்கு கொண்டுவரும் பொருட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சிங்கள உத்தியோகஸ்தர்களை அதிகரிப்பதென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

உத்தியோகமொழிச் சட்டம் மிகத் துரிதமாகவும், அதிக பயன்தரக் கூடியமுறையிலும் செயல்படும்வகையில் அமையத்தக்கதாக, கூடிய சிங்கள அறிவுள்ளவர்களை இவ்விரு மாகாணங்களுக்கும் இடமாற்றம் செய்யும்படி அரசாங்க இலாகா அதிபர்களும், நிரந்தரக் காரியதரிசிகளும் கேட்கப்பட்டுள்ளனர்.

மிகவிரைவில், இருபத்தைந்திலிருந்து முப்பத்தைந்து சதவிகிதத்திற்கு வட, கீழ்மாகாணங்களிலுள்ள சிங்கள எழுதுவினைஞர் தொகையை அதிகரிப்பதெனவும் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

நேற்றைய தினம் திறைசேரியால், அரசாங்க இலாகா அதிபர்களுக்கும், அமைச்சுகளின் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட சுற்று நிருபம் ஒன்றில் கூடிய சிங்கள அறிவுள்ளவர்களை வடகீழ் மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு தெரிந்தெடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

திறைசேரியால் அனுப்பப்பட்ட சுற்று நிருபம் ஒன்றில் மிகவிரைவில் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள சிங்கள எழுதுவினைஞர் தொகையை 25 சத விகிதத்திலிருந்து 30 சத விகிதத்துக்கு அதிகரிப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் குறித்துப்போதிய அறிவித்தல் கொடுக்கும் வகையில், 1963ம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி வரையில் இடமாற்ற அறிவித்தல்கள் கொடுக்கப்படவேண்டும் எனவும் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இடமாற்றம் குறித்து உத்தியோகஸ்தர்களுக்கு அறிவிக்க இலாகாக்கள் முயற்சி செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு மாகாணங்களுக்கும் இடம்மாறிச் செல்லவிரும்பும் உத்தியோகஸ்தர்களைத் தவிர, திருமணமாகாதவர்களையும், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் இல்லாத உத்தியோகஸ்தர்களையுமே இடமாற்றத்துக்கு தெரிந்தெடுக்க வேண்டுமென திறைசேரி கேட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்கு மேல் இப்பகுதிகளில் சேவை செய்த சிங்கள உத்தியோகஸ்தர்கள் இப்பகுதிகளிலேயே தொடர்ந்து சேவையாற்ற விரும்பின் அவர்களை அனுமதிக்கலாம் எனவும் சுற்று நிருபம் குறிப்பிடுகின்றது.

## மீண்டும் இன்று பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஜன. 13

இலங்கைப்பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், ஐக்கிய அரபுக் குடியரசு பிரதமர் அலிசாப்ரியும், கானா நீதிமந்திரியும் நேற்று கூட்டாக இந்தியப்பிரதமர் திரு. நேருவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தைகள் 2 மணி நேரம்வரை நடைபெற்றது. இவர்கள் மீண்டும் இன்றுகாலை சந்தித்துப் பேசுவர்.

—

## ஷோம்பே

எலிஸபெத்வில்லி, ஜன. 11

கடாங்கா அதிபர் ஷோம்பே வடக்கு ரொடீஷியாவிலுள்ள என்டோலா என்னும் நகரில் இருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.



## பொது கணக்கியல் சபையின் புதிய தலைவர்

கொழும்பு, சனி

தமிழரசுக்கட்சித் தலைவர்களில் ஒருவரும் ஊர்காவற்

(12ம் பக்கம் பார்க்க)

## "பாடப்புத்தகங்கள் தெரிவில் கவனம் வேண்டும்"

### சாகித்தியதின விழாவில் வித்தியாலய அதிபர் கருத்து

யாழ்ப்பாணம், சனி

"பாடசாலைக்குரிய பாடப்புத்தகங்கள் தெரிவு செய்யப்படும் போது சாகித்திய மண்டலங்கள் போன்ற இயக்கங்கள் கவனமெடுக்க வேண்டும். தற்போதைய பாடப்புத்தகங்களிற் சில மாணவரின் தகுதி அகற்றப்பட்டுள்ளன. இன்றைய மாணவர்கள் தாய்மொழியிலேயே கல்வி பெற்றும் கூட தமிழில் தேர்ச்சி இல்லாமல் இருப்பது வருந்துதற்குரியது" என்று வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. அம்பிகைபாகன் தமது கல்லூரியில் நேற்று மாலை நடைபெற்ற இலங்கை சாகித்திய வாரத்தையொட்டி நிகழ்ந்த இலக்கிய விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

வட பெரும்பாக வித்தியாதரிசி திருமதி ஆர். ஆர். நவரத்தினம்தலைமையில் இவ் விழா நிகழ்ந்தது. அனைவரையும் வரவேற்றுப் பேசிய திரு. அம்பிகைபாகன் மேலும் பேசுகையில், தமிழில் பயிற்சி பெறும் மாணவர்களின் தேர்ச்சியைப் பொதுவாகப் பார்க்குமிடத்து, அவர்களின் தேர்ச்சி குறைவாகவே உள்ளது என்றும் பொதுவாக கனிஷ்ட வகுப்பு, சிரேஷ்ட வகுப்பு மாணவர்களைக் கவனிக்குமிடத்து தமிழ் நூல்களை வாசிப்பதில் போதிய பழக்கமில்லாதிருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது என்றும் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: 'மொழியானது பேசும் போதும், எழுதும் போதும் பிழையில்லாது இருக்க வேண்டும். மகாத்மா காந்தி சம்பந்தப்பட்ட குஜராத்தி நூல் ஒன்று அவருடையஅன்பரொருவரால் எழுதப்பட்டது. அந்த நூலில் பிழைகள் பல மலிந்திருந்தன. நூலை எழுதிய அன்பர் மகாத்மாவிடம் தாம் எழுதிய நூலைக் கொடுத்தார். நூலைப்பார்த்ததும் மகாத்மா அதனை தீயிலிட்டு நாட்டில் இத்தகைய பிழைகள் நடமாடக் கூடாது என்று கூறினர்.

(7ம் பக்கம் பார்க்க)

## பொங்கல் மலர்

'ஈழநாடு' நாளை (14—1—63) இதழ்

பொங்கல் மலராக வெளிவருகின்றது

கி. வா. ஜகந்நாதன், நா. பார்த்தசாரதி, 'மகரம்', க. இராமச்சந்திரன், ச. அம்பிகைபாகன், க. வேந்தனர், பொன். முத்துக்குமாரன், கனக. செந்திநாதன், 'அம்பி' 'தில்லைச்சிவன்', 'திமிலைத்துமிலன்', க. கணேசலிங்கம் உட்பட மற்றும் பலர் மலரை அலங்கரிக்கின்றனர்.

## சுதந்திர தினம் துக்கதினமாகக் கொண்டாடப்படும்

யாழ்ப்பாணம், சனி

வழக்கம்போல இலங்கையின் சுதந்திர தினமாகிய பெப்ரவரி 4-ந் திகதியை ஈழத்தமிழகம் முழுவதும் துக்கம் அனுட்டிக்கும் நாளாகக் கொண்டாடத் தமிழரசுக் கட்சி ஒழுங்கு

[ 12-ம் பக்கம் பார்க்க ]

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும் சுறுணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

# மெற்றசிஸ்ரொக்ஸ்

METASYSTOX

T'GRAMS: ROYAEL ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு மார்கழித் திங்கள் 29-ம்நாள் ஞாயிற்றுக்கிழமை (13-1-1963) முதல் தைத் திங்கள் 6-ம் நாள் சனிக்கிழமை (19-1-63) வரை உள்ள பலன்கள்.

### மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனத்தில் எண்ணியவை நிறைவேறல், ஆதாயம் கிட்டல், எதிரிகளை வெற்றி கொள்ளல், உத்தியோக பதவி உயர்வு, மதிப்பு அதிகரித்தல், வர்த்தகச் சிறப்பு, தொழில் விருத்தி, நல்ல நண்பர் சேர்க்கை, கமத்தொழில் மத்திம பலிதம், வித்தைச் சிறப்பினுல் மாணவருக்கு உயர்ச்சி, பெண்களுக்கு தேகநலக் குறைவு, குழந்தைப்பேறுஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி15,18சுபதினங்களாகும்

★

### இடப இராசி

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் உடல்நலக்குறைவு, மனத்தில் சஞ்சலம், முயற்சிகள் தடைப்படல், கஷ்டமான பிரயாணங்கள், உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மத்திம பலன்கள், வர்த்தகத்துறையினருக்கு அபிவிருத்தியான பலன்கள் காணப்படல், கமத்தொழிலாளருக்குச் சச்சரவு காரணமாகப் பயிர்த்தொழில் தடைப்படல், மாணவருக்குக் கல்விச் சிறப்பு இருப்பினும் இதர சூழ்நிலை காரணமாக அனுபவிக்க இயலாமை, பெண்களுக்கு உல்லாசச் செலவுகள் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 14, 15, 18 சுபதினங்களாகும்.

★

### மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மதிப்பதிகரித்தல், பதவியில் மகிழ்ச்சி, ஆதாயம், முயற்சிகளில் வெற்றி, குழந்தைகளது உடல்நலம் குறைதல், வர்த்தகத்துறையிலுள்ளவர்களுக்கு தொழில் விருத்தி, உத்தியோகத்தர் மேலதிகாரிகளிடம் குறைகேட்டல், மாணவருக்கு கல்வித்தடை, பணமுடை, கமத்தொழில் மத்திம பலிதம், பெண்களுக்கு உடல் நலம் குறைதல், எதிர்ப்பாளருடன் சச்சரவு, குடும்ப கஷ்டம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 14, 17, 19 சுபதினங்களாகும்.

★

### கடக இராசி

(புனர்பூசம் நான்காம் பாதம், பூசம், ஆயிலியம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முயற்சிகளில் வெற்றி, சிறு ஆதாயம், எதிரிகள் நண்பராதல், நண்பரால் உதவி, உத்தியோகத்தினருக்கு மத்திமபலன் நடத்தல், வர்த்தகத்துறையினருக்கு மத்திமத்தில் குறைவான பலன் நடத்தல், மாணவருக்கு கல்விச் சிறப்பு, கமத்தொழிலாளருக்கு குடும்ப நிம்மதி, தொழிலில் ஊக்கம், பெண்களுக்கு மதிப்பு அதிகரித்தல், குடும்பச்சிறப்பு, தெய்வ வழிபாடு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 14, 17 சுபதினங்களாகும்.

★

### சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முயற்சிகளில் வெற்றி, ஆதாயப் பெருக்கம், செல்வாக்கு விருத்தி, குடும்பப் பெருக்கு போன்ற சுபகருமம் நடத்தல், மாணவருக்கு கல்வி விருத்தி, கமத்தொழிலாளருக்குச் சிறப்பு, வர்த்தகருக்கு தொழில் அபிவிருத்தி, நண்பர் உதவி, உத்தியோகத்துறையினருக்குப் பரீட்சைகளில் வெற்றி, உத்தியோகச் சிறப்பு, பெண்களுக்கு குடும்பச் சிறப்பு, கணவருக்கு மேன்மை, சமுதாய மதிப்புயர்ச்சி ஆதியன காணப்படுகின்றன, இவர்களுக்கு 14, 15, 17 சுபதினங்களாகும்.

★

### கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகநலக் குறைவு, பண நெருக்கடி, வழக்கு கஷ்டங்கள், வர்த்தகருக்குச் சராசரியிலும் அதிகமான ஆதாயம், தொழில் விருத்தி, மாணவருக்கு கல்விச் சிறப்பு, உத்தியோகத்தருக்கு மத்திம பலன், கமத்தொழில் நற்பலன், பெண்களுக்கு குடும்ப அமைதியுடன் இருப்பது நன்று, வெளிவேலைகளில் தலையிட்டால் மதிப்புக் குறைவதுடன் தமக்கும் கெட்டபேர் சம்பாதிக்க நேரும், தெய்வவழிபாடு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 14, 15, 17, 18 சுபதினங்களாகும.

★

### துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகாரோக்கியச் சிறப்பு, மதிப்பான பதவி வகித்தல், ஆதாயச் சிறப்பு, சந்தோஷமனுபவித்தல், முயற்சிகளில் வெற்றி, உத்தியோகத்தருக்குத் திறமை மதிக்கப்படல், மேலதிகாரிகளால் பதவி உயர்த்தப்படல், தடைகள் நீக்கப்படல், வர்த்தகருக்கு தொழில்மேன்மை, இலாபம் கிட்டுதல் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் கமத்தொழிலாளருக்கும் சுப பலன்கள் நடத்தல், குடும்பச் சிறப்பு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 14, 17 சுபதினங்களாகும்.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மகிழ்ச்சி, கல்விச் சிறப்பு. முயற்சியில் வெற்றி, தேகாரோக்கியம், நல்ல நண்பர் சேர்க்கை, வர்த்தகச் செலவு, தொழில் விருத்தி, பழைய பாக்கிகள் வரவு, கமத்தொழில் நற்பலன், உத்தியோகத்தருக்கு கஷ்டமான நிலைமை, பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படல், பெண்களுக்கு எண்ணியவை நிறைவேறல், கன்னியருக்கு விவாகப்பேறுகிட்டல், சமூகமதிப்பு, குடும்பசிறப்பு,. ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 14, 17, 18 சுபதினங்களாகும்.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பிரயாணக் கஷ்டம், மதிப்புக் குறைதல், தேகநலக்குறைவு, நண்பர்-உறவினர் அபிப்பிராயபேதம், உத்தியோகத்தருக்கும் கமத்தொழிலாளருக்கும் கஷ்டமான பலன்கள், தற்காலிக பதவி வகிப்போர் வேலையிழக்கவும் நேரல், மாணவருக்குப பணக் கஷ்டம், வர்த்தகருக்கு சராசரியிலும் குறைவான வருவாய், பெண்களுக்குத் தேகநலக் குறைவு, ஆண்களுடன் கலந்து பழகல் தீங்கு விளைத்தல், குடும்பத்தோடு வீட்டில் இருத்தல் நன்மை ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 14, 15, 17 சுபதினங்களாகும்.

★

### மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால் திருவோணம், அவிட்டம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முயற்சியால் வெற்றி, செல்வாக்கு, சுகமனுபவித்தல், வயிற்றில் ரோகம், பணவரவு, உத்தியோகத்துறையில் புத்தியாக நடந்தால் மதிப்போடு இருக்க முடியும், வர்த்தகத்துறையில் மத்திம பலன், கமத்தொழில் நற்பலன், மாணவருக்கு கல்விச் சிறப்பு, பெண்களுக்கு சமூக செல்வாக்கு வளர்ச்சி, பணவரவு, அந்நியர் சகவாசம் நிறுத்தலால் நன்மை ஆகியன காணப்படும். இவர்களுக்கு ஜனவரி 13, 16, 18 சுபதினங்களாகும்.

★

### கும்ப இராசி

(அவிட்டம்பின்னரை,சதயம், பூரட்டாதி முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் ஆதாயம், முயற்சிச் சிறப்பு, சச்சரவு, எதிரிகளால் கஷ்டம், கண்-வயிறு ரோகம், உத்தியோகத்துறையில் நற்பலனும் தீப்பலனும் கலந்து நடத்தல், பதவி உயர்ச்சிக்கு இடமுண்டு, வர்த்தகத்துறையில் படிப்படியான முன்னேற்றமும் பழைய கடன் வரவும், மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பு, கமத்தொழிலளருக்கு மத்திம பலன், பெண்களுக்கு தொழில் விருத்தி, குடும்ப சுகம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 14, 17, 18 சுபதினங்களாகும்.

★

### மீன இராசி

(பூரட்டாதி நாலாம் பாதம், உத்திரட்டாதி,ரேவதி.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் ஓரளவு ஆதாயச் சிறப்பு, மகிழ்ச்சி, எதிரிகள் வீழ்ச்சி, நண்பர் சேர்க்கை, புதிய கல்வித்துறைப் பயிற்சி, வித்தைச் சிறப்பு, தேகநலம், பணவரவு, வர்த்தக அபிவிருத்தி, ஆதாய வரவு அதிகரிப்பு, உத்தியோக உயர்வு, மதிப்பு அதிகரித்தல், கமத்தொழில் சிறப்பு, பெண்களுக்குச் சகல துறைகளிலும் கீர்த்தி, பணநலம், குடும்பச் சிறப்பு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 14, 15 சுபதினங்களாகும்.

# விண்வெளி ஆராய்ச்சியில் வெற்றிமிக்க நாலாண்டு

தேசிய விமானவியல் விண்வெளி நிர்வாகம் என்பதை சுருக்கமாக ஆங்கிலத்தில் "நாஸா" என அழைப்பர்.

1958-ம் ஆண்டு அக்டோபர் மாதம் "நாஸா" உருவாயிற்று. அன்று முதல் இன்றுவரை இடைவிடாமுயற்சியால், அது அமெரிக்காவுக்கு விண்வெளி ஆராய்ச்சியில் மிகுந்த முன்னேற்றம் காட்டியுள்ளது,

நாம் வாழும் பிரபஞ்சத்தைப் பற்றி நுணுக்கமான பல விஞ்ஞானத் தகவல்களை வழங்கியிருக்கின்றன. "நாஸா" அனுப்பிய செயற்கைக் கோள்கள் பற்பல கருவிகள் நிறைந்த இந்தச் செயற்கைக்கோள்களே விண்வெளிவிஞ்ஞானப் புதுமைகளாகும்.

தந்தி, டெலிபோன், ரேடியோ, டெலிவிஷன் முதலிய செய்திப் போக்குவரத்துக்கள் உலகம் முழுவதிலும் முன்னிலும் வேகமாகவும், முழுமையாகவும், செம்மையாகவும் நடைபெறவேண்டுமென்றநோக்கத்தோடு அமெரிக்கா செயற்கை கோள் திட்டமொன்றை உருவாக்கி வெற்றி கண்டுவருகிறது. வேறெந்த நாடும் விண்வெளியை இம்முறையில் பயன்படுத்தியது கிடையாது.

நாளது வரை அமெரிக்கா அறிவித்துள்ள விண்வெளி வெற்றிகள் கிட்டத்தட்ட எண்பதாகும். ரஷ்யா அனுப்பி வெற்றிகண்ட செயற்கைக் கோள்கள் இருபத்தைந்து தான். விண்வெளி சென்ற அமெரிக்க செயற்கைக்கோள்களில் பாதிக்குமேல் இன்னமும் வலம்வந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் இன்னும் பன்னிரண்டுக்கு மேற்பட்டவை தகவல் அறிவித்துவருகின்றன.

ஆனல் இவற்றையெல்லாம் விடப் பெரிய குறிக்கோள் ஒன்று "நாஸா"வுக்கு உண்டு. அதுதான் ஜனவரிமாதம் 25-ம் திகதி ஜனதிபதி கென்னடி குறிப்பிட்ட நோக்கம்; 1970-ம் ஆண்டுக்குள் அம்புலியை எட்டிப் பிடிக்கவேண்டும் என்பதே அந்த லட்சியம். "நாஸா" நடாத்தும் ஆராய்ச்சிகள் அனைத்துக்கும் முதல்நோக்கம் இதுவே.

### நிகழ்ச்சி நிரல்

இன்றைய திட்டப்படி:-

1963-ல் "நாஸா" வின் மெர்குரித்திட்டம் முடிவடையும். அமெரிக்க விண்வெளி விமானிகள் ஒருநாள் முழுவதும் விண்வெளியை வலம்வந்து இறங்குவர்.

1964-ல் ஜெமினித் திட்டம் தொடங்கும். இரண்டு பேர், உலகத்தை பத்துநாள் சுற்றி வந்து இறங்குவர்.

1965-ல் மாபெரும் "சனி" ஏவுகணைகளின் உதவியால் "அப்பாலோ" திட்டத்து அம்புலிப் பயண விண்வெளிக் கப்பல்கள் பூமியைச்சுற்றி இருவாரம் வலம்வரும், விண்வெளியிலேயே செயற்கைக் கோள்களை இணைத்துப் பொருத்தும் வேலையிலும் விண்வெளிவிமானிகள் பழகுவார்கள்.

1966-ல் விண்வெளிக் கப்பல் ஒன்று மூன்றுபேர்களை ஏற்றிக்கொண்டு அம்புலியைச் சுற்றி வளையம் வந்து மீளும். அம்புலிக்குப் பக்கத்தில் விண்வெளியில் வாகனங்களைக் கழற்றவும் பூட்டவும், விமானிகள் பழகிக் கொள்வர். சந்திரனின் மேற்பரப்பையும் ஆராய்வர்.

1967-ல் அமெரிக்கர் இருவர் முதன்முதல் சந்திரனில் இறங்குவர். அப்பாலோ எனும் தாய்கப்பல் விண்வெளியில்சந்திரனை சுற்றிக்கொண்டிருக்கும் போது அவர்கள் அதன் அடியிலுள்ள "அம்புலி வண்டு" என்னும் சிறிய கப்பலில் இறங்கி, அதைத் தனியே கழற்றிக் கொண்டு சந்திரனில் மெல்ல இறங்கி, சிறிதுநேரம் சுற்றிப் பார்த்துவிட்டு, மீண்டும் "வண்டில்" ஏறிக் கிளம்பித் தாய்கப்பலுக்கு வந்து பூமிக்குத்திரும்புவார்கள்.

### "நாஸா" வின் சாதனைகள்

"நாஸா" வின் விண்வெளித் திட்டம் மக்கள்குல நன்மைக்கு எவ்வளவு தூரம் உதவியாக உள்ளது என்பதை பின்வரும் சாதனைகள் குறிப்பிடும்:

பூமியின் வடிவம், காந்தமண்டலங்கள், காஸ்மிக் கதிர்கள் பற்றி முதன்முதல் அமெரிக்க செயற்கைக் கோள்கள் தெரிவித்தன.

அமெரிக்காவின் முதல் செயற்கைக் கோள் எக்ஸ்புளோரர் — 1, பூமியைச் சுற்றி வளையம்போல் கதிரியக்க அடுப்பு இருப்பதைகண்டுபிடித்தது. வான் ஆலன் கதிரியக்க வளையம் என்பது இதுதான்.

"வான்கார்டு — 1" என்ற அமெரிக்க செயற்கைக்கோள் பூமியின் வடிவம் வால்பேரிக்காய் போன்றது என்று கண்டுபிடித்தது. வெயில் விசை மின்கலங்களைப் பயன்படுத்திய முதல் செயற்கைக்கோள் அது தான்.

பயனியர் — 1, சந்திரனை நோக்கி, 70,700 மைல் சென்றது. இயற்கைக்கோள்களுக்கு இடையிலுள்ள வெளியில் இருக்கும் காந்த மண்டலத்தைப்பற்றி அது தகவல் கொடுத்தது.

ஸ்கோசர்,எதிரொலி, கரியர், டெல்ஸ்டார் ஆகிய செயற்கைக் கோள்கள் பூமியில் செய்திப் போக்குவரத்தை மேம்படுத்த உதவியுள்ளன. செயற்கைக் கோள்கள் வழியாக செய்திப் போக்குவரத்து நடத்தும் திட்டத்துக்கு வழிவகுத்துள்ளன.

ரேடியோ, டெலிவிஷன் தகவல்களை அஞ்சல் செய்யும் "ரிலே" இம்மாதம் விண்ணில் செலுத்தப்படும். இவ்வாண்டில் ஸின்காம் கிளம்பும். இடைவிடாமல் செய்தியனுப்பப் பயன்படும் ஸின்காம்.

இதுவரை அனுப்பப்பட்டுள்ள ஆறு டைரோஸ் கோள்களும், வானிலையை முன்னறிவிக்கவும் பெரும்புயல்களை முனனரே கண்டுபிடிக்கவும் உதவியுள்ளன. டைரோஸ் திட்டம் முடிந்ததும் 1963 இறுதியில் நிம்பஸ்கோள்கள்வரும்; இவை உலகத்தை தென்வடலாகச் சுற்றி பூமி முழுவதற்குள் உரிய வானிலை தகவல்களை வழங்கும்.

மாரினர் — 2 இன்று சுக்கிரனை ஆராய்ச்சி செய்துள்ளது. இதைவிடச் சிறந்தொரு செயற்கைக்கோள் 1964-ல் செவ்வாயை ஆராயக்கிளம்பும்.

ரேஞ்சர் எனப் பெயர் கொண்ட செயற்கைக்கோள்கள் அம்புலியை ஆராய்வதாகும். 1961-ல் தொடங்கிய இத்

(5-ம் பக்கம் பார்க்க)

## மூடமானகுழந்தை...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

மில் ஒரு மூடவர் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். கதையில் வந்த மிட்டில் சிறுவனின் பெயர் தான் இப்பள்ளிக்கூடத்துக்கு வைக்கப்பட்டது. இன்று நெதர்லாண்ட்சில் இம்மாதிரியான பள்ளிக்கூடங்கள் பத்தொன்பது இருக்கின்றன. இவற்றைப் பெரும்பாலும் நகரசபைகளே நடத்துகின்றன. பள்ளிக்கூடத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்குத் தக்க உத்தியோகங்களையும் பெற்றுத்தருகிறது.

பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாத விடுமுறை நாட்களில் இக்குழந்தைகள் மகிழ்ச்சியோடு இருக்கவேண்டுமே? இதற்கும் ஸ்ரீமதி ஸ்பாக்லர் வழிசெய்தார். குழந்தைகள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டிருக்க கடிதம் எழுதுவது, டேப் ரிக்கார்டுகள் மூலம் தொடர்புவைத்துக் கொள்ளுதல் ஆகிய வகைகளையும் ஏற்படுத்தினர். ஸ்ரீமதி ஸ்பாக்லர் ஆரம்பித்த தொண்டு விரிவடைந்துகொண்டே வருகின்றது. இவரைப் போன்றவர்களின் தொண்டினுல் நெதர்லாண்ட்சிலுள்ள பல மூடமான குழந்தைகள் தங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்குமென்று நம்பிக்கைகொள்ள ஆரம்பித்துள்ளனர்.

அந்த ஒலியை முத்தனுல் சகித்துக் கொள்ள முடியவில்லை. தனது ஆற்றுமையையும், தனது சரக்கின் தரக்குறைவையும் எண்ணிய போது அந்த இடத்தில் அவனுல் இருக்க முடியவில்லை.

# தானம்

## சிறுகதை

ம. பிலிப் ஜேக்கப்

தலைப்பாகையைப் போல வரிந்து கட்டியநலமுண்டு துண்டைக் கூட முத்தன் இன்னும் அவிழ்க்கவில்லை. இடையில் சுற்றிய வேட்டி இடுப்பளவு கடல் நீருக்குள் இறங்கி ஏறிக் கொண்டதால் நீர்த்திவலைகளை சொட்டிக் கொண்டிருந்தன.

சூரியன் வான மத்தியில் நின்று உக்கிரமான கிரணக் கற்றைகளை உதிர்த்துக்கொண்டிருந்ததால் அவன் உடலிலும் அலைவப்பட்டன. அசனுறுத்த லினுல், உண்டாகியவியர்வைத் துளிகள் ஊதிப் புடைத்து விம்மி நடுவே கோடுகிழித்தது போன்று அமைந்துள்ள அவன் மேனி வழியே வழிந்து கடல் நீருடன் சங்கமித்துக் கொள்கின்றன.

கையில் பிடித்திருந்த தோணியை இலாவகமாக இழுத்துவந்து சிலும்பல் பொருந்திய கயிற்றைஎடுத்துப் பொருத்தி நங்கூரம் பாய்ச்சிக் கொண்டான். தோணிக்குள் கிடக்கும் மீன்களை வானத்தில் வட்டமிட்ட காக்கைகள் சுவர முனைந்து தலைகுத்தணத்தோணியில் விழுந்து பறந்தன. அவசர அவசரமாக அவன் தோணிக்குள் ஏறிக்கொண்டான். மீன்களில் ஒட்டியிருந்த பாசிகளை நீக்கி பறிக்குள் போட்டுக் கொண்டிருந்தான். ஏறு வெய்யிலில் வென்னீர் போல் கொதித்த கடல் மீது புகை போன்ற ஆவி பறந்தது. அந்த வேக்காட்டைப் பொருட்படுத்தாது கரையில் இருந்து ஒரு சிறுவன் தோணியை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

முத்தன் தன் கருமமே கண்ணாக, மீன்களை ஒவ்வொன்றாகப் பறிக்குள் போட்டுக்கொண்டிருந்தான். வழமையாக காலை ஏழுமணிக்கு முன்னதாகக் கரையேறும் அவன் நேரம் கடந்துவந்ததால் பிடித்த மீன்களை சரியான விலைக்கு விற்க முடியாதே என்ற கவலையில் நெஞ்சம் பொருமினன்.

அந்த வேளை ...

"முத்தண்ணே! ... ஒரு மீன் தாவேன்" என்ற ஒலி அவன் காதுகளைச் சாடியது. முத்தன் நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பார்வையில் உருத்திரமூர்த்தியின் நெற்றிக்கண்ணின் ஆவேசம் தொனித்தது. பறியைநிரப்பிக் கொண்டு ஒரு தடியை எடுத்து அதில் கொழுவித் தோளில் வைத்துக்கொண்டு கரையை நோக்கி நடந்தான். தரையை அடுத்துள்ள சாதாளைக்கும், சுரிக்கும் நடுவே தப் தப் என்று ஓசையை எழுப்பிக் கொண்டு அலைகளை எதிர்க்கத் திராணியற்று அதனோடு அள்ளுண்டுவரும் அரும்புபோல் கரையை அடைந்தான்.

எஸ்கிமோக்களின் கூடாரம் போன்றுநிலத்தோடு அமிழ்ந்து காணப்படும் தென்னங்கீற்றுக் கொட்டில்கள் சில. அவற்றின் அருகே கடலின் உப்பு காற்றைச் சதா சுவாசித்து சுவாசித்துப் பசுமை இழந்து பசந்த பூவரச மரங்களும் குழுமியிருந்தன. அந்த இடம் தான் மீன் தீர்க்கும் வாடியாக இருந்தது. கரைக்குவந்த முத்தன் ஆயாசத்தோடு நிமிர்ந்து பார்த்தான்.

காலம் அகாலமாகிவிட்டது. வழமையாக விழுந்தடித்துக் கொண்டு வருபவரில்லை.

அவன் சரக்கின் பெறுமதியை உதாசீனம் செய்கிருர்களா? ...

கடற்கரையில் காக்கைகளின் இரைச்சலைவிடச் சற்று அபரிமிதமாக இரையும் பெண்களின் ஓசைக்கு மட்டும் இன்னும் குறைச்சலில்லை.

குத்தகைக்காரர்களும்பேரம் பேசுகின்ற அத்தனை பேரும் போடுகின்ற இரைச்சல் ஒலியலைகளைப் பிரித்தறியமுடியாதநிலை. அங்கு மொழியின் மகத்துவத்துக்கு இடமில்லை. தோளில் தடியில் கொழுவியிருந்த பறியை கவிழ்த்துச் சுளகில் கொட்டினன்.

"என்ன மேரியக்கா உனகை சுறுக்கா கூறனனை உவன் கள்ளுக்கார சுணவதியல்லோ வித்துப்போட்டு போகப் போருன்" என்ருன் முத்தன்.

மேரியக்கா ஒரு கையால் மீன்களை ஒதுக்கியும் சிலவற்றை எடுத்துக் கடகத்துக்குள் திணித்துக் கொண்டபடி...

"என்ன நல்லாச் செண்டு போனு?"... என்று முத்தனை ஓரக் கண்ணுல் பார்த்துக் கேட்டுக் கொள்கிருள்.

"என்ன செய்கிறது உந்த நீரோட்டமும் சரியில்லை, காத்தும் கொண்டல் சரிவாய் போயிட்டு. இரா முழுவதும் ஒரே மாச்சல், உவன் கறுப்பன்ரை 'எஞ்சின்' படகில்லா விட்டால் இண்டைக்கு வந்த பாடே இல்லை. எல்லாம் அவன் படையாழியின் கருணை தான்" என்ருன் முத்தன்.

"இண்டைக்கு மீனுக்கு, விலையே இல்லை, இதென்ன உண்ட மீன் கீழியும், கிழாத்தியுமாய்க் கிடக்கு"

"ஒருமாதிரிய பார்த்துச் சுறுக்கா கூறன். இருட்டோட கடலுக்குப்போனநான் ஏதாவது தண்ணி வென்னியை வாயில்போட வேண்டாமா?... அப்பதான் நாளைக்கு வெள்ளாப்போடு எழும்பிப் போகலாம்" என்ருன முத்தன்.

சுளகிற் கிடந்த மீனையெல்லாம் ஒரு நோட்டம் விட்டுப் பார்த்துக்கொண்ட முத்தம்மா...

"என்னடி மேரி தூளும் துருத்தியுமாயிருக்கு!"...

"உதைக் கரைத்தாடி குடிக்கட்போறு" என்று ஏளனக் குரல் பகர்ந்து எட்டிப்போய் விட்டாள்.

அந்தக் கடற்கரையைச் சந்தையாக மாற்றியிருந்த கூட்டத்தில் சிலர் இடை, இடை வந்து எட்டிப்பார்த்துக் கொண்டனரே, தவிர கிட்ட நெருங்குவதைக் காணேம். சுளகில் கொட்டப்பட்டிருந்த மீன்கள் மிகச்சிறியனவாகவும் விடியற்காலையில் பிடிக்கப்பட்டதன் காரணமாக நொந்து இருந்ததே இதற்குக் காரணமோ, என்னவோ.

கடமையே கருத்தான மேரியக்கா மீன்களை ஒட்டிக் கிடந்த சாதாளைகளை பொறுக்கிக்கொண்டு "யார் இரண்டு ரூபாக்காறி;..." என்று விலை கூறத் தொடங்கினுள்.

முத்தன் தலையில் கட்டியிருந்த நலமுண்டுத்துண்டை உதறி, உடலில் வெயர்வையும் உப்புநீரும் கலந்து உண்டாகிய பொருக்கை அழுத்தித் துடைத்துக்கொண்டு, சுளகில் கொட்டிய மீனையாராவது வாங்குவதற்கு வருகிருர்களா என்று பார்த்துக்கொண்டான்.

அப்போது கரையில் நூறு யார் தொலைவில் இருந்து பாய் விரித்து ஓடிவந்த பாரிய படகு ஒன்று நிதானத்தோடு நின்று பாயைச் சுருட்டிக் கொண்டது.

கரையில் இருந்த பெண்கள் சிலர் இதைக்கண்டுவிட்டனர்.

"அடியே!... சந்தியோகுவின்ர படகு அந்தா வந்திட்டுது" என்று குரல் கொடுத்துக்கொண்டாள் ஒருத்தி. அதைக்கேட்டு விழித்துக் கொண்டவர்கள்போல் மீன் வாங்கவந்த வியாபாரிகளும், குத்தகையாய் அத்தனை மீனையும் கைரொக்கம் கொடுத்து வாங்கி கருவாடாக்கி இலாபம் காணும் மாட்டினும் உஷார் கொண்டு அந்தப் படகை வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டனர். கூறு கூருகவிருந்த மேரியக்காவின் மீனை இப்போது ஒருவருமே கவனிப்பதாகக் காணேம்.

கடந்த விடியற்காலை தொடங்கி முத்தன்பட்ட அவஸ்தைக்கெல்லாம் பலனற்றுப் போவதான சூழ்நிலை உருவாகியது.

நேரம் ஏற, ஏற அந்த மீனின் தன்மையே கெட்டுவிடுமல்லவா! ...

தன்னை இந்த உலகமே உதாசீனம், செய்வது போலவும் தனது சரக்கு வெறும் குப்பை என்பது போலவும் அனுக்குப்பட்டது.

மேரியக்காவின் கொட்டப் பெட்டியை வாங்கி அதனுள் கிடந்த சருகு வெற்றிலையையும் தறித்த கொட்டப்பாக்கையும் அதக்கிக்கொண்டான். வாயில் ஊறிய உமிழ்நீரை எட்டச் சென்று துப்பிக்கொண்டஅவன் அதன் சுவையில் தனது வேதனையை மறந்துவிட்டவன்போல் காணப்பட்டான் ...

இப்போது கடலில் வந்த படகு கரையடைந்து விட்டது. கூடிவந்த சனங்கள் எறும்பு போல் அதனைச் சூழ்ந்துகொண்டனர். எவரும் ... இனி இந்த மீனைத் திரும்பி பார்க்கமாட்டார்கள்.

அப்போது.

"முத்தண்ணை! ... ஒரு மீன் தாறியா? ..." இந்தக் குரல் ஆழ்ந்த கிணற்றிலிருந்துகேட்டது போல் வேதனையுடன் வெளிவருவதை அவன் கவனித்துக் கொண்டான்.

ஏற்கெனவே தோணியடிக்கு வந்து மீன் யாசித்த சிறுவன் அவன். மேரியக்காவும் அவனைப் பார்த்துக்கொண்டாள் ...

அவனுக்கு எதையாவுதல் கொடுத்துதவவேண்டும் என்று அவன் எண்ணினுலும் இந்த நிலையில் முத்தனின் மீனில் அவள் கைவைப்பதற்கே அஞ்சிக் கொண்டிருந்தாள் ...

பூவரச மரத்தில் அந்த நொந்த மீனையே குறிவைத்திருந்தது போல் ஒருகாகம் அம்பு போல் சரிந்து பாய்ந்து அதிலுள்ள சத்துத் துடிப்பானமீன் ஒன்றைக் கொத்திக்கொண்டு போய் மரத்தில் ஏறி சமத்காரமாக குந்திக்கொண்டது.

"சனியன் பிடிச்ச காகம் மனுசர் படுகிறபாடு தெரியல்லை" என்று திட்டிக்கொண்டு அதனைக் கலைத்துப் பறிக்க முயன்ருன். காகம் எட்டப் பறந்து விட்டது.

"முத்தண்ணை ..."

கிழவன் ஒருவனின் குரல் வெற்றிலையை அதக்கிக் கொண்டிருந்த முத்தனை மீண்டும் திரும்பத் தூண்டியது ...

"இதென்னடா, இது இழவு ..." என்று சொல்லிக் கொண்டே அவன் திரும்பிய போது பெரிய, பெரிய மீன்களைக் காவுதடியில் தூக்கியபடி சிலர் வந்துகொண்டிருந்தனர்.

"யார் ஐம்பதுருபாய்க் காறி. யார் அறுபது ரூபாய்க்காறி" என்று ஒருத்தி மீனைக் கூறத் தொடங்கினுள்.

அதற்கிடையில் யாரோ ஏற்றி விட்டார்கள் போலும். அப்போது "யார் எழுபதுருபாய்க்காறி" என்று பேரம் கூடிவிட்டது.

அப்போதும் விலையை ஒருத்தி கூட்டிக்கொள்ள ...

"யார் எண்பது ரூபாய் ..."

அந்த ஒலியை முத்தனுல் சகித்துக்கொள்ளமுடியவில்லை. தனது ஆற்றுமையையும், தனது சரக்கின் தரக்குறைவையும் எண்ணியபோது அந்த இடத்தில் அவனுல் இருக்கமுடியவில்லை. உள்ளத்தில் குமைச்சல் ...

"முத்தண்ணை. நான் வரட்டே ..."

முத்தனுக்குக்கிட்ட நெருங்கி வந்த கிழவன் வேண்டுகோளை கடைசி முறையாக இட்டுக்கொண்டான்.

திரும்பினன் முத்தன். இப்போது அவனுல் ஒன்றுமே செய்யமுடியவில்லை. நிர்விசாரமற்ற துறவியின் மனநிலை அவனையடுத்துவிட்டதா? ...

"மேரியக்கா உந்த மீனை வைச்சு என்ன செய்கிறது உந்தப் பொடியிட்டையும், கிழவனிட்டையும் கொடு" உன்னிட்ட காசிருந்தா ஒரு இரண்டு ரூபா தா! ... நாளைக்குப் பார்ப்பம்" என்று சொல்லிக்கொண்டான்.

மேரியக்கா தனது கொட்டப் பெட்டியிலிருந்து இரண்டு ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டினுள்.

கிழவனும், சிறுவனும் தம் கையிலிருந்த உமலை அவள்முன் விரித்துக் காட்டினர்கள். விற்பனைக்கு லாயக்கற்ற மீன்களை இருவருடைய உமலுள்ளும் அள்ளிப் போட்டாள் மேரியக்கா.

அவர்களின் சீவியத்தில் அந்த மாதிரி தானம் என்றைக்கும் கிடைக்கவில்லை.

ஆனுல் தானம் கொடுத்த முத்தன் முகத்தில் கப்பிக் கவிந்த வேதனை இருளுக்கு முடிவு எங்கே?

சூரியன் உக்கிரமான கதிர்கள் முகத்தில் பட்டுத்தெறிக்க மேற்குத் திசையை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

(யாவும் கற்பனை.)

---

உருவகக் கதை:

# காட்டுமிராண்டி ?

— மகம் —

எல்லையற்ற வானப் பெருவெளி. தேவலோகத்தின் ஒரு பகுதி.

பல்வேறு மனிதர்கள் கூடியிருக்கின்றனர். இனம், மொழி, மதம், தேசம் ஆகியவற்ருல் பேதப்பட்ட மனிதர் இங்கே கூடியிருக்கின்றனர். பலமொழிகள் பேசப்பட்டாலும், எல்லார்க்கும் எல்லாம் விளங்குகின்றது.

பூலோகத் தொடர்பையறுத்தாலும் பூலோகத்தைப் பற்றியே பேசிக் கொள்கின்றனர். பல பிரச்சினைகள் அடிபடுகின்றன. அந்த நேரத்தில் புதிதாக அங்கு ஒரு மனிதன் வந்துசேருகிருன்.

அவனைக் கண்டவுடன் பலர் முகத்தைச் சுளிக்கின்றனர். சிலர் எழுந்துபோகத் தயாராகின்றனர். புதிதாக வந்தவன் தானே தன்னை அறிமுகப்படுத்துகிருன்.

"நான் ஆபிரிக்கதேசக்காடுகளில் வாழும் ஆதிமனித இனத்தைச் சேர்ந்தவன்."

உட்காருகிருன்; கூட்டத்தில் இருந்த ஒருவரின் உள்ளத்திலே சந்தேகம் விதையூன்றுகிறது. மெல்ல மெல்ல அது வளர்ந்து, தொண்டைக்குழாயால் வெளிவந்து நாவிலே ஏறி கீழுதட்டை அசைக்கின்றது.

அவர் மனத்திலே உருவான சந்தேகம் வார்த்தைகளாக வெளிவருகின்றது.

"அப்படியானுல் நீங்கள் மனிதரைத் தின்னும் ஜாதியைச் சேர்ந்தவரா?"

கேள்வியே வாந்தியெடுப்பதற்கு அச்சாரம் கொடுக்கிறது. அனைவரது முகத்திலும் வெறுப்பு, அருவருப்பு, பயம் ஆகியன சேர்ந்த ஒரு புதுவிதக் கலவை பூசப்பட்டிருக்கிறது. பதிலை எதிர்பார்க்கின்றனர்.

நிசப்தம்.

"ஆமாம்" - பயங்கரத்துடன் எதிர்பார்க்கப்பட்ட பதில் வெளிவருகிது.

வெறுப்பால், அருவருப்பால், பயத்தினுல் கட்டப் பெற்ற அமைதி மேலெழுகிறது. அமைதிக்குப்பின் —

கேள்விப்பாணங்கள், கண்டன வேல்கள் அந்தப் புதுமனிதன் மேல் வீசப்படுகின்றன.

"உங்களுக்கு அது அருவருப்பாயில்லையா?"

"கடவுள் உங்களை மன்னிப்பாரா? காட்டுமிராண்டியான இந்த வழக்கத்தை விட்டாலென்ன?"

"நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே? மனிதரை மனிதர் உண்பதா, ஐயையோ!"

இப்படியாகப் பற்பல. அந்த மனிதன் குனிந்த தலை நிமிராமல், வேதனையும், கவலையும், வெட்கமும் முகத்திலே வர்ணம் காட்ட உட்கார்ந்திருக்கிருன். பிறகு சொற்களைச் சேர்த்துப் பதில் சொல்கிருன்.

"உண்மைதான்! வெட்கமான காரியந்தான். நாங்கள் வெள்ளை மனிதரைக் கண்டவுடன் ஏதோ புதுவிதப் பிராணியென்றே உண்ணுகின்றேம். அடுத்த ஜென்மத்திலே நான் மீண்டும் அதே இனத்திலே பிறந்து எங்கள் இனத்தைச் சீர்திருத்த வேண்டுமென ஆசைப்படுகின்றேன்."

பதிலில் வேகம் இல்லை. ஆனுல் அழுத்தம் இருக்கின்றது. 'சலசல' வென ஒலித்துக் கொண்டு நெளிந்து, வளைந்து ஓடும் சிற்றருவியாக அது இருக்கவில்லை. ஆனுல் சமுத்திரத்தின் ஆழமான பகுதி மெதுவாக அழுத்தலாக அலையெழுப்புமே அதேபோல் ஒலித்தது பதில்.

இந்தக் காட்டுமிராண்டியின் விஷயம் தீருகின்றது. வேறு பல பிரச்சினைகளும் பேசப்படுகின்றன.

இருந்தாற்போல ஒரு விஷயத்தில் வாதம், எதிர்வாதம், குறுக்குக்கேள்வி, நையாண்டி, குத்தல், குதர்க்கம் ஆகியன தலைதூக்குகின்றன.

அமைதியான வானவெளியில் ஆரவாரம் கேட்கிறது.

* *

வாக்குவாதம் வளர்கிறது. தென்றலாய் உலாவிய சொற்கள் காற்ருக வீசிகின்றன. காற்றுப் பெருங்காற்ருகின்றது.

(9ம் பக்கம் பார்க்க)

# ஈழத்துச் சிறுகதைகள் பத்திரிகைகளின் பணி

— சு. வே. —

சமீபத்தில் 'கலைச் செல்வி' ஏற்படுத்திய சிறுகதை உரைக்கோவையில் நிகழ்த்தப் பெற்ற உரையே இங்கு கட்டுரையாக அமைந்துள்ளது.

(சென்றவாரத் தொடர்ச்சி)

### மணிக்கொடி

மணிக்கொடி அற்ப ஆயுசுடன் முடிந்துவிட்டாலும், அது வாழ்ந்த காலத்தில், தமிழ்ச் சிறுகதையுலகில் யாவரும் புரட்சியை செய்துவிட்டது. மணிக்கொடி தோற்றுவித்த, கு. ப. ரா. புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி, க. சிதம்பரசுப்பிரமணியன், பி. எஸ். இராமையா, சி. சு. செல்லப்பா போன்றவர்களே, இன்றும் இத்துறையில் முதுபெரும் எழுத்தாளர்களாக மதிக்கப்படுகின்றனர். இந்தக் காலத்தை மணிக்கொடி யுகம் என்று கூறினும் மிகையாகாது. அக்காலக் கதைகளில் கருப்பொருளும் உரிப்பொருளும் கதை நடத்தும் உத்திகளும் உருவ அமைப்பும் எல்லாம் ஒரு பூரணத்துவ நிலையடைந்தன. அவை என்று தொட்டோ வழங்கிவந்த கதைத் துறையில், மனங்கவரத்தக்க வகையில் புதுமை விளைத்தது மாத்திரமன்றி, இலக்கிய அந்தஸ்தும்பெறும் தன்மையையும் உண்டாக்கின. இந்தப் புதுமையான இலக்கிய அலை, ஈழத்தையும் தொட்டு, அக்காலத்தில் இளைஞராய், ஆர்வமுடையவராய், தமிழ்ப் பற்றோடு புதுமை விளையும் மனப்பாங்கு கொண்டவர்களாய் விளங்கிய சிலரின் உள்ளத்தைத் தாக்கியது. அந்தத் தாக்கத்தின் விளைவாக மலர்ச்சி பெற்று, சிறுகதை எழுதியவர்கள் குறிப்பாக, சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன், சேர். சிவபாதசுந்தரம் ஆகியோராவர். அவர்களைப் பெரிதும் ஊக்கிவளர்த்துவிட்ட பெருமை கலைமகளைச் சாரும். அவர்கள் தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளில் இடம்பெற்றார்களென்றால், அதற்குக் காரணம் அவர்களது கதைகள் மணிக்கொடி பரம்பரையினரின் கதைகளுக்கு ஈடுநிற்கக்கூடிய தரமுடையனவாய் விளங்கியமை மாத்திரமன்றி, அவர்கள் கதைப்பொருளும் உரிப்பொருளும் இருநாட்டினர்க்கும் ஏற்புடைத்தாய் இருந்தமையேயாம். இந்நாள் வரையுமே ஈழத்துச் சிறுகதை வரலாற்றின் முன்னோடிகள் என்று குறிப்பிடவேண்டும்.

இருபத்தேழு ஆண்டுகளாக பழமைக்கும் புதுமைக்கும் மாத்திரமன்றி, ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இணைப்புப் பாலமாக விளங்கிய ஈழகேசரிக் காலத்தை அடுத்ததாகக் கூறிப்பிடலாம். ஈழகேசரி பழமையிற் காலூன்றி நின்று, இலக்கியப் புதுத்துறையான சிறுகதைகளுக்குப் பேராதரவு தந்தது பெருமைப்படற்குரிய விஷயமே. அது தேசியப் பண்புகளையே உயிர்மூச்சாக்கி இயங்கி வந்த ஒரு வாரஇதழ் என்பதைப் பலர் மறந்துவிடுவது ஆச்சரியமன்று; அது வெளியிட்ட கதைகளில் பெரும்பாலான, தேசிய மணம், யதார்த்தம், முற்போக்கு என்றெல்லாம் இன்று பெரிதுபடுத்திப் பேசப்படுவன வெல்லாம் கமழ்ந்தன என்பதைச் சிறுகதை பற்றிப் பேசும் பலர் மறந்துவிடுவது தான் ஆச்சரியம். அந்த ஈழகேசரிப் பண்ணை காலத்துக்குக் காலம் வளர்த்துவிட்ட எழுத்தாளர்கள் பலர். அந்தப் பலரில் சிலரை, ஒரு சிலர் கட்சி ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் வேறு ஏதோ காரணங்களைக்கொண்டும் வெவ்வேறு குழுக்களிற் சேர்த்துவிட்டபோதிலும் அந்தப் பலரே இன்று ஈழத்து எழுத்தாளர்களுள் பிரகாசிப்பவர்கள். அவர்கள் பெயர்ப்பட்டியல் நீளுமாயினும் குறிப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. சுபா, வரதர், அ. செ. முருகானந்தன், கனக. செந்திநாதன், ஆனந்தன், சு.வே., அ. ந. கந்தசாமி, சொக்கன், வ. அ. இராசரத்தினம், கசின், தேவன், கே. டானியல், எஸ். பொன்னுத்துரை, இ. நாகராசன், என். கே. ரகுநாதன் ஆகியோர் அந்தப் பலரிற் சிலர். இதனை இந்த இவர்களே ஒப்புக்கொள்ளக் கூசினும், ஈழகேசரி ஏடுகளே பதில் கூறுகின்றன. இவர்கள் அனைவரையும் வளர்ப்பதற்கு உறுதுணையாக ஈழகேசரியின் ஆசிரியபீடத்தை அலங்கரித்தவர்களும் எழுத்தாளர்களுமான, நா. பொன்னையா, சோ. சிவபாதசுந்தரம், இராஜ அரியரத்தினம் ஆகியோர் என்றும் போற்றுதற்குரியவர்கள்.

### புதிய உற்சாகம்

ஈழகேசரிக் காலத்திலேயே இலக்கிய இரசிகரிடையேயும் எழுத்தாளரிடையேயும் புதியதோர் உற்சாகத்தையும் சலசலப்பையும் ஏற்படுத்தின. கிராம ஊழியன், கலாமோகினி என்னுஞ் சஞ்சிகைகள். மணிக்கொடிப் பரம்பரையினர் அவற்றிற் பங்கு கொண்டு, புதிய புதிய இலக்கிய முயற்சிகள், சோதனைகள் என்பன மூலம் இலக்கிய வேகத்தை உண்டாக்கினர். அந்த வேகம் ஈழத்திலும் பரவி, ஈழகேசரிப் பண்ணையிலே முளைவிட்ட பல இளைஞரைக் கவர்ந்தது கிராம ஊழியனோடு பெருமளவிலே தொடர்புகொண்ட அந்த இளைஞர்கள், இலக்கிய தாகங் கொண்டு தவித்த இளைஞர்கள், கன்னுதிட்டியிலுள்ள குப்புசாமி ஆசாரி வீட்டு விருந்தையிலே கிழமைக் கொருமுறை கூடி, 'மறுமலர்ச்சிச் சங்கம்' என்ற ஒன்றைத் தாபித்து, இலக்கிய சர்ச்சைகள் புரியலாயினர். இவைகளாலும் தாகந் தணியாத அவர்கள் மனதில் உதித்த ஆக்க முயற்சி தான் 'மறுமலர்ச்சி' என்னும் மாசிகை. சலனமற்றது போலவும் தேக்கம் நிறைந்தது போலவும் காணப்பட்ட அன்றைய ஈழத்து இலக்கிய உலகிலே, புதியதொரு பரபரப்பை அது ஏற்படுத்தியது. இளைஞரது புதிய சிந்தனைப் போக்குகளும் கருத்துக்களும் அதில் இடம்பெற்றன. அதனுடைய ஆட்சிக்காலத்தோடு அதன் செயல்களையும் சேர்த்து எண்ணும்போது, அதன் சாதனைகள் மிக மகத்தானவை என்றே கூறலாம். அது, இராஜநாயகன், கு. பெரியதம்பி போன்ற புதிய எழுத்தாளர்களைத் தோற்றுவித்தது மாத்திரமன்றி, அந்த மறுமலர்ச்சி வட்டத்தினரை நாடறிந்த எழுத்தாளராக்கியது. அதனாசிரியராக விளங்கிய வரதர், அ. செ. முருகானந்தன், கனக. செந்திநாதன், அ. ந. கந்தசாமி, சு. வே. என்பவர்கள் சிறுகதைத் துறையில் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த மறுமலர்ச்சிக் காலத்தைத் தமிழக மணிக்கொடிக் காலத்தோடு ஒப்பிட்டுக் காண்பவர்களும் உண்டு.

மறுமலர்ச்சியின் முடிவு தொட்டு, சுதந்திரன் என்னும் தமிழரசுக் கட்சிப் பத்திரிகையின் உதயம் வரையும் ஈழத்துச் சிறுகதையுலகிலே ஒரு தேக்க நிலையையே காணமுடிந்தது. சுதந்திரன் ஒரு கட்சிப் பத்திரிகையேயாயினும், சிறுகதைத்துறையைப் பொறுத்தமட்டில், தரமான பல சிறுகதைகளைப் பிரசுரித்து ஒரு எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கியது. இக்காலச் சிறுகதைகளில் அரசியல் ரீதியாகத் தமிழரிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சியால், இன, மொழி, நாகரிகப் பற்றுக்களின் சாயல் விழுந்திருப்பதைக் காணமுடிகிறது. சிறுகதைத் துறையில் அது புரிந்த சேவையை அரசியல் ரீதியான கட்சிக் கண்கொண்டு நோக்குவோர் ஒப்புக்கொள்ளாராயினும் ஈழத்துச் சிறுகதை வரலாற்றைக் கருதுவோர் அலட்சியம் செய்வது நியாயமாகாது. நவம், சிற்பி, டொமினிக் ஜீவா, பவானி, தீவான், நாவேந்தன், புதுமைலோலன், புதுமைப் பிரியை, உதயணன், பித்தன், மு. தளையசிங்கம், இளம்பூரணன், ஈழத்துச் சோமு, செ. கணேசலிங்கம், பொ. தம்பிராசன் போன்ற பலரை அது உருவாக்கியது.

### பரிசோதனை

ஈழத்துச் சிறுகதைத்துறை வரலாற்றைப் பத்திரிகைகளின் கால அடிப்படையிற் காணும்போது, கடந்த சில ஆண்டுகளாக, தரமான சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் கலைச்செல்வியைக் குறிப்பிடவேண்டும். மகாதுணிச்சற்காரரான அதன் ஆசிரியர், புதிய இளம் எழுத்தாளர்களுக்கு நிறையச் சந்தர்ப்பம் கொடுத்து, பரிசோதனை செய்தார். அப்பரிசோதனையால் வியக்கத்தக்க நற்பலன் கிடைத்தது. ஒரு இளம் எழுத்தாளர் பரம்பரையே தோன்றியது. கலைச்செல்வி உருவாக்கிய எழுத்தாளர்களிற் பலர், தேர்ந்த சிறுகதை எழுத்தாளரோடு போட்டி போடக்கூடிய அளவுக்கு, தரமான பல சிறுகதைகளை எழுதினர். அவர்களுட் சிலர் பல்கலைக் கழகத்து மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. துருவன், செ. யோகநாதன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் ஆகிய பல்கலைக் கழக மாணவர்களும் மணிவாணன், நீர்வை பொன்னையன் ஆகியோரும், கலைச்செல்வி சிறுகதைப் போட்டி மூலம் அறிமுகமானவர்களான பெனடிக்ற் பாலன், எம். எம். மக்கீன் போன்றவர்களும் கலைச் செல்விப் பண்ணையைச் சார்ந்தவர்களே.

தமிழ்த் தினசரிச் செய்தி இதழ்களாகிய வீரகேசரியும் தினகரனும் சமீபகாலம் வரை ஈழத்துச் சிறுகதைத்துறைக்கு குறிப்பிடத்தக்க அளவு சேவை செய்தனவாகக் கூறமுடியாது. ஆயின் கடந்த சில ஆண்டுகளாக, அவை ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளைப் பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றன; சன்மானமும் வழங்குகின்றன. தினகரன் ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஊக்கம் தருவதிலும் போட்டிகள் மூலம் நல்ல எழுத்தாளர்களை உருவாக்குவதிலும் ஆர்வம் காட்டுகிறது. தினகரன் மூலம் அ. முத்துலிங்கம், ஆ. பொன்னுத்துரை, பா. பாலேஸ்வரி, காவலூர் இராசதுரை, க. சா. அரியநாயகம், அப்துஸ் ஸமது, நந்தி, அகஸ்தியர் போன்ற பலர் தோன்றினர். தங்கன் போன்ற சிலரை வீரகேசரி உருவாக்கிற்று.

### கட்சித் தத்துவம்

ஈழத்துத் தோன்றிய பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் மையமாகக் கொண்டு, ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியைக் கணிக்கும்போது அவற்றுளடங்காத முக்கிய இரு குழுக்களைப் புறக்கணிக்கமுடியாது. பொதுவுடமைவாதிகளாய், அக்கட்சித் தத்துவங்களுக்கு அமைவுடைத்தாக, சமூகப் பிரச்சினைகள், வர்க்கப் போராட்டம் போன்றவற்றை வைத்துச் சிறுகதைகள் எழுதிய குழுவில் முக்கியமானவர் எச். எம். பி. முகைதீன் ஆவர். பின்னர் எழுத்தாளரிற் பலர் இவ்வணியிற்சேர்ந்து, கம்யூனிஸ தத்துவத்துக்கமைந்த கதைகளே முற்போக்குக் கதைகளென்றும் அவற்றை எழுதுபவர்களே' முற்போக்கு எழுத்தாளரென்றும் தம்மைப் பிரித்துக்கொண்டனர்.

அடுத்து சமீபகாலமாக இலங்கைப் பல்கலைக் கழகம் சிறுகதைத் துறைக்கு ஆற்றிவரும் தொண்டும் கவனிக்கத்தக்கது. இதற்குத் தாய்மொழிப் போதனையால் விளைந்த தெளிவான சிந்தனையும் புதுவகை இலக்கியத்துறையில் ஆர்வம் கொண்ட இளைஞர்களான விரிவுரையாளர்கள் காட்டிய ஊக்கமுமே முக்கிய காரணங்களாகும். 'கதைப் பூங்கா' என்னும் சிறுகதைத் தொகுதி வெளியிடும் அளவுக்கு அவர்கள் வளர்ந்திருக்கிறார்கள். முன்னர் கலைச்செல்விப் பண்ணையில் குறிப்பிட்ட பல்கலைக் கழக மாணவர்களோடு, செ. கதிர்காமநாதனையும் இக்குழுவிற் குறிப்பிடமுடியும். (தொடரும்)

---

## மலர்க் கொத்து

— தாஸ் —

1857-ம் ஆண்டு, சிப்பாய்கள் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்தபோது, ஒரு இந்து மத துறவியை ஆங்கிலப்படை வீரன் ஒருவன் குத்திவிட்டான். அந்த ஆங்கிலேயனை இந்திய சிப்பாய் ஒருவன் பிடித்துக் குற்றுயிராய்க் கிடந்த துறவியின் காலடியில் தள்ளிக்கொல்ல முயன்றபோது, அவனைத் தடுத்த அந்தத் துறவி, 'நீயும் அவனே' என்று புன்னகையுடன் சொல்லிக்கொண்டே உயிர் துறந்தார்.

⁂

சேலம் ஸ்ரீ. டி. ஆதிநாராயண செட்டியார் தமது இல்லத்தில் மகாத்மா காந்தியை வரவேற்று உபசரிக்கும்பொழுது, வயதுமுதிர்ந்திருந்த நிலையில் தமக்குப் பிறந்திருந்த அருமைக் குழந்தையைக் கொண்டுவந்து காட்டினர். காந்திஜி குழந்தையைத் தம் கைகளில் எடுத்துக்கொண்டார்; ஏதோ நிறைபோடுவதுபோல் தூக்கிப் பார்த்தார். பிறகு செட்டியாரை நோக்கி, "நீங்கள் எனக்கு இதே நிறையுள்ள கதர் நூல் கொடுத்திருந்தால் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்பேன்" என்றார்!

⁂

"சிற்றின்பம் என்பது மனிதர் தம் வாழ்க்கைக்கு அவசியமான ஒருதேவை என்று கருதுவது பெரிய தவறு"

—காந்தியடிகள்.

⁂

பெல்ஜியன் காங்கோவைச் சேர்ந்த ஒரு பிரதேசத்திலுள்ள பழங்குடிகளின் தலைவன் ஒருவனுடைய சமாதியைச் சுற்றி அவன் உயிருடன் இருந்தபோது குடித்துக் காலிசெய்த மதுப்புட்டிகள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன!

⁂

பகட்டாக உடையணிந்த பெண்ணொருத்தி பெர்னட்ஷாவிடம் வந்து தன்னை அறிமுகம் செய்துகொண்டாள். பின், "மிஸ்டர் ஷா, எனக்கு வயது என்ன என்று நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

பெர்னட்ஷா, வழக்கமான தன் புன்னகைச் சிந்திய வண்ணம், "உங்கள் பற்களைப் பார்க்கும்போது வயது பதினெட்டு இருக்குமென்று தோன்றுகிறது" என்றார். அந்தப் பெண்ணும் புன்முறுவலித்தாள. ஷா தொடர்ந்தார்:

"உங்கள் கூந்தலைக் காணும்பொழுது கிட்டத்தட்ட பதினொன்கு வயது என்று நிர்ணயிக்கலாம்" என்றார். பெண்ணின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"உங்கள் பேச்சின் இனிமையை வைத்துக்கொண்டு கணித்தால் பதினொன்றுக்குமேல் போகமுடியாது என்று தோன்றுகிறது!... ஆனால் ஒன்று, இப்பொழுது நான் குறிப்பிட்ட வயது முழுவதையும் கூட்டிப் பார்த்தால் எத்தனை வயது வருமோ அதுதான் உங்கள் உண்மையான வயது என்று நினைக்கிறேன்!" என்று ஒரு போடு போட்டார் ஷா.

⁂

"நமக்குப் பாரமாக இருப்பவர்களை நாம் மன்னித்துவிடலாம்; நாம் பிறருக்குப் பாரமாக இருப்பது மன்னிக்க முடியாத குற்றம்!"

—பெர்னட்ஷா.

⁂

ஆங்கில எழுத்துலகில் புகழுடன் துலங்கும் ஈழத்தின் பிரபல எழுத்தாளரான திரு அழகு. சுப்பிரமணியம் எழுதிய 'சிங்கப்பூர் பென்ஷனியர்' என்ற சிறுகதை 14 மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. இவர் பாரிஸ் நகரில் இருந்தபோது இந்தக் கதையை எழுதினர். ஒரு பாரிஸ்டரான இவர் இப்போது யாழ்ப்பாணத்திலுள்ள உடுப்பிட்டி என்ற கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்.

⁂

"இவர்களில் சிலருக்கு என்னைத் தெரியாது; ஆனால் அவர்களை எனக்குத் தெரியும். உதாரணமாக முதன் மந்திரி பால்ட்வின், சர்வாதிகாரி ஹிட்லர், முஸோலினி, ஸ்டாலின் முதலியோர்களை நான் நன்கு அறிவேன். அவர்களுக்குச் சில சமயம் எச்சரிக்கை விடுத்திருக்கிறேன்; சவுக்கடி கொடுத்திருக்கிறேன்; சிண்டைப்பிடித்தும் குலுக்கியிருக்கிறேன். அப்படியும் அவர்களுக்கு என்னைத் தெரியவில்லை என்றால் அது என்னுடைய குற்றமன்று"

—பேராசிரியர் கல்கி.

---

### இயந்திர மூளையின் பணி

விமானத்தில் பிரயாணம் செய்ய இடம் கிடைக்குமா? இல்லையெனில் புறப்படும் எந்த விமானத்தில் இடம் கிடைக்கும் என்பது 5 விநாடிக்குள் அறிவிக்கப்பட்டுவிடும். இப்பணியை ஒரு எலெக்ட்ரானிக் இயந்திரம் செய்யும். இந்த இயந்திர மூளை சாதனம் தென்ஜெர்மனியிலுள்ள அப்தான்ஸா தொழிற்சாலையில் இப்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

# ★ கலை ★ அரங்கம் ★



## அச்சக அதிபர் ராதா 'நெருப்பு' பத்திரிகாசிரியர்

எம். ஆர். ராதா சொந்தத்தில் ஒரு அச்சகத்தைத் தொடங்கி ஒரு பத்திரிகையையும் பிரசுரிக்கிறார். 'ராதாவுக்குத் திடீரென்று ஏன் இப்படி ஒரு ஆசை?' என்ற ஐயப்பாடு வேண்டாம். ஸ்ரீ கஜலட்சுமி பிக்சர்ஸின் "எங்கிருந்தாலும் வாழ்க" என்ற படத்தில் தான் அவர் அச்சக முதலாளியாகவும், பத்திரிகாசிரியராகவும் நடிக்கிறார்.

'பையா' என்று அவர் கூச்சல் போட்டதும் 'எஸ் ஸார்' என்று வந்துநிற்கிறார் நாகேஷ். 'போய் 'நெருப்பு கொண்டு வா மேன்' என ஆபீஸ் பாயாக நடிக்கும் நாகேஷுக்கு உத்தரவு போடுகிறார்.

திரும்பி வந்த நாகேஷின் கையிலிருந்த பொருளைக் கண்டு முதலாளியின் உதவியாளரும் மருமகனுமாகிய முத்துராமன் விழுந்து விழுந்து சிரிக்கிறார். 'என்ன மேன் நீ, 'நெருப்பு' பத்திரிகை கொண்டுவரச் சொன்னால் நீ நெருப்பையே கொண்டு வந்திருக்கே' என முதலாளி ராதா சீறுகிறார்.

இக்காட்சியும் அச்சகம் சம்பந்தப்பட்ட வேறுபல காட்சிகளும் மெஜஸ்டிக ஸ்டுடியோவில் கடந்த வாரம் படமாயின. அய்யாப்பிள்ளை வசனம் எழுதியுள்ள இப்படத்தை ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்கிறார்.

## எல்லைத் தகராறு பற்றி செய்திப்படம்

### டில்லி ஒரு வாரத்தில் திரையிடும்

இந்தியா-சீன எல்லைத் தகராறு பற்றிய உண்மை விபரங்களைக் காட்டும் டாக்குமெண்டரிப் படம் ஒன்றை இந்திய சர்க்கார் ஒரு வார காலத்தில் வெளியிடப் போகிறார்கள். ஒப்பந்தங்களின் பிரகாரம் இரு நாடுகளுக்குமிடை வரையறுக்கப்பட்டு வழக்கத்திலிருந்து வந்துள்ள எல்லை, கம் கம்யூனிஸ்ட் சீனர் தமது சட்ட விரோதமான கோரிக்கைக்கு ஆதரவாகச் சொல்லும் ஆதிக்க நிலைக்கோடுகள் பற்றிய விவரங்களையெல்லாம் இந்த டாக்கு மெண்டரி படத்தில் காணலாம். வெளிவிவகார இலாகா சொற்படி இந்தப் படம் தயாராகிறது.

டிசம்பர் மாதக் கடைசி வரை அவசர நிலைமை குறித்து இந்திய சர்க்கார் பிலிம்ஸ் டிவிஷன் 18 டாக்கு மெண்டரிகள் தயாரித்துள்ளது. இதைத் தவிர தனிப்பட்ட புரொட்யூஸர்கள் தேசமக்கள் உறுதியைப் பிரதிபலிக்கும் 6 துண்டுப் படங்கள் தயாரித்து சர்க்காருக்கு வழங்கியிருக்கிறார்கள். சென்னையில் மற்றிரண்டு படங்கள் தயாரித்து திரையிடப்பட்டுள்ளன. அடுத்த 2 மாதங்களில் மேலும் 20 டாக்குமெண்டரிகளைத் தயாரித்து வெளியிடப் பிலிம்ஸ் டிவிஷன் உத்தேசித்திருக்கிறது.

சென்னை, கல்கத்தா படத் தொழில்கள் இரண்டு முழு நீளப் படங்களெடுக்க இந்திய சர்க்கார் அனுமதியளித்திருப்பதாகத் தெரிகிறது. இப்படங்களுக்கு ராணுவ மந்திராலய உதவியுடன் முன்னணிக் காட்சிகள் படமெடுக்கப்படும். இதைத்தவிர சென்னையிலும், பம்பாயிலும் உள்ள தனிப்பட்ட புரொட்யூஸர்கள் அவசர நிலைமை பற்றி தனியாகவும் முழு நீளப்படங்கள் தயாரிக்கப் போகிறார்கள்.

## லாரி டிரைவராக ஆனந்தன்

### கௌஸல்யாவின் முயற்சி

"நீயா-நானா" வைத்திரையிட்ட கௌசல்யா புரொடக்ஷன்ஸார் தங்களது அடுத்த தயாரிப்பின் படப்பிடிப்பை கோல்டன் ஸ்ருடியோவில் தொடங்கிவிட்டனர். "லாரி டிரைவர்" என்ற அப்படத்தின் கதாநாயகன் லாரி டிரைவராக ஆனந்தன் நடிக்கிறார். இப்படத்தின் கதை-வசனத்தை பூவை கிருஷ்ணன் எனபவர் எழுத, ஜி. விஸ்வநாதன் டைரக்ட் செய்கிறார். ஆனந்தன், ஷீலா, நாகேஷ், மனோரமா நடிக்கும் காட்சிகள் சில படமாக்கப்பட்டன. இவர்கள் தவிர அசோகனும் மனோகரும் இப்படத்தில் நடிக்கவென ஒப்பந்தமாகியுள்ளனர்.

கௌசல்யா புரொடக்ஷன்ஸின் இந்தத் துரிதத் தயாரிப்பு, கோல்டன் ஸ்ருடியோவில் தொடர்ந்து படமாகி வருகிறது.

## புது முகத்தின் புதிய அனுபவம்

"பாசம்" புகழ் ஷீலா முதன் முதலில் காமிராவின் முன்பாக நின்றபோது பயந்தே போய்விட்டார். அவருக்குக் கால், கைகள், நடுங்கததொடங்கிவிட்டனவாம்.

புரட்சி நடிகரும் இயக்குநர் இராமண்ணாவும், ஊக்கமளித்த பிறகே அவருக்குத் துணிவு ஏற்பட்டது.

அப்போது ஒளிப்பதிவாளர் "லைட் மீட்டரை" அருகில் கொண்டுவந்தபோது ஷீலா என்ன நினைத்தார் தெரியுமா?

தனக்குச் சாப்பிடுவதற்காக அவர் ஏதோ கொண்டுவருகிறார் என்று ஷீலா எண்ணினாராம். ஆனால் இப்பொழுது ஷீலா அப்படியில்லை. ஏறத்தாழ 10 படங்களில் அவர் நடித்துவருகிறார்.

## 'காற்றினிலே வரும் கீதம்'

'எலிகண்ட் ஆர்ட்ஸ்' என்ற பெயரில் புதுப் படத்தயாரிப்புக் கம்பெனியொன்று ஆரம்பமாகியுள்ளது. இவர்கள் எஸ். சுப்ரமணியம் என்பவர் எழுதியுள்ள 'காற்றினிலே வரும் கீதம்' என்ற கதையைப் படமாக்கப்போகிறார்கள். ராஜரத்தினம் டைரக்ஷனில் தயாராக இருக்கும் இப்படத்தில் முற்றிலும புதுமுகங்களே நடிப்பார்களெனத் தெரிகிறது.

## தாயின்மேல் ஆணை

சரித்திரக் கதையான 'காஞ்சித் தலைவனை'த் தயாரித்து வரும் மேகலா பிக்சர்ஸ் கூடவே 'தாயின்மேல் ஆணை' சமூகக் கதையையும் படமாக்கப்போகிறார்கள் இதன் கதை வசனத்தை மு. கருணாநிதி எழுதுகிறார்.

## 'வழி பிறந்தது'

அருணாசலம் பிக்சர்ஸ் உரிமையாளர் ஏ. கே. வேலன் 'வழி பிறந்தது' என்ற கதையைப் படமாக்க இருக்கிறார். கதை வசனத்தை எழுதி டைரக்ஷனையும் ஏ. கே. வேலனே கவனிப்பார். பொங்கலன்று தொடங்கப்பெறவிருக்கும் இப்படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர். ராதா ஆகியோர் முக்கிய பாகங்களில் நடிக்கக்கூடுமெனத் தெரிகிறது.

## பெப்ரவரியில் 'காட்டுரோஜா'

திருமணத்திற்குப் பின் பத்மினி நடிக்கும் 'காட்டு ரோஜா' அடுத்த மாதம் திரைக்கு வரவிருக்கிறது. மாடர்ன் தியேட்டர்ஸின் இந்தத் தயாரிப்பில் பத்மினியுடன் எஸ். எஸ். ராஜேந்திரன், எம். ஆர். ராதா, கே. ஏ. தங்கவேலு, மனோகர் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கும் இப்படத்தின் டைரக்ஷனை சுப்பாராவும், இசையமைப்பை கே. வி. மகாதேவனும் கவனிக்கின்றனர்.

## ஹிந்திப் படத்தில் தேவிகா!

'பத்மினி பிக்சர்ஸ்' அடுத்து கலர்ப் படமொன்றைக் ஹிந்தியில்தயாரிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். அப்படத்தில் பிரதம கதாநாயகி பாகத்தில் நடிக்க தேவிகாவை ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளனர்.

## 1962-ல் அதிக முயற்சியில் முதலிடம்

தயாரிப்பாளர்களில் முதல்வர் ஏவிஎம். மொத்தம் 7 படங்கள் (தமிழ் 3, தெலுங்கு 2, ஹிந்தி 2,)

திரையிடப்பட்டுள்ள படங்களில் 6 படங்களை டைரக்ட் செய்த பெருமைபெற்ற டைரக்டர் பீம்சிங்.

32 படங்களுக்கு பாடல்கள் அமைத்து அபார சாதனை நிகழ்த்தியவர் கவிஞர் கண்ணதாசன்.

அதிகம் படங்கள் எழுதிய வசன கர்த்தா ஆரூர்தாஸ். மொத்தம் 7 படங்கள்.

45 நேரடித் தயாரிப்புகளில் 24 படங்களில் நடித்துள்ளவர் எம். ஆர். ராதா

சென்ற ஆண்டு முதல் நடிகை தேவிகா. தமிழிலே 9 படங்கள். தெலுங்கிலே 6 படங்கள்.

## தேரோட்டி மகன் கர்ணன்

### பத்மினி பிக்சர்ஸ் ஈஸ்ட்மென் கலர்ப் படம்

சேவா ஸ்டேஜ் 'தேரோட்டி மகனை'த் தழுவி 'தேரோட்டி மகன் கர்ணன்' என்ற தலைப்பில் ஈஸ்ட்மென் கலரில் ஒரு படத்தைத் தயாரிக்க பத்மினி பிக்சர்ஸ் அதிபர் பி. ஆர். பந்துலு திட்டமிட்டு வருகிறார். இதில் சிவாஜி கணேசன் கர்ணனாக நடிப்பார்.

## 'இத்தனை நாள் என்னசெய்தாய்..?' பாட்டிலே கேள்வி

### சீர்காழியின் கச்சேரியில் நகைச்சுவையான நிகழ்ச்சி!

அண்மையில் மலேயா சுற்றுப்பயணம் செய்த சீர்காழி கோவிந்தராஜன் முதல் கச்சேரியில் சுவையான நிகழ்ச்சியொன்று நடைபெற்றது.

இங்கிருந்து சீர்காழி தன் குழுவினருடன் விமானத்தில் புறப்பட்டுச் சென்றார். ஆனால் 'கட' வித்துவான் மாத்திரம் கப்பலில் வந்தார்.

முதல் கச்சேரிக்குள் அவர் வந்து சேர்ந்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் குறித்த காலத்தில் அவர் வந்துசேர இயலாததால் 'கடம்' இல்லாமலேயே முதல் கச்சேரி துவங்கியது.

கச்சேரி துவங்கிய சிறிது நேரத்தில் பானையும் கையுமாக அங்குவந்து சேர்ந்த கட வித்துவான் மேடையின் பக்க வாட்டில் நின்றுகொண்டு கை சைகை மூலமாக வந்து கலந்துகொள்ளட்டுமா என்று கேட்டார்.

பாடிக்கொண்டிருக்கும் போது ஏன் வரவேண்டும்? இடைவேளைக்குப்பின் கட வித்துவானை சேர்த்துக்கொள்ளலாம் என்று நினைத்த சீர்காழி கையை அசைத்துக் கொஞ்சம் பொறுக்கச் சொன்னார். ஆனால் தன்னை வரச்சொல்லித்தான் அவர் கை சைகை காட்டுகிறார் என்று தப்பு கணக்கு போட்டுக் கொண்ட கட வித்துவான் மேடையில் பானையோடு திடும் பிரவேசம் செய்து அமர்ந்ததும் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

இச்சமயம் ஏதோ பாடிக்கொண்டிருந்த சீர்காழி 'திடீரென்று' "இத்தனைநாள என்ன செய்தாய்..." என்று ஒரு அடியை அழுத்தமாகப் பாடியவாறு கடவித்வான் பக்கம் ஒரு பார்வையை வீசி—இடையிலே கொஞ்சம் இடைவெளி விட்டார் சில வினடிகள்! கூட்டத்தில் சிரிப்பொலி எழுந்தது.

ஆதிதாள வரிசையில் மீண் அவர் ஆரம்பித்தார். "இத்தனைநாள் என்ன செய்தாய்..." மீண்டும் இடைவெளி—மறுபடியும். "இத்தனைநாள் என்ன செய்தாய் இன்பத் தமிழை... பாடாமல் இத்தனை நாள் என்ன செய்தாய்" என்று மற்றொரு வரியையும் சேர்த்துப் பாடினார்.

"இத்தனை நாள் என்ன செய்தாய்" என்ற கல்யாணி இராகப்பாடலை சந்தர்ப்பத்திற்கேற்ப சாதுர்யமாக அவர் பாடியதைக் கேட்ட ரசிகப் பெருமக்களின் ஆரவாரமும் சிரிப்பொலியும் அடங்க சில நிமிடங்கள் ஆயின.

## திரைப்படத் தொழில் ஏழுமடங்கு வளரும்

இந்திய அரசினரின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பயனாக இந்தியத் திரைப் படத்தொழில் இப்போதைய நிலையைப்போல ஏழு மடங்கு வளரக்கூடுமென்று கருதப்படுகிறது.

திரைப்படத் தொழில் தொடர்பான கருவிகளை இந்தியாவிலேயே செய்வதற்கான தொழிற்சாலைகளை அமைப்பதே இதன் காரணம். இந்திய அரசு நியமித்த தனிக் குழுவினர் ஆராய்ச்சியின் முடிவு இது.

இந்திய அரசு கைத்தொழிற்துறை ஆலோசகர் திரு. வி. பி. மேனனைத் தலைவராகக் கொண்ட இக்குழு இந்தியாவின் தேவைகளுக்கேற்ப வண்ணப்படங்களை கழுவும் தொழிற்சாலைகளை அதிகரிக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்திருக்கிறது.

இக்குழுவில் மெகபூப்கான், எஸ். எஸ். வாசன், ஆர். பி. மேதா, என். கிருஷ்ணசாமி, கே. எம். மோதி, ஜே. பி. ருங்டா, அரசினர் படப்பிரிவுக் கட்டுபாட்டு அதிகாரி எம். ஏ. பேசல் பாயி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## பெரிய இடத்துப் பெண்

"பாசம்" படத்தைத் தயாரித்து வெற்றிகண்ட ஆர். ஆர். பிக்சர்ஸார் தற்போது துரிதமாக வளர்த்துவரும் சமூகப் படத்திற்கு 'பெரிய இடத்துப் பெண்' என்று பெயர் வைத்துள்ளனர்.

எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜாதேவி, அசோகன், புதுமுகம் ஜோதிலக்ஷ்மி ஆகியோர் நடிக்கும் இப்படத்திற்கான இசையை விஸ்வநாதம் - ராமமூர்த்தி அமைக்க, டி. ஆர். ராமண்ணா டைரக்ட் செய்கிறார்.

## விண்வெளி ஆராய்ச்சி . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் 1963-லும் நடக்கும். சந்திரனில் போய் பொத்தென்று இறங்கி உலகுக்குச் சில தகவல்கள் தெரிவிக்கும் ரேஞ்சர் கோள்கள். 1964-ல் சர்வேயர் என்ற செயற்கைக் கோள் சந்திரனில் போய்மெத்தென்று இறங்கும். அது நிலவுலகின் தரைப்பரபபை காட்டும். டெலிவிஷன் படங்களையும் அனுப்பும். 1965-ல் "வாயஜர்" கோள்கள் புறப்பட்டு சுக்கிரனையும் செவ்வாயையும் சுற்றி தகவல் சேகரிக்கும். 1966-ல் "பிராஸ்பெக்டா" கோள் அம்புலிக்குச் செல்ல வேண்டிய கருவிகளை எடுத்துக் கொண்டு விண்வெளி லாரி போல் போகும்.

சூரியனை ஆராய கடந்த ஆண்டு மார்ச் 7-ல் செயற்கைக் கோள் வானய்வுகூடம் அமைக்கப்பட்டது. அதேபோல் விண்வெளியில் வலம்வந்த வண்ணம் பூபௌதீக ஆராய்ச்சி செய்யும் செயற்கைக்கோள் ஒன்று 1963-ல் அனுப்பப்படும். நட்சத்திரங்களை ஆராயும் செயற்கைக் கோள் ஆய்வுக்கூடம் 1964-ல் ஏற்படும்.

### அம்புலிக்கு அப்பால்

அம்புலிக்கு ஆள் போய்வந்ததும் விண்வெளி ஆராய்ச்சி முடிவடைந்துவிடுமா? அமெரிக்கா மேலும் பல கிரகங்களை அடைவதற்கு ஏற்ற அணுவிசை வாகனங்களை உருவாக்கவேண்டும் என்கிறார் "நாஸா"வின் நிர்வாக அதிகாரி. 1970-க்குப் பிறகு அமெரிக்காவின் அணுவிசை விண்வெளிக் கப்பல்கள் செல்லும் என்று பல விஞ்ஞானிகள் அம் மகாநாட்டில் பேசினார்கள். நாளடைவில் அருகிலுள்ள பிறகிரகங்களிலும் அணுவிசை நிலயங்கள் ஏற்படும் என்கிறார்கள்.

மனிதனை ஏற்றிக் கொண்டு விண்வெளியில் செலுத்தத்தக்க அணுவிசை ஏவுகணைகள் 1970 வந்ததும் தயாராகிவிடும் என்கிறார் அமெரிக்க அணுவிசைக் குழுவின் தலைவர். திட்டப்படி 1968 ஆரம்பத்தில் அணுவிசை ஏவுகணைகள் செலுத்தப்பட்டுச் சோதித்துப் பார்க்கப்படும். "சனி — வி" எனும் ஏவுகணையின் மேற்கட்டமும் அணுவிசையினால் இயங்குவதாக இருக்கும். பூமியின் வாயுமண்டலத்துக்கு மேல்போனபிறகுதான் அது வேலைசெய்யும். அதுவரை கீழுள்ள கட்டங்களின் இயந்திரங்களே ஏவுகணையை இயக்கிவரும். இந்த ஏவுகணைகள் தான் அம்புலிக்குச் செல்லும் விமானிகளை ஏற்றிச் செல்லும்.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post BOX 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மார்கழி மீ 29 (13-1-63)

# தமிழ் இலக்கிய விழா

தமிழ் இலக்கிய விழாக்களை நாடெங்கும் நடாத்த இலங்கைச் சாகித்திய மண்டலம் முன்வந்திருப்பது மக்களிடையே இலக்கிய ஆர்வத்தைப் பெருக்கித் தமிழ்மொழிக்கு ஆக்கம்தேடத் துணைபுரிவதாகும்.

பலதரப்பட்ட கருத்துக்களும் பண்பாடும் உடையவர்கள் ஒன்றுபட்டுவாழ வழிசெய்வதற்காகத்தான் இலக்கியம் இருந்துவருகிறது. மக்கள் ஆட்சி மலர்ந்துள்ள இக்காலத்தில் குறைகள் மறைந்து சகலதுறைகளிலும் நிறைவு ஏற்படுவதையே எவரும் விரும்புவர்.

தமிழ் இலக்கியமரபு அன்பின் வழிவழிவந்தது. உயர்ந்த வாழ்க்கைமுறையைத்தேடுவதற்கு வாய்ப்பு அளிப்பது அது. எந்த நாட்டு இலக்கியமாயினும் சரி அது மனிதனை வாழத்தகுதியுடையவனுக்கவேண்டும்.

இலககியம் மனிதனுடைய மொழிக்கும் உள்ளத்துக்குமிடையே நடைபெறும் 'யோகம்' என அறிஞர்கள் கூறுவர். இலக்கியப் பயிற்சி மொழியை வளமாக்கி மனித உள்ளத்தை விரிவடையச் செய்கிறது. இதனல் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சி ஓங்கி குறுகிய எல்லைக்கோடுகள் எல்லாம் தகர்ந்துவிடுகின்றன.

இத்தகைய இலக்கியம் எப்படிஅமையவேண்டும், அதனை எப்படிவளர்க்க வேண்டுமென்பதில் கருத்துவேற்றுமைஏற்படுவதுஇயல்பே எனினும் தமிழ்மொழி வளர்ச்சியுற வேண்டுமென்பதில் தமிழ்பேசும் மக்களிடையே எவ்வித வேற்றுமையும் இருக்கமுடியாது.

சாதாரணமக்களும் படித்து விளங்கக்கூடிய நடையில் இலக்கியம் அமையவேண்டுமென்பதை நாம் வரவேற்கும் போது, நந்தமிழ் மொழிக்கும் ஒருமரபும் வரம்பும் உண்டென்பதையும் மறந்துவிடலாகாது. அதற்காக எந்த எழுத்தாளனும் சமுகத்தைவிட்டு விலகிச் செல்ல வேண்டியதுமில்லை. பழமையிற் காலூன்றிப்புதுமையை அளவாக வரவேற்கும் எழுத்தாளர்களின் படைப்புக்கள் காலவெள்ளத்தைத்தாண்டி நிற்கும் சக்தி வாய்ந்தன.

மாறுபட்ட கருத்துள்ளவர்களுடனும் நட்புறவுபூண்டு ஒருவரை ஒருவர் உணர்ந்துகொள்வதுஇலக்கியவளர்ச்சிக்கு உறுதுணைபுரிவதாகும். இலங்கைச் சாகித்தியமண்டலம் இதனைக்கருத்திற்கொண்டு இலக்கியத்துறையில் ஆர்வத்துடன் உழைப்பவர்கள் மாறுபட்ட கருத்துடையவராயினும் அவர்களின் ஒத்துழைப்பையும் பெறமுயலவேண்டும். சிறந்த இலக்கியம் எழுவதற்கு ஆதாரமான சூழ்நிலை இன்று உருவாக்கப்பட்டுவருவது உண்மையாயின் அந்தச் சூழ்நிலையை நன்குபயன்படுத்துவது சாகித்திய மண்டலம் போன்ற கழகங்களின் கடமையாகும்.

மனிதனின் உள்ளத்தில் மலரும் கருத்துக்களை வெளியிடும் 'கலை' யில் ஒரு ஒழுங்கை நிலைநாட்டவேண்டின் அதற்கு ஒரு வரம்புமுறை அவசியம் என்பதை அறிஞர்கள் அனைவரும் ஒப்புவர். இலக்கியம், மனநிகழ்ச்சிகளுக்கு உருவம் கொடுத்து அவற்றை நிலைத்தோங்கச் செய்கின்றது. தமிழ், சிங்கள இலக்கியவளர்ச்சியில் அக்கறை கொண்டு அரசினரால் நிறுவப்பெற்ற சாகித்தியமண்டலம் உயிருள்ள இலக்கியம் எப்படி அமையவேண்டுமென்பதை நாட்டில் பரப்புவதுடன், அதன் அடிப்படைப்பண்பையும் பாதுகாக்கவேண்டியது அவசியமாகும்.

இலக்கியம் தனிப்பட்டவர்களின் சொத்தல்ல. அதனைப் பேணிவளர்ப்பது அனைவரினதும் பணியாகும். இதில் சாதிமத வேறுபாடுகளுக்கே இடமில்லை. இந்தப் பரந்த அடிப்படையில் தமிழ் இலக்கியம் மலர்ந்து பயன்தருமென எதிர்பார்க்கின்றோம்.

**தைப்பொங்கல் உழவனுடைய திருநாள்: ஏர் விழா. அதற்கடுத்த நாள் மாட்டுப் பொங்கல். வருடம் முழுவதும் தன்னோடு உழைத்த மாட்டுக்கு மனிதன் அன்று நன்றி கூறும் நந்நாள்.**

## ஜல்லிக் கட்டு

# ஏர் விழாவும் ஏறு தழுவலும்

— வி. என். பி. —

பாண்டி வள நாட்டின் வைகை ஆற்றங்கரையில் நீண்ட விசாலமான மணல் வெளி. அதில் அன்றைய தினம் ஏறு தழுவும் கொண்டாட்டம் நடைபெறுகிறது. குறுநில மன்னன் தனது பரிவாரங்கள் சூழ மலர் மேடையில் வீற்றிருக்கிறான். பெண்கள் பகுதியில் பட்டத்தரசியும் பாங்கிமாரும் உரையாடி மகிழ்ந்திருக்கிறார்கள். அன்று அலர்ந்த மலர்கள் போல அணங்குகளின் முகாரவிந்தம் காதற்களிப்புடன் காளையர் கூட்டத்தைப் பார்க்கிறது. ஏறு தழுவ வந்திருக்கும் இளம் சிங்கங்கள், வாழைத்தண்டு போல் புஜங்கள் பூரிக்க, நங்கையரைப் பார்த்தும் பாராமலும் உறவாடுகின்றனர். பெண்கள் கூட்டத்தின் பூரிப்பொலி குயில்கள் ஊடல் செய்வது போலிருக்கிறது.

மணற் பரப்பின் மற்றொரு புறத்தே பெரியதொரு தொழுவம். அதில் பல பல இளம் மாட்டுக் கன்றுகள்—காளைகள். வங்கிய சூடாமணி, அதிவீரராமன், பராந்தகன், கோப்பெருஞ் செல்வன்—இப்படியாக அழகிய நாமங்கள் அவற்றிற்கு சூட்டப்பட்டிருக்கின்றன. அவற்றின் சொந்தக்காரர் காளைகளைத் தடவிக் கொடுத்து வரப்போகும் விழாவுக்குத் தயார் செய்கின்றனர். வீறுகொண்ட ஏறுகள் திமிர் முட்டி இடிபோல் முழங்குகின்றன.

சங்கொலி ஒன்று கேட்கிறது. எங்கும் பரபரப்பு. நங்கையரின் கண்கள் அகல விரிகின்றன. ஆடவரின் அங்கங்கள் தினவு கொள்கின்றன. ஒவ்வொரு காளையாக தொழுவத்திலிருந்து அவிழ்த்து விடப்படுகிறது. இடியேறு கேட்ட சிங்கம் போல் அவை மருண்டு மருண்டு முன்றிலுக்குள் வருகின்றன. விம்மிப் புடைத்து நிற்கும் அவற்றின் ஏரிகள் அங்கும் இங்கும் அசைகின்றன. வாலிபர்களில் ஒருவன் விரைந்தோடிவந்து ஒரு காளையைப் பிடிக்க முயலுகிறான். அது கொம்பை வளைத்து சீறிக்கொண்டு அவன்மீது பாய்கின்றது. அவன் லாவகமாக அந்தத் தாக்குதலைத் தட்டிவிட்டு மீண்டும் அதன் எதிர்ப்பைக் காத்திருக்கிறான்.

"எழுந்தது துகள், ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக் கலங்கினர் பலர்."

இந்த வாருக எருதுகள் வர வர, இளைஞர்கள் ஒவ்வொன்றையும் அடக்கி அடக்கி வெற்றி விருது பெறுகிறார்கள். கடைசியில் ஒன்று. அது மன்னனுடைய மாடு. இளம் பிறைபோல் இரண்டு கொம்புகள் உருண்டு திரண்டு இருக்கின்றன. திமில் மலைபோல் மிதந்து நிற்கிறது. அதன் மருண்ட பார்வை பாவையரின் பார்வையை ஒத்திருக்கிறது. ராஜநடைபோட்டு வருகிறது அந்த மாடு. எல்லோருடைய கண்ணும் அதில் பதிந்திருக்கின்றன. எழுந்தான் ஒரு இளைஞன். கட்டிளங்காளை.

காளை காளையோடு மோதுகிறது. இடிபோல் முழங்குகிறது மாட்டுக்காளை. மின்னல் போல் பாய்கிறான் மனிதக் காளை. அடுத்த கணம் என்ன நேருமோ என்று எல்லோரும் ஏங்குகின்றனர். இரண்டே இரண்டு கணம்தான். அதற்கிடையில்மனிக்தகாளைவென்றுவிட்டது. ஒரே தாவு தாவி மாட்டின் கழுத்தை ஒரு கையாலும் அதன் கொம்புகளை மற்றக் கையாலும் இறுகப் பிடித்துக்கொண்டான் வாலிபன். மாடு கழுத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டது. அதன் கழுத்தில் கட்டப்பட்டிருந்த பொற்கிழி அவன் கைக்கு வந்துவிட்டது. இறுமாப்புடன் நடந்து செல்கிறான் மன்னனிடம். வெட்கத்தால் தலைகுனிய அன்னநடை போட்டு வருகிறாள் கன்னி ஒருவள். அவள் தான் அழகு ராணி. வாலிபன் கையும் வனிதையின் கையும் உறவு கலக்கின்றன.

இது நடந்தது 2000 வருடங்களுக்கு முன்பு. இன்றும் இது 'ஜல்லிக்கட்டு' என்ற பெயருடன் தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது. மாடு என்றால் பழந்தமிழில் செல்வம் என்று பொருள் படும். அக்காலத்தில் ஒருவருடைய செல்வம் யாவும் அவரது மாடுகளைக் கொண்டே கணிக்கப்பட்டது. ஏன், சென்ற 19-ம் நூற்றாண்டிலும்கூட, இன்று உலகில் மிகவும் செல்வ வள நாடென மதிக்கப்படும் அமெரிக்காவில் ஒரு மனிதனின் பொருளாதாரம் அவனுடைய மாட்டுப்பண்ணையைக் கொண்டே கணக்கெடுக்கப்பட்டது.

தைப்பொங்கல் உழவனுடைய திருநாள். ஏர் விழா. அதற்கடுத்தநாள் மாட்டுப் பொங்கல். வருடம் முழுவதும் தன்னோடு உழைத்த மாட்டுக்கு மனிதன் அன்று நன்றிகூறும் நந்நாள்.

# பொங்கல்!

— சத்தியசீலன் —

வானெலாம் ஒளியின் பொங்கல்!
வயலெலாம் பயிரின் பொங்கல்!
கானெலாம் மலரின் பொங்கல்!
கவியெலாஞ் சுவையின் பொங்கல்!
தேனிலா வதனப் பெண்டிர்
திருமனை தோறும் வைத்த
பானையிற் 'புதிதின்' பொங்கல்
பலுகிடச் சேர்ந்த பொங்கல்.

புதுப்புனல் ஆடிப் போந்த
புகுமன மடவார் தங்கள்
கதுப்புறப் புதுப்பூத் தாங்கிக்
காவிடை வாவக் கண்டு
குதிப்புறு மனத்த ராகிக்
குமரியர்த் தொடர்வார் நெஞ்சிற்
'துதிப்புறு தமிழக் காதல்'
தோன்றுமா றெழுந்த பொங்கல்!

முன்றில்கள் தோறும் நின்று
மூரல், பால் பொங்கத், தங்கள்
சென்றநாட் சிறுமை தள்ளிச்
சீருயர் மொழியைக் காக்க
மன்றுகள் அமைத்தே நிற்பார்
மைந்துடை மனத்திற் 'சங்கம்
நின்றதோர் தமிழர் வீரம்'
நிகழ்வகை எழுந்த பொங்கல்!

செங்கரும் புடனே மஞ்சள்
செந்நெல், பால் இஞ்சிகொண்டு
மங்கையர் செய்த பொங்கல்
மகிழ்வொடு மிசைவார் நெஞ்சம்,
மங்கல மொழிகள் தேர்ந்து
மனநலப் புலவர் செய்த
பொங்கலைப் புதிதென் றுண்டு
பொலியுமா மெழுந்த பொங்கல்!

புத்துடை, அணிகள் பூண்டு
புதுமொழி இழையப் போந்த
முத்தொளிர் முறுவல் மாதர்
மொய்ம்புடை அன்ப ரோடு
'புத்தொழிப் பொங்கல்' செய்த
புரவலன் வரவைப் பாடி
புத்துணர் வுடனே வாழ்க்கை
புகுவகை எழுந்த பொங்கல்!

# உலகமேடை

டி. எம். எம்.

## வேதாந்த கேசரி விவேகானந்தர்

"வேதாந்த கேசரி" எனத் திக்கெட்டும் புகழ் பரப்பிய சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா, வருகிற 17-ம் திகதி உலகெங்கும் கொண்டாடப்படவிருக்கிறது. வங்காளத் தாயின் கருவிலுதித்த ராமகிருஷ்ண பரமஹம்ஸரும், சுவாமி விவேகானந்தரும் பரத கண்டத்தின் ஆத்ம ஒளியை ஞாலத்தின் திக்கெட்டும் பரப்பினர். குருவும், சீடருமான ராமகிருஷ்ணரும், விவேகானந்தரும் வெளிப்படுத்திய ஞானச் சுடர், இன்னும் அஞ்ஞான இருளை வழி மறித்துநிற்கிறது.

பி. ஏ. பட்டதாரியான நரேந்திரர், இளம் வயதிலேயே அநித்தியமான பரமார்த்தீக வாழ்வில் வெறுப்புற்று, நித்தியமான ஆத்மீக ஒளியினால் கவரப்பட்டார். வீட்டுக்கு வரும் சந்நியாசிகளிடமெல்லாம் "கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?" என்று கேட்பாராம். ஆனால் பதிலில் ஏமாற்றமே கலந்திருக்கும்.

ஆயினும் நரேந்திரர், பகவான் ராமகிருஷ்ணரைச் சந்தித்த போது, முற்றும் புதிய அனுபவம் ஏற்பட்டது. "ஆம், குழந்தாய். கண்டிருக்கிறேன். உனக்கும் கடவுளைக் காட்டுவேன்" என்று பதிலளித்த பரமஹம்ஸரை நரேந்திரர் என்ற விவேகானந்தர், பின் தமது குருவாக ஏற்றுக்கொண்டார்.

சுவாமி விவேகானந்தர், இந்து மதத்தின் அரிய, பெரிய உவமைகளை அரிய பெரிய உண்மைகளோடு விளக்கியிருக்கிறார். சிக்காகோவில் சர்வமத மகாநாட்டில் இந்து மதத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு, அவர் ஆற்றிய சொற்பெருக்கு உலகெங்கும் கேட்டது. அவரது சண்டமாருதப் பிரசங்கம், உலக மதத் தலைவர்களை யெல்லாம் அடியோடு கவர்ந்து விட்டது. கொடுக்கப்பட்ட நேரத்திற்கு மேல், அதிக நேரம் பேச அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப் பட்டது. மகாநாட்டின் மற்றப் பிரதிநிதிகள் எல்லாம், "கனவான்களே, சீமாட்டிகளே" என்று தமது பிரசங்கத்தை ஆரம்பிக்க, விவேகானந்தரோ, "சகோதர சகோதரிகளே" என்று விளித்து, ஒரு புதிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வெளியிட்டார்.



விவேகானந்தர்

இந்திய மாதாவின் இரு ஒப்பற்ற புதல்வர்கள், வெளிநாடு சென்ற சமயம், எவருக்குமே தெரியாதவர்களாய் இருந்தார்கள். ஆனால் திரும்பி வந்த போது, உலகத்தின் ஒப்பற்ற மாமணிகளாய் வரவேற்கப்பட்டனர். ஆம் ஒருவர் சுவாமி விவேகானந்தர். மற்றவர் மகாத்மா காந்தி. அமெரிக்கா சென்ற விவேகானந்தரைப் பற்றி வெளியுலகுக்குத் தெரியாது. ஆனால் அவர் திரும்பி வந்தபோதோ, ராஜோபசார வரவேற்பு அளிக்கப்பட்டது. சென்னையில் அவரது வாகனத்தைப் பெரியோர்கள் பலர் கைகளினால் இழுத்துச் சென்றனர். மகாத்மா காந்தி, இளைஞராகத் தென்னாபிரிக்கா சென்றபோதும் அவரை உலகம் அறிந்திருக்கவில்லை. ஆனால் இந்தியா திரும்பிய சமயம், அவர் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சுவாமி விவேகானந்தரின் திருவடிகள் பட்ட இடமெல்லாம் புனிதமடைந்தன. உலகெங்கும் ராமகிருஷ்ண மிஷன்கள் உருவெடுத்தன. இந்து மதத்தின் அழியாப் புகழை நிலைநாட்டிய விவேகானந்தர், தேசப்பற்றையும் இளைஞர்களுக்கு உணர்த்தினர். அவரது நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. விவேகானந்தரின் உருவம் பொறித்த விசேஷ தபால் தலைகளும் வெளியிடப்பட விருக்கின்றன.

★

## திரும்பிவரும் வீரர்கள்

காங்கோ ஐ. நா. படையில் சேவை செய்யும் 5000 இந்தியத் துருப்புக்கள் வருகிற மார்ச் மாதம் தாயகம் திரும்புகிறார்கள். சீன ஆக்கிரமிப்பின் காரணமாக, இந்தத் துருப்புக்களை விரைவில் திருப்பி அனுப்புமாறு இந்தியா, ஐ. நா. தலைமைக் காரியதரிசியைக் கேட்டிருந்தது.

ஆனால் கடாங்கா நிலையில் நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாகவும், உடனடியாக இவ்வளவு தொகையான துருப்புக்களை வேறு நாட்டிலிருந்து காங்கோவுக்குக் கொண்டுவர வசதி இல்லாமலிருந்ததாலும் இந்தியத் துருப்புக்கள் திரும்புவது தாமதப்பட்டது. ஆயினும், இப்போது கடாங்காவைக் காங்கோவுடன் இணைக்கும் வேலை அநேகமாகப் பூர்த்தியடைந்து வருகிறது. மார்ச் மாதத்துக்குள் காங்கோவின் ஒரு மாகாணமாக, கடாங்கா இடம் பெற்றுவிடும். அதே சமயம், இந்தியாவிலும் இப்போது யுத்தம் நடைபெறவில்லை. எனவே மார்ச் மாதத்தில் இத்துருப்புக்கள் இந்தியா வருவது, ஐ. நா வையோ இந்தியாவையோ பாதிக்காது எனலாம்.

காங்கோ ஐ. நா. படையில் ஒரு டஜன் நாடுகளின் துருப்புக்கள் சேவைபுரிகின்றனவாயினும், இதில் பாதிப்பேர் இந்தியர்கள் தான். கபடத்தனமான ஷோம்பேயின் கொட்டத்தை அடக்கியதும் இந்தியத் துருப்புக்கள் தான். கடாங்காவில் இப்போது ஐ. நா. எடுத்துக்கொண்ட ராணுவ நடவடிக்கைகளில் மூன்றே தினங்களில், இந்திய வீரர்கள் ஷோம்பேயின் கோட்டையைத் தகர்த்தெறிந்துவிட்டார்கள். திரு. ஷோம்பேயிடம் 18,000க்கு மேற்பட்ட துருப்புக்களும், நவீன ஆயுதங்களும், விமானங்களும் இருந்தபோதிலும் அவர் தலைநகரை விட்டே ஓடவேண்டியதாயிற்று. இந்திய வீரர்களின் மெச்சத்தக்க பணியை ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் சமீபத்தில் வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்.

ஐ. நா. வின் சமீப நடவடிக்கையில் ஜடோட்வில்லி என்ற முக்கிய நகரை நோக்கி இந்தியத் துருப்புக்கள் முன்னேறியபோதும், அதைக் கைப்பற்றியபோதும் குறிப்பாகக் கூர்க்கர்களும், ரஜபுத்தானா ரைபிள் படையும், மதராஸ் ரெஜிமெண்டும் திறமையாகவும், துரிதமாகவும், அதிக உயிர்ச்சேதமின்றியும் தங்கள் கடமையை நிறைவேற்றிய செயல், ஒப்பற்ற ஒரு ராணுவ நடவடிக்கையாகக் கருதப்பட்டது. உலகமே பாராட்டும் இந்த வீரத் துருப்புக்களை இந்தியா கோலாகலமாக வரவேற்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் துருப்புக்கள் இனி சீனரை எதிர்க்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் போது, தங்கள் வீரத்தை மீண்டும் நிலைநாட்டுவார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

★

## மொஸாம்பிக் இந்தியர்கள்

மொஸாம்பிக்கிலுள்ள இந்தியர்கள் மிருகத்தனமான கொடுமைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மொஸாம்பிக், கிழக்காபிரிக்காவிலுள்ள போர்த்துக்கீச காலனியாகும். சென்ற ஆண்டு, போர்த்துக்கல் வசமிருந்த கோவாவை இந்திய ராணுவ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றியதே, இந்தியர்கள் அங்குபடும் அவதிக்குக் காரணம்.

போர்த்துக்கல் அதிகாரிகள் இந்தியர்களை உடனடியாக வெளியேறும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். நூற்றாண்டுக் கணக்கில் அங்கு வாழ்ந்த இந்தியர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. போக்குவரத்து வசதியின்றி வெளியேறுமலிருக்கும் இந்தியர்கள், சிறையில் தள்ளப் பட்டிருக்கிறார்கள். அவர்களின் குழந்தைகள சட்டப்படிபோர்த்துக்கல் பிரஜைகள் எனக்கூறி, பெற்றோர்களிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கின்றன.

ஏகாதிபத்திய சரித்திரத்திலேயே போர்த்துக்கலைப்போல் கொடுமையாகவும், ஐ. நா. மனிதஉரிமைச் சாஸனத்திற்கும், சர்வதேச சட்டத்திற்கும் மாறாகவும் நடந்து கொள்ளும் நாடு எதுவுமே கிடையாது. கோவாவில் நடைபெற்ற சம்பவத்திற்கும், மொஸாம்பிக்கிலுள்ள அப்பாவி இந்தியர்களுக்கும் என்ன சம்பந்தம்? அங்கோலா உட்பட, மற்றும் தனது காலனிகள் பலவற்றில் நடைபெற்ற சுதந்திரக்கிளர்ச்சியை அடக்க போர்த்துக்கல் கையாண்ட மிருகத்தனத்துக்கு எல்லையே கிடையாது. போர்த்துக்கலை ஐ நா. மட்டுமின்றி, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற ஏகாதிபத்திய நாடுகள்கூட கண்டித்திருக்கின்றன ஐ நாவில் போர்த்துக்கலை ஆதரித்து நிற்பது தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் மட்டுமே. ஆயினும் இந்தச் சின்னஞ்சிறு போர்த்துக்கலுக்கு இருக்கும் ஆணவம் வல்லரசுகளுக்குக் கூட இல்லை.

## பூஜ்யம் தபால்

### கனம். ரீ. பி. இலங்கரத்ன, வர்த்தக, உணவு, கப்பல் மந்திரீ, கொழும்பு.

கனம் மந்திரியாரே!

அவசரகாலம் நீடித்திருந்தும், தாங்கள் கல்விமந்திரியுடன் யாழ்ப்பாணத்துக்குத் துணிச்சலுடன் வந்து, ஊர்வலம் நடத்தி, 300 மாலைகளுக்கு மேல் பெற்றுத்திரும்பியதற்காகத் தங்களைப்பாராட்டுகிறேன். இவ்வளவு காலமாகியும் இன்னும் பிரதமர் ஸ்ரீமாவோ இங்குவரத்துணியவில்லை. அவரது கணவரும் பிரதமராக இருக்கையில், இந்தப் பக்கம் எட்டியும் பார்க்கமுடியாமலிருந்தார். அவ்விருவரும்செய்யாததைத் தாங்கள் செய்துவிட்டதைக் கண்டதும், தாங்களே அடுத்த பிரதமராகவரத் தகுதியுள்ளவரென்றும், பிரதமர் ஸ்ரீமாவைவிட தங்கள் ஜாதகம் அதிக அதிர்ஷ்டமானதென்றும் தாங்கள் ஒரு சமயம் கூறியது உண்மை என்பதையும் உணரலானேன்.

பருத்தித்துறையிலே தாங்கள் ஊர்வலமாகச் சென்ற போது, ஓர் அழகி இருந்ததாயும், அவர் மீது ஒரு மாலையை விச எண்ணியதாயும் ஆனால் அப்படிச் செய்யவில்லையென்றும் பார்லிமெண்டில் தெரிவித்தீர்கள், நல்ல வேளை. முன்பின் தெரியாத அப்பெண்மீது மாலை வீசியிருந்தால் அது ஒருபெரிய விபரீத சம்பவமாகியிருக்கலாம். உடுப்பிட்டியார் கூறியது போல், தங்கள் குடும்ப அமைதியும் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும். தங்கள் ஜாதகபலன் தங்களைக் காப்பாற்றி இருக்க வேண்டும்.

தங்களுடன் வந்த கல்விமந்திரியும், மந்திரிசபையைச் சேர்ந்தவராயினும் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டாமல் தங்களுக்கு மட்டும் கறுப்புக்கொடி காட்டுவானேன் என்று பார்லிமெண்டில் கேட்டீர்கள். எனக்கும் இது புரியவில்லை. இது பாரபட்ச நடவடிக்கையே என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

இந்த பாரபட்ச குற்றத்துக்காகத் தான் பொலிசாரும் நடவடிக்கை எடுத்தனர் போலும்.

பருத்தித்துறையிலே, ஓர் அழகியைக் கண்ட தங்கள் கண்கள், யாழ்ப்பாணத்திலே பொலிசார் எம். பி. க்களை அடித்ததைப் பார்க்காமல் போனதைக்கேட்டதும்எனக்கு மகாத்மா கூறும் மூன்று சீனக் குரங்குகள்கதைதான் ஞாபகம் வந்தது. கெட்டதைப் பார்க்காதே, என்று அதில் ஒன்று கண்ணை மூடிக்கொண்டிருக்குமல்லவா?

கறுப்புக்கொடி காட்டியவர் எண்ணிக்கை மிகக்குறைவென்றும், தங்களை வரவேற்றவர்கள் எண்ணிக்கையே மிகஅதிகமென்றும், அதனால் இங்கு தமிழரசுக்கட்சிக்கு செல்வாக்கு இல்லைஎன்றும் தாங்கள் அறிய முடிந்ததென்றும் கூறுகிறீர்கள். பலே! இதனால் அடுத்த முறை தாங்கள் பருத்தித்துறை அல்லது யாழ்ப்பாணத்தொகுதியிலே தேர்தலுக்கு நிற்கமுன் வருவீர்களென்றெநம்புகிறேன்.

தங்கள் விஜயத்தின் போது தங்களுடைய பொலிசார், தமிழ் எம். பி. க்களை அடித்தது பற்றி தாங்கள் வருந்துவதாக ஒரு வார்த்தை கூடப் பார்லிமெண்டில் கூறவில்லையேஎன்று ஓர் அன்பர் கேட்கின்றார். அவர் ஓர் அப்பாவி. கறுப்புக் கொடிகாட்டியவர்களுக்கு அனுதாபமாம்!

இது போகட்டும். தாங்கள் மீண்டும் எப்போது இங்கு வருகிறீர்கள்? மாலைகள், அழகிகளுடன் தங்களைவரவேற்கவும், எங்கள் எம்.பி.மார்கள் மேலும் அடிவாங்கவும் தயாராக இருக்கும் பொருட்டே கேட்கின்றேன். வெகுசீக்கிரத்தில் தங்கள் அடுத்த விஜயத்தை ஆவலுடன் எதிர்பார்க்கும்.

தங்கள் அன்பன்,

பூஜ்யம்.

குறிப்பு:

யாழ்ப்பாண சம்பவம் பற்றி பார்லிமெண்ட் சபையில் தாங்கள் பேசுகையில், நல்லூர் எம். பி., தமது புதல்வருக்கு, தங்களுடைய பெட்ரோல்கார்ப்பரேஷனில் பெரியவேலைகிடைக்கவேண்டுமென்று தங்களிடம் நேரில் வந்துகேட்டவிஷயத்தை அம்பலப்படுத்தி விட்டீர்கள். தாங்கள் அவருக்கு நேரில் உறுதிகூறியும், ஒன்றும் செய்யாமற் போனதுடன், இந்த ரகசியத்தை ஊரறியச்செய்துவிட்டது, நேர்மையாகுமா? எப்படியும் ஒருவிதத்தில் இது மிகவும் நல்லது. இனியாவது அவரோ வேறு எம். பி. க்களோ, சொந்த தயவுகளுக்காக தங்களையோ அல்லது வேறுமந்திரிகளையோ அணுகாமல் அதிக எச்சரிக்கையாக இருப்பார்களல்லவா?

"..."

## பாடப்புத்தகங்கள் தெரிவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல நாமும் பிழையான நூல்களைநடமாடவிடலாகாது.'

வித்துவான் பொன். முத்துக்குமாரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

சமயப் பெரியார்கள்மனித சமுதாயத்தை ஆன்ம ஈடேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதற் கேற்ற முறையில் அரிய ஞானக் கருததுக்களை வழங்குகிறார்கள். அரசியல் தலைவர்கள் சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்தையும் கூறிக்கொண்டு சீரிய நெறிகளை எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் இலக்கியப் புலவர்களோ ஒவ்வொரு மனிதனதும் அகவாழ்வும் புறவாழ்வும திருந்திச் சிறந்து மிளிர உயர்ந்த இலட்சியங்களை கவிதை மூலமும் கதைமூலமும் படைத்தளிக்கின்றார்கள். நம் பழந்தமிழ்ப் புலவர்கள் அகம், புறம் என இருதுறைகளில் மக்களுக்கு அமைந்த அரிய இலட்சியங்களையும் இனிய சிறிய பாடல்களில் வடித் தெடுத்துத் தந்திருக்கிறார்கள். தமிழனின் அகவாழ்வு அன்பில் அரும்பி, அன்பில் மலர்ந்து, இன்ப பயனைத் தருவது. இத்தகைய வித்தகமான வாழ்க்கையின் பிரதிமைகளை குறுந்தொகை, அகநானூறு ஆகிய பாடல்களில்

### மாணவர்களும் இலக்கியப் பற்றும்

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளரும் சாகித்திய மண்டல உறுப்பினருமான கலாநிதி ஆ சதாசிவம் பேசுகையில், தமிழ் மொழியு இலக்கியமும் சிறப்புற்று வளர்வதற்கு அத்திவாரம் மாணவர்களது இளமைக் காலத்திலேயே இடவேண்டும். எனவே சாகித்தியமண்டலத்தின் ஆதரவில் நடைபெறும் இவ்விழா மாணவர்களிடையே இலக்கியப் பற்றை உண்டு பண்ணுமென நம்புகிறோம் என்று கூறினர்.

### உயர்ந்த நூல்கள் வேண்டும்

விழாவிற்குத் தலைமை வகித்த வித்தியாதிகாரி திருமதி. ஆர். ஆர். நவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'மாணவர்கள் பண்டைய இலக்கியங்களையும் தரமான தற்கால நூல்களையும் நன்கு கற்க வேண்டும். தேவார திருவாசகங்கள் வாழ்க்கையை செவ்வனே நடத்த வழி காட்டுகின்றன. உலகில் உன்னத நெறியை ஞான நூல்கள் உதவுகின்றன. தமிழ் மொழி என்றும் சீருடன் விளங்கும் என்ற நம்பிக்கை மாணவர்கள் மனக்கில் ...

# மகளிர் மன்றம்

## நாட்டுக்குப் பணியாற்றும் பெண்குலம்

— கல்யாணி —

இன்றைய உலக அரங்கில் பெண்களின் நிலை பெரிதும் உயர்ந்துவிட்டது. உலக அரங்கில் பெண்கள் புரட்சிகரமான பாத்திரங்களாக மாறியதனுல் உலகமே முன்னேறத் தொடங்கியிருக்கிறது. பெண்களின் புரட்சிகரமான திட்டங்களினுல், முயற்சிகளினுல் உலகில் புது ஒளி வீசுகிறது.

ஒரு நாட்டைத் திறம்பட நிர்வகிப்பதற்கு ஏற்ற வல்லமையுடன் வாழும் பெண்களினுல் உலகில் போர் மூளுவதற்கு இருக்கும் நிலைமையைக் கூட நிறுத்துவதற்கு வேண்டிய சாதுரியம் உண்டு. எப்பொழுதும்அமைதியுடன் வாழ்ந்த இந்தியப் பெண்கள் கூட இன்று இந்தியாவில் பெரும்பதவிகளை வகித்து நாட்டை நிர்வகிக்கின்றனர். பொதுவாக இன்று பல நாடுகளை எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு பெண்மணியே அந்நாட்டுக்குப் பெருமை தரக்கூடிய முறையில் வாழ்கின்ருர்; சேவையாற்றுகின்ருர் என்பதை நாம் காண்கின்ருேம்.

எங்கள் நாட்டுப் பிரதமர் ஒரு பெண். இங்கிலாந்து இராணி ஒரு பெண். இந்தியாவிலேயே பல மாகாணங்களில் பெண்கள் பொறுப்பான பதவிகளை வகிக்கின்றனர்.

பலதரப்பட்ட மனிதர்களுடனும், பல நாடுகளிடனும் பழகி அங்கு சென்று தங்களின் நிலைமையை, கொள்கைகளை வெளிப்படுத்த இந்தியா தெரிந்துகொண்ட ஒரு சமாதானத் தூதுவரும் ஒரு பெண்மணிதான். இப்பெண்மணியான திருமதி லக்ஷ்மி மேனனின் ஆற்றலை உலகம் இன்று நன்கு அறிந்துவருகிறது. அமெரிக்காவில் இந்த வருடத்தில் சிறந்த பெண்மணியாகத் தெரிவுசெய்யப்பட்ட திருமதி கேற் லோச்சிம் இக்கருத்துக்களையே கொண்டுள்ளார்.

### நிலை உயர்ந்துவிட்டது

அமெரிக்கப் பெண்களின் மத்தியில் இவர் பேசியதாவது: 'உலகில் எப்பகுதியிலும் பெண்களின் நிலை உயர்ந்துவிட்டது. பெண்களினுல்தான் ஒருநாடு முன்னேற்றமடைய முடியும் என்னும் ஒரு நிலை இன்று ஏற்பட்டுவிட்டது.

'பெண்கள் பல சமயங்களில் தாக்கப்பட்டாலும். உலகில் நெருக்கடியான நிலைமைகள் ஏற்படும்பொழுது, பெண்களே அத்தகைய நிலைமைகளைத் தவிர்த்து நெருக்கடிகளைச் சமாளிக்கின்றனர். ஏனைய நாடுகளிலும் பெண்களால் ஆரம்பிக்கப்பெற்ற சங்கங்கள், பெண்களுக்கு மிகவும் உதவியாக இருக்கின்றன. அமெரிக்க பெண்களினுல் நிறுவப்பெற்ற ஸ்தாபனங்களைப்போல பிற நாட்டுப்பெண்களும் தங்கள் தங்கள் நாடுகளில் இப்படியான இயக்கங்களை நன்கு வளர்த்து வருகின்றனர். இத்தகைய பல முயற்சிகளினுல் பெண்கள் தங்களைப் பெருமையடையச் செய்கின்றனர். பிற நாட்டுப் பெண்கள் தேச சேவையுடன் தங்களின் தனிக் கடமைகளையும் பொறுப்புடன் செய்வது நன்ருக இருக்கிறது.

தமது அரசாங்கத்தையிட்டுப் பெண்களின் நிலையை உணர்வதற்குப் பெண்களையிட்டு தவருன எண்ணங்களை வைத்திருப்பவர்களுக்கும் எங்கள் நிலைமையை உணர்த்தும் பொருட்டு அரசாங்கத்தில் பெண் அங்கத்தினரின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு முயற்சித்தோம்.

### குடும்ப சேவை

"திருமதி லோச்சிம் புகழ் வாய்ந்த ஒரு எழுத்தாளர். இவர் அரசாங்க சேவையில் கடமையாற்றுவதுடன் பெண் இராணுவத்தினருக்கு ஆலோசனையாளராகவும் கடமையாற்றுகின்ருர்.

குறிப்பிட்ட சில பெண்களாலேயே உயர்ந்த பெண்களின் நிலையை, உயர்த்த முடியாவிட்டாலும் தாழ்த்தாமல் மற்றப் பெண்கள் வாழவேண்டுமல்லவா? குடும்பத்தைத் திறமையுடன் நிர்வகிப்பதே நாட்டுக்கு பெண்கள் செய்யும் பெரிய சேவையாகும். இச் சேவையுடன் பெண்கள் நாட்டுக்கும் சேவைபுரிய முன்வந்தால் அதுவே போதுமானது. ஆனுல் பெண்கள் சேவை செய்வதற்கு புறப்படும் பொழுது தமக்கும் தமது கடமைக்கும் அப்பழுக்கில்லாமல் நடக்கவேண்டும். கர்வம், அகங்காரத்தை விட்டு பண்புடன், கடமையுணர்ச்சியுடன், துணிவுடன் சேவைசெய்ய வேண்டும்.

இப்படி வாழ்ந்ததினுலேயே திருமதி லோச்சிம் போன்றவர்கள் போற்றப்படுகின்றனர்.

## முடமான குழந்தைகளுக்கு பள்ளிக்கூடம்

நெதர்லாண்ட்சின் ஆசிரியரும், கவிஞருமான மேய்ட்டர் லிங் "நீலப் புரு" என்ற ஒரு கதையை எழுதியுள்ளார். முடமான டச்சுக் குழந்தைகளுக்கு இக்கதை பல படிப்பினைகளை உணர்த்துவதாக அமைந்துள்ளது. முதன் முதலாக டச்சுப் பெண்கள் சாரணப்படையில் முடமான பெண்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்டுள்ள தனிப்பகுதிக்கு "நீலப் புரு" என்று பெயர். யுத்த காலத்திற்குப் பிறகு முடமான சிறுவர்களுக்கும் 'மிட்டில்' பள்ளிக்கூடங்கள் என்ற தனிப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

மேய்ட்டர் லிங் எழுதிய கதையில் மிட்டிலும் அவன் சகோதரன் டில்ட்டிலும் மகிழ்ச்சியை அளிக்கும் நீலப் புருவைத் தேடி அலைகின்றனர். அப்புருவைத் தங்கள் தங்கள் அண்டை வீட்டுக்காரரான முடமான, தனியாக வசிக்கும் முடவனுக்குக் கொடுக்க விழைகின்றனர். அவர்கள் கனவுலகத்தில் அப் புருவைப் பிடித்துவிடுவதாகக் காணும்போதெல்லாம் அப்புரு தன் நிறத்தை இழந்துவிடுகிறது. இறுதியில் தங்கள் வீட்டிலேயே இருக்கும் சாதாரணப் புருவை அவருக்குப் பரிசளிக்கத் தீர்மானித்து விடுகின்றனர். அப்புருவை முடவன் பெற்றுக்கொண்டதும் புரு தன் நிறம் மாற்றமடைந்து நல்ல நீல நிறத்தைப் பெறுகிறது. படுத்த படுக்கையாக இருந்த முடக்குழந்தை பெரு மகிழ்ச்சியடைந்து முன்னைவிடத் தெம்பாக இருக்கிறது. ஒருநாள் கூட்டைச் சுத்தம் செய்துகொண்டிருக்கும் போது புரு பறந்தோடி விடுகிறது. அதைத் தேடிக் கண்டுபிடிக்க முடியுமா? அப்போது நாம் எல்லோரும் மகிழ்ச்சியுடனிருக்கலாம் என்று கதையில் குழந்தைகள் கேட்கின்றன. இக்கதை அர்த்தபுஷ்டியுள்ளது. உலகம் முழுவதுமுள்ள குழந்தைகள் விரும்பிக் கேட்கின்றன.

ஆகவே 'நீலப் புரு' என்ற பெயர் முடமான குழந்தைகளின் சாரணர் பகுதிக்கு மிகப் பொருத்தமானதாகக் கருதப்பட்டது. பல்லாண்டுகளாக இக்குழந்தைகள் தங்களின் வ்சேஷ பயிற்சி பெற்ற தலைவர்களின் பராமரிப்பில் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்துள்ளன. இத்தகைய தலைவர்களில் ஒருவர் தான் ஸ்ரீமதி ஸ்பாக்லர். இவர் தன் ஆயுள் முழுவதையும் இப்பிரச்சினைக்காகவே கழித்துள்ளார்.

முடமான குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குச் செல்லவியலாமல் இருப்பதைக் கண்டு கண் கலங்கினுர். ஏனெனில் அவர்களுக்குப் பள்ளிக்கூடம் சென்றுவர விசேஷவசதிகள் இல்லை. அல்லது அவர்களுக்கென்று பிரத்தியேக பள்ளிக்கூடங்கள் இல்லை. ஸ்ரீமதி ஸ்பாக்லர் இதைக் குறித்து ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டு முதன் முதலாக ஆம்ஸ்டர்டா

(2ம் பக்கம் பார்க்க)

## புன்னகை பூக்கும் வீட்டில் ஸ்ரீதேவி வாசம் செய்வாள்

— வாசுகி —

**விடுமுறைக் காலத்தில் வீட்டுவேலைகள் குவிந்து விடுவதினுலேயே அந்நாட்களைத் தாம் வெறுப்பதாகக் கல்லூரியிற் படிக்கும் ஒருபெண் ஒருவரிடம் கூறினுர்.**

**இப்படியாகப் பெண்மணிகளால் தங்களுக்கே உரித்தான குடும்பப் பொறுப்பை ஏற்பதற்கு அஞ்சினுல் பெண்களின் எதிர்காலம் என்னுவது?**

பெண்ணின் உரிமைகளை அவளுக்கு யாரும் அளிக்க வேண்டியதில்லை. அவளின் கடமைகளில் இருந்தே அவள் தனது உரிமைகளை அடைகின்ருள். ஆகவே பெண்கள் தயங்காமல் தங்களின் கடமைகளை செய்யும்பொழுது உரிமைகளும் அவர்களை வந்தடையும்.

இன்று பல பெண்கள் வீட்டு வேலைகள் செய்வதற்கு அஞ்சுகிருர்கள், வெட்கமடைகின்றனர்.

படித்த பெண்களாயின் தாங்கள் அடுக்களைக்குள் புகுந்தால் தங்களின் பட்டங்களிலும் கரி படிந்துவிடும் என எண்ணுகின்றனர்!

பெண்கள் தமது கடமைகளைச் செய்யவேண்டியிருப்பதினுல் வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடக்க வேண்டுமென்பதில்லை. ஆனுல் தமது குடும்பப் பொறுப்பை உதறிவிடக் கூடாது. இன்றைய உலகில் கல்லாதவர் தொகை மிகவும் குறைவு. இதனுல் கற்றவர்களை யாவரும் தங்களின் குடும்பக் கடமைகளை உதறித்தள்ளிவிட முடியுமா?

பெண்கள் என்றுமே ஆண்களைவிட அமைதியாகவே வாழ்பவர்கள். மேல்நாட்டுப் பெண்களே முதலில் ஆண்களுடன் சரிசமமாக வாழ்வதற்கு முன் வந்தனர். ஆனுல் இன்று இம் மேல்நாட்டுப் பெண்களே இம் மாதிரியான அமைதியற்ற வாழ்க்கையை விடுத்து அமைதியாக வாழ்க்கை நடத்துகின்றனர்.

மேல்நாட்டிலே ஒருபல்கலைக் கழகத்தில் அங்குள்ள பெண்கள் தங்கள் படிப்புமுடிந்தபின் எவ்விதமான வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புகின்றனர் என்பதை அறிவதற்கு வாக்கெடுப்பு நடைபெற்றதாம்.

அப்பொழுது எல்லோருக்கும் ஆச்சரியமளிக்கும் முறையில் தங்களின் படிப்புக்குரிய காலம் முடிந்தபின் அமைதியாக குடும்பத்துடன் வாழ்வதற்கே விரும்புகின்ருேம் என வாக்களித்த பெண்களின் தொகையே அதிகமாக இருந்ததாம் அளவுக்கு மீறின சுதந்திரத்தை அடைந்ததினுலோ என்னவோ இப்பெண்கள் சுதந்திரமான வாழ்க்கையை வெறுத்திருக்கலாம்.

இன்றைய உலகில் பெரிய ஸ்தானத்தில்கூட பெண்களின் பெயர்கள் இடம்பெறுகின்றன. பெண்களின் பெரும் நாட்டுப் பணியினுல், சேவையினுல் ஒரு நாடு உயர்கின்றது. இப்படியாக பெண்கள் பெரும் சேவை செய்கின்றனர். இதனுல் எல்லாப் பெண்களுமே தங்களுக்கே உரித்தான கடமைகளை விரும்பாமல் நாட்டுச்சேவையாற்றப் புறப்படுவதா?

இன்றைய உலகம் போற்றும் பெண்கள்கூட தங்களின் குடும்ப கடமைகளைச் செய்வதற்கு வேண்டியவசதிகள் இருந்ததினுலேயே குடும்பக் கடமையைவிட்டுச் சேவையாற்றப் புறப்பட்டிருக்கலாம். பெண்கள் தங்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கோ, அல்லது ஒருதேவைக்காகவோ நாட்டுக்கு சேவையாற்றப் புறப்படலாம்.

ஆனுல் தனது குடும்பத்தைக் கவனிக்கவேண்டிய ஒருசந்தர்ப்பத்தில் தனது கடமையை அவள் எடுத்துக் கொள்ள வேண்டியவளாகிருள். ஒரு பெண்ணின் செம்மையான ஆட்சியின்கீழ் நடைபெருத ஒரு குடும்பம் அமைதியற்றுத் தத்தளிக்கும் பொழுது அவள் தனது இல்லத்தைத் துறந்து கடமையை மறந்து பிறதுறைகளில் ஈடுபடுவது அநீதியாகும். இதனுல் அவளின் உரிமையேபறிக்கப்பட்டுவிடும்.

பாடசாலை ஒன்றில் ஆசிரியையாகப் பணிபுரியும் ஒருபெண் அங்குள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கட்டுப்படுத்தி நெறியான பாதையில் அவர்களை நடப்பிப்பதற்கு முயற்சிக்கிருள்.

ஆனுல் அதேபெண்ஆசிரியையின் வீட்டில் தாயின் அன்பை, ஆதரவை, கண்டிப்பைபெருத அவளின் குழந்தைகள் ஒழுக்கமற்ற முறையில் வாழ்ந்து நாட்டுக்கே தீயவர்களாக மாறினுல் அப்பெண் ஆற்றியசேவைதான் என்ன? முதலில் ஒரு பெண்ணுக்கு வேண்டியது அவளின் குடும்பமே. பணக்காரப் பெண்களாயினும், படித்தபெண்களாயினும் தங்களின் வீட்டுப் பொறுப்புக்களை ஏற்று சரிவரச் செய்வதில் தயங்கக்கூடாது.

வீட்டுவேலைகள் செய்வதற்கு வேலைக்காரர் கிடைக்கவில்லையே என தினமும் மனம் கலங்கி ஏங்கி வேலைசெய்வதிலும், எனது கடமையை நானே செய்கின்றேன் என்ற பூரிப்பிலே பெண்கள் வேலைசெய்ய வேண்டும்.

எந்நேரமும் சிடுசிடுத்தமுகத்துடன் வேலைசெய்கின்றபெண்கள் இருக்கும் வீட்டில் எந்நேரமும் இருளே சூழ்ந்திருக்கும். இதனுலேயே ஒரு பெரியார் "எந்த வீட்டில் மனைவி மனக்கசப்பில்லாது, கண்ணீர் விடாது, புன்னகையுடன் விளங்குகிருளோ அந்த வீட்டைத் தேடிவருவாள் சீதேவி" எனக் கூறியிருக்கிருர்.

குடும்பக் கடமையை உணராத பெண்ணின் முகத்திலும், குடும்பப் பொறுப்பை ஏற்க விரும்பாத பெண்ணின் முகத்திலும் புன்னகையைக் காண முடியுமா? இப்படியாயின் புன்னகையற்ற பெண்ணின் இல்லத்திற்கு சீதேவிதான் வருவாளா?

இதனுல் நிச்சயமாக அப் பெண்ணினுல் அவளின் குடும்பமே வறுமையில் சிக்கிப் பரிதவிக்கும். ஒரு பெண்ணின் முதல் கடமை அவளின் குடும்பத்தை நிர்வகிப்பதே இக்கடமையிலேயே அவளின் "தனது கடமைகளைச் சரிவரச்செய்கின்ற பெண் உயர்ந்த அந்தஸ்தை அடைகிருள். தான் தலைவியாய் இருந்து நடத்தும் குடும்பத்தில் அவள் அடிமையாகக் கிடப்பதில்லை. அரசியாய் ஆட்சி செலுத்துகிருள்" என மகாத்மா காந்தி கூறியிருக்கிருர்.

பெண்கள் தங்கள் கடமைகளை மறக்கும் பொழுது அவர்கள் பெண்மை என்ற அந்தஸ்தில் இருந்து தாழ்த்தப்படுகின்ருர்கள். தியாகச் சின்னமான பெண் சிறுமை நிலையை அடைகின்ருள். இதன் விளைவு என்ன? பெண்கள் அடிமையாகின்ருர்கள்.

## தெளிவு

(11ம் பக்கத் தொடர்ச்சி)

பூச்சி ஒன்றை உணவுக்காகப் பல எறும்புகள் கூட்டாகச் சேர்ந்து இழுத்துச் சென்றன. இதைப் பார்த்த போது ஆறுமுகத்தின் கண்கள் கலங்கிவிட்டன. எறும்புகளின் ஒற்றுமை அவன் இதயத்தை ஈர்த்தது.

எழுந்து அமைதிக்காகச் சிறிது தூரம் நடந்தான்; பூமரங்கள் நடப்பட்டிருந் இடத்திற்குச் சென்ருன்; அங்கு மலர்ந்திருந்த மலர்களை மகிழ்வுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

மலந்திருந்த மலர் ஒன்றில் வண்டு ஒன்று தேனருந்திக் கொண்டிருந்தது. இன்னொரு வண்டு எங்கிருந்தோ பறந்து வந்தது. தேனருந்த அந்த மலரை நாடிவந்தது. தேனருந்திக்கொண்டிருந்த வண்டு சிறிது அகன்றிருந்து அந்த வண்டுக்குச் சிறிது இடம் கொடுத்தது. அந்தக் காட்சியை இரு கண்களாலும் உற்று நோக்கிக்கொண்டிருந்த ஆறுமுகத்தின் நெஞ்சம் நெகிழ்ந்தது. அந்த வண்டுகளின் ஒற்றுமையைக் கண்டு "ஒரே மலரில் எவ்வளவு ஒற்றுமையாகத் தேனருந்துகின்றன; அந்த வண்டுகளின் ஒற்றுமை உள்ளங்கூட எனக்கில்லையே" என வருந்தினுன்.

ஆறுமுகத்தால் அங்கு நிற்க முடியவில்லை. வீட்டை நோக்கி நடந்தான். வரும் வழியில் வீதியோரத்தில் ஒரு காகம் இறந்துகிடந்தது. அந்தக் காட்சியைக் கண்ட இரண்டொரு காகங்கள் ஓலமிட்டுத் தமது அனுதாபத்தைத் தெரிவித்தன. அந்தக் காகங்களின் 'கா கா' என்ற ஓலத்தைக் கேட்டு எட்டுத் திசையிலுமிருந்து காகங்கள் பறந்து வந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட ஆறுமுகத்தின் உள்ளம் குமுறியது "இவைகள் எல்லாம் ஒற்றுமையாகவாழ எங்கிருந்து தான் கற்றுக்கொண்டனவோ" என்ருன்.

"அஃறிணைப் பிராணிகளிடமே ஒற்றுமை உணர்ச்சி இருக்கும் போது ஆறறிவு படைத்த — பள்ளிக்கூடத்தில் கற்ற — எனக்கு மாத்திரம் ஏனில்லை?" என வருந்தினுன்.

எறும்பு, வண்டு, காகம் மூலம் ஆறுமுகத்தின் உள்ளத்தில் ஒற்றுமை உணர்ச்சி உருவாகியது. இயற்கையின் மூலம் நல்லதோர் பாடத்தைக் கற்றுக்கொண்டான்.

ஆறுமுகம் தான் இனிமேல் அன்பாக, பொறுமையுடன், நல்லவனுக, பணிவுள்ளவனுக, தாய், தந்தை, ஆசிரியருக்கு அடங்கிய பிள்ளையாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் - உறுதியுடன் வீட்டை நோக்கி நடந்தான்.

புரியாத புதிராக இருந்த ஆறுமுகம் இயற்கையின் மூலம் புதிய தெளிவு பெற்ருன்.

**அத்தியாயம் 2**

# கேட்டிருப்பாய் காற்றே

**குறுநாவல்**

செ. யோகநாதன்

பேராதனை வாழ்க்கை குணவதிக்கு மிகவும் பிடித்துக்கொண்டுவிட்டது. வேலையில்லாமல் அவள் ஓய்ந்திருக்கும் வேளையிலே அடிக்கடி அவளுக்கு வீட்டு நினைவுகள் வரும். நினைவுகள் நெஞ்சினுள் தோன்றி அவள் மனதினை அலைக்க முயலும் அந்த வேளையில் அவள் நெஞ்சிலிருந்து அவளையறியாமலே பெருமூச்சுகள் சீறிக்கொண்டு எழும்.

எலமலையின் மலையடிவாரக் காம்பறைக்குள் அடிக்கடி அவளின் நெஞ்சம்முனகிக்கொண்டு உலவிவரும். டனியூசித்தாக்கம் உடலைப் புதைக்கும் விழுகையின் அந்திமப் பொழுதான காலையின் இருட்கருக்கலின் பொழுது நித்திரை விட்டெழுந்து வீட்டுக் கருமங்களைச் செய்ய ஆரம்பிக்கும் வேளையில் அனேக தடவைகளில் எலமலையிலேயே தான் நிற்பதைப் போன்ற பிரமையினை அவள் பெறுவாள்; அலுமினியப் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருப்பவள், திறந்துவிட்ட தண்ணீர்க் குழாயையும் மூடாமல் அப்படியே எண்ணத்திவலைகளின் கோர்வையற்ற பாதையிலே தடம் சறுக்குவாள்.

அதிகாலையில், உடம்பை முறுக்கிக்கொண்டு எலமலைக் காம்பறைக்குள் இருந்து அவள் உறக்கத்தில் விழிப்படையும் பொழுது, குப்பென்று கமறும் மலசல நாற்றம் அவளின் மூக்கைச் சுளிக்கவைத்து வயிற்றைச்குமட்டி ஓங்காளிக்கவைக்கும். அவளுக்கு நெடுந்திசையாக ஏழுபேர் கிடப்பார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையில். அந்த உறக்கத்தில் தான் அவர்களுக்கு நிம்மதியான முகம். நைந்துபோன 'போயர் கோட்' ஒன்றால் தன்னுடலை மூடிக்கொண்டு முதன் முதல் அந்தக் காம்பறைக்குள் இருந்து நித்திரைவிட்டெழும் குணவதி, மூககாயிக்கு அருகாக முதலில் சென்று அவள் துயிலும் விதத்தை அசையாமல் பார்த்துக் கொண்டிருப்பாள்.

தன்னுடைய வீட்டிலுள்ள அந்த ஏழுபேரையும் வெகு தொலைவிலிருந்துதான் அவளால் தனித்தனியாகப்பிரித்து உணரமுடிகின்றது; மானசீகமான முறையினில் ஒவ்வொருவருடனும் உரையாட முடிகின்றது. அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமானவர்கள்! அவர்கள் ஒவ்வொருவருள்ளும் ஒவ்வொரு உலகம்!

அவளின் தகப்பன் வீரய்யா. தேயிலைத் தோட்டத்திலே கொழுந்து கொய்யப் போவதுதான் அவனது வேலை. அந்த லயத்திலேயே அவன் மகா முரடனாயிருந்தான். தினமும் ஒரு சண்டையோடுதான் அவன் வீடு திரும்புவான். கருகருவென்று அடர்ந்து வளர்ந்திருக்கும் மீசையை முறுக்கிக் கொண்டு, 'முண்டாசை' இழுத்துப் பிடரிப்பக்கமாக அவன் சாய்த்துக்கட்டினானென்றால், அவன் யாரோடேயோ சண்டைக்குத் தயாராகிவிட்டானென்று மனதிற்குள் திடமாக நம்பிக்கொள்ளலாம். புல்லுள் கிடக்கும் அட்டை காலில் ஏறி, ரத்தம் குடித்து, காலிலிருந்து ரத்தத்தை கொப்புளித்துப்பெருக வைப்பதையும் கவனியாது ஒருவரை ஒருவர் அடித்துப் புரள்வார்கள். அவர்களது சண்டையினை லயம்முழுவதுமே கண்டுகளிக்கும். கோவணம் கூடக்கட்டாத குழந்தைகளும் பெரியவர்கள் பேசும் 'தூஷணை'ப் பேச்சுக்களை அங்கே நின்று அர்த்தம் விளங்காமலே கூவிக்கொண்டிருப்பார்கள்.

சண்டை ஓய்ந்த பிறகு ஒருவரை ஒருவர் கறுவிக்கொண்டு தோட்டத்துக் கணக்கப்பிள்ளையிடம் சென்று முறையிடுவது; கணக்கப்பிள்ளை அவர்களுக்கு தமது மனநிலையின் அந்த நேரத்தன்மைக்கேற்ப நீதிகூறி பலத்த ஏச்சுப் பேச்சுக்களுடன் அவர்களைக் கலைத்துவிட்டதும் அங்கே நித்தியமாகிவிட்ட நிகழ்ச்சிகள்; வீரய்யனைப் பொறுத்தவரையில் அது அவனது வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு சம்பவமாகிவிட்டது.

வீரய்யனுக்கு இடதுகண் ஊனமானதும், அவன் தனக்கு ஏற்பட்ட ஒரு பெரும்பேரிடரிலிருந்து தப்பியதும் அவனது துணிவின் பலத்தினாலேதான். வீரய்யனிற்கு வேட்டைக்குப் போவதென்றால் மிகவும் விருப்பம். அதோடு வேட்டையில் அகப்படும் மிருகத்[illegible]சியை கணக்குப்பிள்ளைக்குக் கொடுத்தால் அவரது நன்மதிப்பைப் பெறுவதோடு, தான் யாருக்கு அடித்து வம்பு பண்ணினாலும், துரை தனக்குச் சாதகமாகவே தீர்ப்பளிக்கும்படி கணக்கப்பிள்ளை தனக்கு வேண்டிய உதவிகள் செய்வார் என அவன் நம்பியிருந்தான்; அவன் நம்பியதும் நடந்துதான் வந்தது.

ஒருதீபாவளிக்கு முதல்நாள். வெறியூட்டத்தின்போதை அவனது அடிமன எண்ணங்களையெல்லாம் சீவுளிபோட்டு வெளியே வார்த்தைகளின் அனுங்கற் சீவல்களாய் வெளியேற்றிக் கொண்டிருந்தது. கையில் ஒரு கள்ளுப் போத்தலுங் கொண்டு தள்ளாடிக்கொண்டு நின்ற அவன், காம்பறைக்குள் வந்ததும் தன்னுடைய திவைவு கொண்ட கைகளுக்கு இரை தேடினான். அதன் முடிவாய் அவனுடைய மூன்று பிள்ளைகள் உச்சமான குரலில் அழுதுகொண்டிருந்தனர். அழுது கொண்டிருந்த ஒரு பிள்ளையின் வாய்க்குள் அவன் பலாத்காரமாக கள்ளைப் பருக்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுவிட்டான். வெளியேயுள்ள சுழரும் குத்துத்தடியைக்கண்டதும் அவனுக்கு வேட்டை நினைவு வந்துவிட்டது. அவன் ஒன்றுமே யோசிக்கவில்லை. வேட்டைக்குப் புறப்பட்டுவிட்டான்.

எலமலைத்தோட்டத்தின்சாய்வான கோட்டைமானாப்புல்திட்டிற்கு கொஞ்சந்தள்ளி காட்டுப் பன்றிகளின் நடமாட்டம் இருக்கின்றதென்பதை அவன் அங்கு படிந்திருந்த காலடிகளைத் தற்செயலாகக் கண்டதும் உணர்ந்துகொண்டான். காலடிகளைக் கண்கள் நோக்க வாய் ஊறிச் சப்புக்கொட்டியது.

வீரய்யன் முண்டாசை வரிந்து கட்டிக் கொண்டான். ஒரு பக்கம், தேயிலைச் செடிகள் கப்பாத்துப் பண்ணும்போது, ஏற்பட்ட காயமுடைய தோளை 'போயர்கோட்'டால் இறுக்கிக் கொண்டு, சப்பையாய் சளிந்த மூக்கை விரல்களால் சுரண்டியபடியே, மானாப்புல் திட்டை நோக்கி நடந்தான். அவனது கையிலே சுழரும் குத்துத்தடியும், கண்ணற்ற ஊசியும் வேட்டைக் கருவிகள் என்பதைத் தமது கூர்மையில் காண்பித்துக் கொண்டிருக்கின்றன.

வீரய்யனுக்கு எதிராக கங்காணி மருதமுத்து நடந்துவருகிறான். வாக்குக் கண்ணனை மருதமுத்துக் கங்காணியைக் கண்டதும் வீரய்யனின் மனம் உலர்ப்பு இயந்திரத்தில் கருகிச் சுருளும் தேயிலைக்கொழுந்தாகிச் சுருள்கின்றது. மனம் வெம்மை நீராகிக் கொப்புளிக்கின்றது. அடிக்கடிவீரய்யனைப் பற்றி, கணக்கப்பிள்ளையிடம் கூறி 'பந்தங்காவி' இருக்கின்றான். வீரய்யனின் மனம் வெறுப்பைக் கககினும், உடல் மருதமுத்துவிற்கு வளைந்து கூழைக்கும்பிடுபோடுகின்றான்.

"சலாங்க..."

மருதமுத்துவின் முகத்தில் ஏளன ரேகை இலேசாகக் கோடிட்டு அழிகின்றது. வெற்றிலைத் துப்பலை, 'விளிச்' சிட்டு சவுக்குச் செடியில் துப்பிக்கொண்டே, வீரய்யனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு தேயிலைத் தவறணையை நோக்கி நடக்கின்றான்.

வீரய்யன் மனதிற்குள் மருதமுத்துவைச் சபித்துக்கொண்டு தொடர்ந்து நடக்கின்றான். அதிருப்தியுற்ற மனம் திடீரென பன்மடங்கு உற்சாகம் பெறுகின்றது. அவனுக்குப் பின்னால் அவனையறியாமலே வந்துகொண்டிருந்த அவனது 'ரூவா', 'கேட' என்ற இரண்டு நாய்களும் திடீரென்று மூக்கை மூக்கை உறிஞ்சிக்கொள்ளுகின்றன. வீரய்யனின் கண்கள் கூர்மை பெறுகின்றன.

மொட்டைக்கல் வெடிப்புக் கருகில் உள்ளவம்புப் புதரின் அடியிலிருந்து அசையும் அந்தக் கறுப்புகள்...

அவனுடைய கண்கள் களிப்பில் மின்னுகின்றன; கைகளில் முறுக்கு ஏற, அவன் குத்துத்தடியை இறுக்கி அழுத்துகின்றான். மெல்ல மெல்ல அவன் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் புல்லின்மேல் மெத்தென்ற தன்மையினில் பதிகின்றன. முதுகை வளைத்து, முழங்காலை மடித்த நிலையில் முன்புறமாக நகர்த்தி தலையை உயர்த்தி, கண்களில் அந்தக் கறுப்பையே இலக்காய் ஏந்திக்கொண்டு அவன் முன்னேறிக்கொண்டிருக்கிறான். தோம்பு இலைகளும், கோட்டைமானாப் புல்லும அவனது செவிகளில் ஸ்பரிஸம் கொடுத்து 'கிச்சுளு' மூட்டுவதையும் அவன் லட்சியம் செய்யவில்லை. அவனுக்கு இப்பொழுதுள்ள ஒரேயொரு வெறி பன்றிகளைக் கொன்றுகுவிப்பதுதான்.

மொட்டைக்கல் வெடிப்புக் கருகில் உள்ள வம்புப் புதரில் புற்பற்றைக் குழியுள் வீடு கட்டிய பன்றி இப்பொழுது வீரய்யனுக்கு தெளிவாகவே தெரிகின்றது. அது அங்கே குட்டிகளை ஈன்றுவிட்டு அவைகளுக்குக் காவலாக அங்கே இறுமிக்கொண்டு திரிகிறது. அப்படியான பன்றிகளை எப்படிப் பிடிப்பதென்பது அவனுக்குத் மிகவும் நன்றாகத் தெரியும். அவன் முதலில் தன்னுடைய 'ரூவா' நாயை வம்புப் புதரடியை நோக்கி ஏவிவிட்டான். ரூவா 'கெற்றபுள்'ளிலிருந்து எகிறுண்டு தெறிக்கும் கல்லாய் தாய்ப்பன்றியை நோக்கி நாலுகாற் பாய்ச்சலில் விரைந்தது. தன்னை எதிர்நோக்கும் நாயைக் கண்டதும் பன்றிக்கு ஆக்கிரம் வந்துவிட்டது. உடனே அது நாயைத் தூரத்திக்கொண்டு மறுபுறத்தால் ஓடியது. வீரய்யன் அதையே தருணமாகக்கொண்டு வம்புப் புதரடியை நோக்கி ஓடோடிச் சென்று ஒரு பன்றியைப் பிடித்துக் கழுத்தை முறுகித்திருகிக் கொண்டு மீண்டும் மரத்தடிக்கு வந்துவிட்டான். உர்உர் ரென்று ஓசையுடன் மீண்டும் புதரடிக்குத் திரும்பிவந்த பன்றி, தன்னுடைய குட்டிகளில் ஒன்றைக் காணாததைத் தெரிந்துகொண்டு மீண்டும் ஆக்ரோஷத்துடன் பள்ளத்தை நோக்கித் திரும்பியது. அதனுடைய உருண்டுதிரண்டு நிற்கும் சதைக் கோளங்கள் விம்மிப்புடைத்து அதன் சினத்தை வெளிப்படுத்தின. அதற்கிடையில் ரூவாவும் கேடயும் முன்னேக்கி மீண்டும் பாய்ந்தன. பன்றி ரூவா நாயை நோக்கி மண்ணைக் கிளறியபடி முன் பாய்ந்து, அதன் வாலைப் பிடித்து வாயால் இழுத்து வீசி எறிந்தது.

வீரய்யன் முண்டாசை இழுத்து வரிந்து பின்புறமாகத் தள்ளிக் கட்டிக்கொண்டான். காட்டுப்பன்றியை நோக்கி குத்துத்தடியை வீசுவதற்கு அவன் தயாராகிவிட்டான். ஒரு காலடியில் ஒற்றைக்காலை மடித்துவைத்து, பிரிஷ்டபாகத்தை அதில் தாங்கி, மறுகாலை முன்னே அழுத்தமாக ஊன்றிக்கொண்டு வலதுகை முஷ்டிக்குள் பலந்திரட்டி, குத்துத் தடியை முதல் பன்றிக்கு நேராக வீச்சமாகச் சீறச் செய்து எறிய...

'ஊர்...ர் உர்ருர்ர்...'

பன்றி முன்னங்கால்களை மண்ணோடு விறாண்டி, முன் நிமிர்ந்தது. தடிகுத்திய வேதனை அதன் பலத்தைப் பன்மடங்கு அதிகரித்தாற்போல அது டலங்கொண்டு சீறியது. வீரய்யன் மிகவும் பயந்து பக்கத்திலிருந்த இத்தி மரமொன்றில் தாவி ஏறிக்கொண்டான். பன்றி அவனிருந்த மரத்தின் கீழாக வந்து அம்மரத்தை தனது பற்களால் கடித்துக்கொண்டிருந்தது. அதற்கிடையில் வீரய்யனின் மற்ற நாயான கேப், அதைப் பயன்படுத்தி குட்டிகளைத் தூக்குவதற்காக புதரடிக்கு ஓடியது. பன்றிக்கு இரண்டுங்கெட்டான்நிலை. அது ஒரு நிமிடம் தாமதித்துவிட்டு, மீண்டும் புதரடிக்குப்போக முனைய, வீரய்யன் மரத்திலிருந்தவாறே குனிந்து பன்றியின் பின்னிட்டான் கால் நரம்புகளை எட்டிய அல் சாய்த்துக் குத்தி அறுத்தான். குத்தி அறுத்துவிட்டு அவன் கடக்கென்று நிமிர; அவனுக்குப் பக்கத்தில் புன்கூடைக்கு வெட்டப்பட்டுக் கிடந்த 'வம்பு'க்குச்சு ஒன்று துருத்திக்கிடந்த நிலையிலே அவனது கருமுழியின் அருகாகப் பிறிக்கொண்டு குத்திவிட்டது.

கண்ணிலிருந்து குருதி பிரவகித்து வடிந்து கொப்புளிக்க அவன் உரத்துக் கூவினான்.

வீரய்யன் மரணம் இனி தனக்கு நிச்சயமென நம்பிக்கொண்டான். இறுதியின் இறுதிக் கூவலொலியில், அந்தப் பகுதியில் வேலைசெய்து கொண்டிருந்தவர்கள் அங்கே திரண்டுகொண்டு ஓடிவந்தார்கள். அந்த வேகத்தில் பன்றி, கருஞ்சாக்கில் தடியொன்றைக் கட்டிக்கொண்டு உருளும் பொருளைப்போல உறுமிக்கொண்டே ஓடிவிட்டது.

வீரய்யனுக்கு அது கடவுள் விட்டவழியென்று சொல்லி, அவனை மனதிற்குள் எல்லோரும் திட்டிக்கொண்டார்கள்: "இந்த ரௌடி நாண்டுக்கிண்டு செத்துப்போகாமை இருக்கானே..."

வீரய்யன் ஒரு கண்ணை இழந்துவிட்டபொழுதும் அவனது முரட்டுத்தனம் அடங்கிவிடவில்லை. முன்னையைவிட இப்பொழுது அவனுக்கு முரட்டுத்தனம் மிகுந்துவிட்டது. 'அவிஞ்சகண்ணன்' என்ற புதிய பட்டப்பெயர் அவனுக்கு நிலைத்துவிட்டபொழுதிலும், அவனைப்பற்றிய பயம், தோட்டத்தின் எந்த மூலைமுடுக்கிலும் அணுவளவும் குறைந்துவிடவில்லை.

குணவதியின் மனம் என்ன காரணத்தாலோ அதற்குப் பிறகு வீரய்டனிலும் பரிவு கொள்ள ஆரம்பித்துவிட்டது. குணவதிக்கு அவளுடைய 'அம்மாயி' பாப்பாவில் அவ்வளவிற்குப் பற்றுதல் இருக்கவில்லை. பாப்பா வீட்டில் இருப்பதே மிகவும் குறைவு. எந்த நேரமும் துறுதுறுத்தபடி, அந்த நோஞ்சலான உடம்பை தேயிலைத் தொழிற்சாலையின் அரைப்பு மெஷினைப்போல அவள் வேகமாக இயக்கிக்கொண்டிருந்தாள். அப்படிக் கடுமையாக உழைத்தும் அவள் தனக்கென்று காதுகளுக்கு ஓலை கூட வாங்கிப்போடாது தன்னையே ஒறுத்து வாழ்ந்தாள். அந்தமன நிராசை அவளது ஒவ்வொரு செயலிலும் பிரதிபலித்தது. படுக்கையிற் புரளும்பொழுதும் அவளைச்சுற்றி பெருமூச்சின் ஒலி வளையங்கள் கோர்வை கட்டி எழுந்து மறையும்.

[10-ம் பக்கம் பார்க்க]

---

# காட்டுமிராண்டி ?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

புயலாகிச் சண்டமாருதமாகிச் சூறுவளியாக விசுவரூபமெடுக்கின்றது. அதன் வேகத்தில் பண்பு, கலாச்சாரம்,நட்பு, உறவு ஆகியனவெல்லாம் தூக்கியெறியப்படுகின்றன, தொலை தூரத்தில்.

மனிதத்தன்மை புழுதியிலே விழுகின்றது. நாக்கு அசைவிலே உருவான சொற்கள் இப்போது கைகளை, கால்களை, பற்களை அசைக்கின்றன.

வாய்ப்பேச்சுக் குறைகின்றது. அடி, பிடி, கைகலப்பு அதிகரிக்கின்றது. இரத்தம் வானவெளியில் விழுகின்றது.

பழம் வெட்ட உதவிய கத்தி பாதகக் கொலைக் கருவியாகிறது.

ஊன்றுகோல் உயிர் குடிக்கும் ஆயுதமாகிறது. அந்தக் காட்டுமிராண்டிமனிதன் எதிலும் கலந்துகொள்ளாமல் தூர ஒதுங்கிநின்று பார்க்கிறான்.

புயலை அடக்கியா அது ஓய்கிறது. அது தொடங்கியது போலத்தானே ஓய்வது அல்லவா? அதே போல் இந்தப் புயலும் ஓய்கிறது.

* *

புயல் ஓய்ந்தபின் ...

பெருவாரிபேர் குற்றுயிராகக் கிடக்கின்றனர். காலிழந்தோர், கையிழந்தோர், மூக்குடைந்தோர் இப்படிப் பலபேர்.

நாலைந்துபேர் குடல்சரியப் புழுதியிலே உயிரிழந்து கிடக்கின்றனர். நாவின் அசைவிற்குப் பலியானோர் இவர்கள்.

காட்டுமிராண்டி மனிதன் மெல்ல மெல்ல அடிமேல் அடி வைத்து இந்த ரணகளத்துக்கு வருகிறான்.

இறந்தவர்களின் உடலங்களைக் குற்றுயிராகக் கிடப்பவர் முன் கொண்டுபோய்ப் போடுகிறான். குற்றுயிராகக்கிடப்பவர்களைப் பார்த்துக் கம்பீரமான குரலில் கூறுகிறான்:

"ஏன் இருக்கிறீர்கள், எழுந்து சாப்பிடுங்கள் என் அருமையான கொழுத்த இறைச்சி. என்ன, விருப்பம் இல்லையா? ஐயையோ, பிறகு ஏன் இவர்களைக் கொன்றீர்கள்? நாங்கள் பசிக்குத்தான் மனிதர்களைக் கொன்றுதின்போம். எழும்புங்கள்! எழும்புங்கள்! இதிலென்ன வெட்கம்? இறைச்சியை வீணாக்காதீர்கள். கொன்றதைத் தின்னத்தானே வேண்டும். இல்லாவிட்டால் கொன்றிருக்கவே கூடாதே!"

'நாகரீகங்கள்' அமைதியாகின்றன. வானவெளியில் அமைதி பிறக்கிறது.

# கேட்டிருப்பாய் காற்றே

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அயறு கட்டிய புண்களைப் போல அவளுக்குள் எத்தனையோ மன அவியல்கள். அவை, இரவின் செறிவினுள், அவளுடைய நித்திரையற்ற மனக்கலக்கத்தினில் நினைவுத் தசைகளைப் பொருக்குவெடித்த நிலமாய் பிளந்து பிய்த்து வேதனையை ஓயாது குருப்பித்து சீழையும், இரத்தக் கட்டிகளையும் வெளிப்படுத்தும் மாறாத நோய் போல அவளுடைய மனதினை துயரப் பெருமூச்சுக்களிலேயே பிணித்துக்கட்டிவிட்டது.

ஏறக்குறைய அந்தவீட்டின் முழுச் செலவும் அவளது கையினாலேதான் சமாளிக்கப்பட்டது. நோயோ, நொடியோ, பண்டிகைச் செலவுகளோ எது வந்தாலும் அது அவளின் கையிலிருந்து செல்லும் பணத்தினாலேயே தீர்க்கப்பட்டது. தன்னுடைய முருக்க வற்றல் போன்ற கரங்களை மேலுயர்த்தி நெருடி, விரல்களை ஒன்றோடொன்று பல்லுப் பூட்டி நெட்டி முறித்துவிட்டு புகையிலையை வாயில் திணித்துக்கொண்டு 'வேலையாறிக்' கொள்ளும்பொழுதும் அவளுடைய முகம் சருகிய தோம்பிலையைப்போல வாடித்தான் இருக்கும். கங்காணி உயர மலையில் ஏறவில்லையே என்று கெட்ட வார்த்தைகளால் தூஷிக்கும்பொழுதும்-காமன் பண்டிகையில் ரதியின் அழுகுரல் பிரலாபத்தின் உச்ச வேடிக்கையில் குபீரிடும் சிரிப்பின்பொழுதும் அவளது முகத்தினில் ஒரே வித்தன்மை; சலனமற்ற வெற்றுப் பார்வைதான் நிலைத்து நிற்கும்.

ஆனால் அந்த முகத்திலும் புன்னகை ஒளிப்பினை தூண்டிப் பிரகாசிக்கவைக்கும் ஒரு உயிர் இருக்கத்தான் செய்தது. எத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் அவள் தன்னுடைய மூத்தமகள் புவனநாச்சியாரை நினைத்துக்கொண்டாள் என்றால் அவளுடைய வரண்டு சுருங்கிய முகத்தினில் புத்திரத்தம் கண்டி நிறைந்து-இளமையின் கெக்கலிப்பினில் கெம்பும் மகிழ்[illegible] அலையாட[illegible]தைக் கண்டு [illegible]ள்ளலாம்.

புவனாச்சியார் தோட்டப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வரை படித்துவிட்டு-'ஆளாகிய பின்' அந்த இருண்டகாம்பறைக்குள்ளேயே தஞ்சம் புகுந்துகொண்டாள். அவள் சுமாரான அழகி. பென்னம் பெரிய வட்டக்கண்களை வெட்டி, தன்னோடு பேசுபவர்களை அவள் பார்க்கும் மோகனமான வசீகரிப்புப் பார்வையிலே, தாயின் மனம் கூடை நிறையத் தேயிலைக் கொழுந்தைக் கொய்துவிட்டாற் போன்ற நிலையினில் பூரிப்படைந்து துள்ளிமகிழும். அந்தவேளையில் அவளின் விழியோரமாக கண்ணீர் முத்துக்கள் உடைந்து சிதறும். அவளை பாப்பா கண்ணிற்குள் மணியாகக் காத்தாள்; தேயிலைப் பதியன்களை தவறணையுள் வைத்து எவ்வித சேதமுமின்றி பக்குவமாய் வளர்க்கும் தேயிலைத்தோட்ட நிர்வாகியைப் போல, அவளுடைய சொல்லும், செயலும், உயிரும் புவனத்தை மறைந்தும், மறையாமலும் நின்று காத்தன.

எலமலையின் இரண்டு தலைமுறைகளைப்பற்றி பாப்பா நன்கு தெரிந்துவைத்துக் கொண்டிருப்பவள். காமாந்தகாரக் கண்களின் பார்வையுள் சிக்குண்டு, விருப்பற்ற அருவருப்பூட்டும் வெறுக்கத்தக்க துளிநேரப் போராட்டத்தில் சாண்டப்படும் தொழிலாளி வர்க்கம் என்ற ஒரே காரணத்தால் வாயடைத்துப் போய், பண முதலைகளிடம் தங்கள் கற்பைப் பறிகொடுத்து, அந்த மனவடுவோடேயே வாழ்வைக் கண்ணீரோடு கழிக்கும் எத்தனையோ இளம் அபலைப் பெண்களை அவள் அறிவாள். அவள்கூட விரய்யானின் முரட்டுத்தனம் என்ற துணையின் வலிமையினால்தான் அந்த இழிநிலையை இன்றுவரை அடையாமல் இருக்கின்றாள்.

ஆனால் அதற்காக — அந்த நரிகளிடம் வெறுப்புக்கொண்டு விட்டு வேலைக்குப் போகாமல் இருந்துவிட முடியாது. அவற்றையெல்லாம் சொற்ப நேரக் கண்ணீரோடேயே மறந்துவிட்டு, மீண்டும் தோட்டத்துத் தேயிலைச் செடிகளின் மென் கொழுந்துகளைக் கொய்யப் போகவேண்டிய நிர்ப்பந்தநிலையின் அடிமைத்தளையில் அவர்கள் பிணைக்கப்பட்டிருந்தார்கள். ஒருத்தி அதையே பெரிது பண்ணி அதற்காக அழுது கொண்டிருந்தாளென்றால் அவளது பிள்ளைகள் யாவுமே ஒரு மாதகாலத்திற்கு பசியால் அழுதுகொண்டிருக்க வேண்டியதுதான். இன்னொரு விதத்தினில் உடலும்சரி, உயிரும்சரி அது தேயிலைச் செடிகளோடு வெளிக்குத் தெரியாத உருவமற்ற விலங்குகளால் பிணித்துக் கட்டப்பட்டுவிட்டது.

பனியினால் சமுவுண்டு, பசுமையில் சிலிர்த்து நிற்கும் முருக்க மரம்போல் புவனமும் இளமைக்கட்டில் தளதளவென்று செழித்து, சவுக்கமரத்தின் மெல்லசைவைப் போல, புன்னகையை முகத்தினில் ஒளிக்கீறிட வைத்துக்கொண்டு காம்பறையின் முன்வாசலில் எதையோ எதிர்நோக்கிக் காத்து நிற்பவளைப்போல நிற்பாள். வெகுதொலைவாக உயரத் தெரியும் மலைக் குவடுகளில் அவளுக்கு அப்படி என்னதான் வாஞ்சையோ தெரியாது. அதையே அவளின் பெரிய விழிகள் துருவிக்கொண்டிருக்கும். சலசலக்கும் சிற்றருவி, கருநீலமலையின் உடலைக் கீறிப் பிதுங்கி வழிவது வெகுதூரத்திலிருந்து பார்ப்பதற்கு மிகவும் அழகாகத்தான் இருந்தது. நீர் சுரக்கும் உச்சியில், பால்வெள்ளையில் படிந்துகிடக்கும் முகில்கள் கூட, நீரருவியின் வெண்மையின் முன் ஒளி மங்கியிருந்தன. நீலவான விரிவு வெறுமையில் மங்கிக்கிடந்தது. வெ[illegible]தாலையில் தெரியும் அந்த அருவி நீரைத்தான் குடிவகை தயாரிப்பதற்காக யாரோ ஒரு கம்பெனியினர் எடுத்துச் செல்கின்றார்கள். அந்த நீரை, அந்த மலையடிவார மக்கள் குடித்தறியார்கள். ஒருவேளை அந்த நீரைப் பருகவேண்டும் என்ற வேட்கையின் மேலீடால் தான் அவள் மலைக்குவட்டையே பார்த்தபடி நிற்கின்றாளோ?

பாப்பாவிற்கு அவள் அப்படி நிற்பது மனதிற்குள் எதையோ செய்யும்; புவனத்தை உடனே உள்ளே போகும்படி சொல்லிவிடுவாள். எந்த நேரமும் பாப்பா கண்ணுறங்காத குட்டிபோட்ட பெட்டைப் பன்றியைப்போல புவனத்தைக் கண்காணிப்பதில் உஷாராக இருந்தாள். புவனத்திற்கு நல்லவனாக ஒரு மாப்பிள்ளையைத் தேடிக் 'கண்ணாலம்' கட்டி வைப்பதுதான் பாப்பாவிற்குள்ள ஒரே ஒரு கனவு! அந்த லயத்திலே புவனத்தின் 'கண்ணாலத்'தைப் போல நடந்ததும் இல்லை, நடக்கப்போவதும் இல்லை, என எல்லோரும் பேசிக்கொள்ளும் வகையில் புவனத்தின் கல்யாணத்தை நடத்தி முடிக்கவேண்டுமென்று அவள் கனவு கண்டுகொண்டிருந்தாள். அதற்காகவே அவள் தன்னுடைய முழுக் கவனத்தையும் வேலை செய்வதில் ஒருமுகப்படுத்தியிருந்தாள்.

மலைத்தோட்டத்தில் உள்ள உயிர்களின் துடிப்பிற்கு மாறுபட்ட துடிப்பு பாப்பாவினுடையது. அவர்கள் வயிற்றை நிரப்புவதற்காக எல்லா இன்பங்களையும் ஒறுத்து உடம்பைப் பிழிந்து வேலைசெய்தார்கள்.

பாப்பா இரத்தத்தை வியர்வையாய் வழிய வைத்தது வயிற்றுக்காக அல்ல; புவனத்தின் வாழ்விற்காகத் தான்.

மலையடிவாரத்தில் சடைத்து வளர்ந்து தேயிலைச் செடியைக் காக்கும் முருக்கமரம் திடீரென்று முறிந்து சாய்ந்து, தேயிலைச் செடியின் மேலே சரிந்து விழுந்து அதைச் சேதப்படுத்துவதைப் போல பாப்பாவினால் புவனம் திடீரென்று ஒரு இடியைத் தாங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டாள்.

அந்த இடிதான் எவ்வளவு பயங்கரமானது!

# தீப்பெட்டி பலவிதம்
## 'லேபிள்' சேர்க்கும் ஆர்வம்

பல நாடுகளின் தபால் தலைகளைச் சேகரிப்பதில் ஆர்வம் காட்டுவதுபோல நெருப்புப் பெட்டிகளின் மீது ஒட்டப்பட்டுள்ள 'லேபிள்'களைச் சேகரிப்பதையும் பலர் ஒரு பொழுது போக்காகக் கொண்டு ஆர்வம் காட்டி வந்திருக்கின்றனர். இந்த லேபிள்கள் கொண்ட சர்வதேசக் கண்காட்சி ஒன்று சமீபத்தில் டஸ்ஸல்டார்பில் நடைபெற்றது. எகிப்து மாஜி மன்னர் பரூக், தாய்லாந்தின் முன்னாளைய சக்கரவர்த்தி சுலாங்கார்ன், ஸ்பெயின் அரசர் அல்போன்ஸ் ஆகியவர்கள் இப்பொழுதுபோக்கில் மிகவும் ஆர்வம் காட்டினர். 60 நாடுகளைச் சேர்ந்த சுமார் 25,000 நெருப்புப் பெட்டி லேபிள்கள் இக்காட்சியில் இடம்பெற்றிருந்தன. ரஷ்யப் பிரமுகர் ஒருவர் இந்த லேபிள்கள் சேகரிப்பதற்காகவென்றே உலகின் பல பாகங்களுக்கும் சென்று திரும்பியிருக்கிறார்.

தபால் தலைகள் சேகரிப்பது ஒரு பொழுதுபோக்கா இருந்து வருகிறது எல்லாருக்கும் தெரியும். நெருப்புப்பெட்டி லேபிள்கள் சேகரிப்பதும் இம்மாதிரி பொழுதுபோக்குகளில் ஒன்றாக இருந்துவந்திருக்கிறது என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது. இந்தப் பொழுதுபோக்கில் சாதாரண மக்கள் மட்டுமின்றி ஸ்பெயின்தேசத்து அரசரான அல்போன்ஸ், எகிப்து நாட்டின் மாஜி மன்னர் பரூக், தாய்லாந்தின் முன்னாள் சக்கரவர்த்தி சுவாலாங்கார்ன் ஆகியோரும் கூட இதில் சிரத்தை காட்டி ஏராளமான லேபிள்களைச் சேகரித்து வந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

டஸ்ஸல் டிராப் நகரில் நடைபெற்ற லேபிள்கள் சேகரிப்புக் கண்காட்சியில் சுமார் 60 நாடுகளிலிருந்து 25,000 க்கு மேற்பட்ட நெருப்புப்பெட்டி லேபிள்கள் இக்[illegible]காட்சியில் இடம் பெற்றிருந்தன. இந்த லேபிள்கள் அநேகமாக ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியானவை. காட்சிக்காக மட்டுமின்றி, விலைகொடுத்து வாங்கவும், தங்களிடமுள்ள ரகத்தைக் கொடுத்துவிட்டு இல்லாத ரகங்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ளவும் இவை வைக்கப்பட்டிருந்தன. நெதர்லாந்து ராணிஜூலியானா, சீனாவின் மாசேதுங், பிரஸிடெண்ட் கென்னடி, கியூபாவின் பிடல் காஸ்ட்ரோ, கடைசி ஜெர்மன் சக்கரவர்த்தி வில்லியம்-II ஆகியோரின் உருவங்கள் கொண்ட லேபிள்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

போலந்து நாட்டிலிருந்து வந்த தீப்பெட்டிகளில் அந்நாட்டு விளையாட்டு வீரர்களின் உருவங்கள் காணப்பட்டன. சுவிஸ் தீப்பெட்டிகளில் பலரக தேசிய உடைகள் அணிந்த அந்நாட்டு மக்களின் உருவப் படங்கள் அச்சிடப்பட்டிருந்தன. பிரான்ஸ் தீப்பெட்டிகளில் கார்ட்டூன் படங்கள் இடம்பெற்றன. யூகோ லேபிள்களில் ரஸ்தா ஒழுங்குவிதிகள் பற்றிய படங்கள் காணப்பட்டன. ரஷ்யா, ஜாஸ்பாண்ட், ஜாஸ் சங்கீத வித்வான்களைத் தீப்பெட்டி லேபிள்களில் வெளியிட்டுக் கௌரவித்தது. ஜப்பானும் சீனாவும் சில நாடோடிக்கதைகளில் வரும் பாத்திரங்களைத் தங்கள் லேபிள்களில் வெளியிட்டிருந்தன. சுவீடன் 1870-ல் வெளியிட்ட சித்திரக்காட்சிகள் அந்நாட்டு லேபிள்களில் இடம் பெற்றிருந்தன.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்பெயின் வெளியிட்ட தீப்பெட்டி லேபிள்கள் எல்லாருடைய கவனத்தையும் கவருவதாக இருந்தன. ராஜ்யத்தின் தலைவர்களின் உருவப் படங்கள் அவைகளில் இடம் பெற்றிருந்தன. ஜானிவாக்கர் என்ற பிராந்திப் புட்டிக் கம்பெனியார் விளம்பரத்திற்காக தீப்பெட்டி லேபிள்களில் ஜானிவாக்கர் உருவத்தை வெளியிட்டிருந்தனர். இதுவும் கண்காட்சியில் முக்கிய இடம் பெற்றது.

இந்த நெருப்புப் பெட்டி லேபிள்களைக் கொண்டே கடந்த வரலாறுகளைப் பற்றி அறியமுடிகிறதென்றும் இந்த லேபிள்களைச் சேகரிப்பது முட்டாள்தனமான வேலையல்ல என்றும் இக்கண்காட்சி சம்பந்தமாக வெளியிடப்பட்டிருந்த ஒரு துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த லேபிள்களைச் சேகரிப்பது இலேசான காரியமல்ல. ஒரு ரஷ்யக் கோமகன் இந்த லேபிள்களைச் சேகரிப்பதற்காக என்றே உலகம் முழுவதும் சுற்றிவந்திருக்கிறார். இவர் 5384 நெருப்புப் பெட்டி லேபிள்களைச் சேகரித்தார்.

ஸ்டாம்பு சேகரிப்பவர்கள் எப்போது ஸ்டாம்புகளை ஒரு பொழுதுபோக்காக ஆரம்பித்தார்களோ அதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னமேயே நெருப்புப்பெட்டி லேபிள் சேகரிப்பது ஆரம்பமாகிவிட்டது.

# அறிவு வளருகிறதா?
## அல்லது
## சிதறிப்போகிறதா?

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்ல முறையில் தொழிற்படச் செய்வதே அறிவுக்கு உண்மையான அபிவிருத்தி என்பது என் கருத்து. அறிவும் உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும் போது, இதய தத்துவமும் விழிப்படைய வேண்டுவது அவசியமாகும். அவ்விதமின்றி, உள்ளமும் உடலும் வளர்ச்சி பெற்று, உணர்ச்சித் தத்துவம் விழிப்பு அடையாவிட்டால், அது கிரமமான வளர்ச்சியாகாது; வெறுங் கோணலாகவே போய்விடும். உணர்ச்சித் தத்துவத்திற்குப் பயிற்சிகொடுக்க வேண்டும் என்று சொல்லும் போது, இதயத்தைப் பண்படுத்துவதென்ற கருத்துப் படவே நான் சொல்லுகிறேன். எனவே, குழந்தையின் உடல் பண்பையும் உயிர்ப் பண்பையும் வளர்க்கும்போது, அதன் இதயப் பண்பையும் வளர்த்து வந்தால், உள்ளம் சரியானபடி எல்லா அம்சங்களிலும் வளர்ச்சியடைய முடியும். இவை மூன்றையும் தனித் தனியே பிரிக்கமுடியாது; ஒன்றாய் இயங்குவன இவை. ஆகவே, அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக வளரச் செய்யலாம். அல்லது ஒன்றுக்கொன்று தொடர்பில்லாது வளரச் செய்யலாம் என்று எண்ணுவது வீண் கனவுதான்.

உடல், அறிவு, இதயம் ஆகியவற்றைத் தமக்குள் அழகாக ஒத்தியங்கச் செய்யாமல் கல்வி புகட்டுவது காரணமாக, என்னென்ன கேடுகள் விளையுமென்பது கண்கூடாகக்கண்ட உண்மை. இக்கேடுகள் நம்மைச் சுற்றி எங்குமே மலிந்தி

(11-ம் பக்கம் பார்க்க)

# விண்வெளியில் மாரினரின் புதிய கண்டுபிடிப்பு

அமெரிக்கா விண்வெளியில் வெற்றிகரமாகச் செலுத்திய 'மாரினர் — 2' செயற்கைக் கோள் விஞ்ஞானிகளைத் திகைக்க வைத்துள்ளது. சுக்கிரனில் காந்த மண்டலம் அநேகமாக இருக்காது என்றே இந்தக் கோள் தெரிவித்திருப்பதுதான் விஞ்ஞானிகளின் வியப்புக்குக் காரணம்.

விஞ்ஞான முன்னேற்றத்திற்கான அமெரிக்கசங்கத்தின் புதன்கிழமை நிகழ்ந்த கூட்டத்தில் விஞ்ஞானிகள் பேசுகையில், "மாரினர் சென்ற பாதையில் எந்த இடத்திலிருந்தும், சுக்கிரனில் காந்த மண்டலம் இருப்பதற்கான சான்று எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று கூறினர். சுக்கிரனை மாரினர் மிக அண்மையில் பார்த்த தூரம் சுக்கிரனிலிருந்து 21,594 மைலுக்கு அப்பாலாகும்.

சான்று ஏதுமில்லையாயினும், சுக்கிரனில் காந்த மண்டலம் இருக்கக் கூடுமென்பதே விஞ்ஞானிகள் கருத்து. "சூரியக் காற்றுகள்" அதாவது சூரியனின் மேல் பாகத்திலிருந்து கொதித்து எழுந்துவரும் மின் ஏற்றமுள்ள துகள்கள், சுக்கிரனில் இருக்கக்கூடிய ஆற்றல் மிகக் குறைவான காந்தமண்டலத்தை, மாரினர் - 2 கண்டுபிடிக்க முடியாத வண்ணம் மூடிவிடக்கூடுமென்று விஞ்ஞானிகள் விளக்கினர்.

## ஆற்றல் மிகுந்த கருவி

மாரினரில் மாக்னெடோ மீட்டர் என்ற, காந்த மண்டலத்தைக் கண்டுபிடிக்கக் கூடிய ஆற்றல் மிக்கதொரு கருவி உள்ளது. ஆற்றல் மிகக்குறைவான காந்த மண்டலத்தை இதனால் கண்டுபிடிக்கமுடியவில்லை என்று கூறினர் விஞ்ஞானிகள்.

"சுக்கிரனை நோக்கி மாரினர் செல்லுகையில், அதன் மாக்னட்டோ மீட்டர் காந்த மண்டல சக்தியில ஏற்றத் தாழ்வு எதையும் காணவில்லை. ஏற்றத் தாழ்வு இருந்திருந்தால் அது மற்றப் பகுதியைவிட சுக்கிரனுக்கு அண்மையில் குறைவாகவே இருந்திருக்கும் என விஞ்ஞானிகள் கூறினர்.

இந்தக் கண்டுபிடிப்பானது ஏற்கனவே இருந்து வரும் கோட்பாட்டுக்கு இசைவாகவே இருக்கிறது. அதாவது பூமியை விடக் குறைந்த வேகத்தில் சுற்றும் கோள்களில் காந்த மண்டலங்கள் இல்லை. இருந்தாலும் அவை மிக மிகச் சிறியவையாக இருக்கும் என்பதுதான் இந்தக் கோட்பாடு. சுக்கிரனின் 'ஆண்டுக்கு' 225 நாட்கள். அதனுடைய ஒரு முகம் எப்பொழுதும் சூரியனை நோக்கியே இருக்கிறது என்று கருதப்படுகிறது. அத்துடன் பூமிக்கு இருக்கும் வான் ஆலன் கதிரியக்க மண்டலம் போன்றதொரு மண்டலம் சூரியனைச் சுற்றி இல்லை என்ற கோட்பாட்டுக்கும் இக்கண்டுபிடிப்பு இசைவாகவே இருக்கிறது.

மாரினர்-2 ஆகஸ்ட் 27-ம் தேதி புளோரிடா மாகிலத்தில் கனவரால் முனையிலிருந்து செலுத்தப்பட்டது. 109 நாள் விண்வெளியில் 18 கோடி மைல்பாய்ந்துசென்று சுக்கிரனை டிசம்பர் 14-ந் தேதி கடந்து சென்றது.

இப்புதிய கண்டுபிடிப்பு அமெரிக்காவின் மிகப் பெரிய விஞ்ஞான ஸ்தாபனத்திடம் அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டிலும் நடக்கும் இந்த ஸ்தாபனத்தின் கூட்டம் விஞ்ஞானத்தின் எல்லாத் துறைகளையும் பற்றியதாக இருக்கும். வேறு எந்த விண்வெளிச் செயற்கைக்கோளையும் விட மாரினர் தான் சூரியனுக்கு மிக அருகில் சென்றிருக்கிறது.

# சிறுவர் பூங்கா

## உழவர் திருநாள்

— ‘செல்வன்’ —

பொங்கல் திருநாள் உழவுத்தொழிலுடையார்க்கே சிறப்பாகவுரியது. உழவர்களின் பெருநாளாய இத்தினம் இன்று தமிழர் யாபேரினதும் பொதுத்தினமாக விளங்குகின்றது. நாம் கொண்டாடும் பண்டிகைகள் யாவும் பெரும்பாலும் சமய அடிப்படையில் அமைந்தவை. பல்வேறுபட்ட சமயத்தினரும் பல்வேறுபட்ட பண்டிகைகளைக் கொண்டாடுவர். பொங்கல் பண்டிகையோகுறிப்பிட்ட ஒரு சமயத்தினருக்கோ, சாதியினருக்கோ உரியதொன்றல்ல. இப்பண்டிகை பொதுவாகத் தமிழ்மக்கள் யாபேருக்கும், சிறப்பாக உழவர்களுக்கு உரியதொன்றாகும். சமயத்தொடர்பற்றுத் தொழிலைஅடிப்படையாகக்கொண்ட ஒரு பண்டிகையாக விளங்குவதே இதற்குக் காரணமாகும். தொழிலை அடிப்படையாகக்கொண்ட இத்தகைய ஒரு பொதுப்பண்டிகை தமிழர்களுக்கே சிறப்பாகவுரியது.

உழவுத்தொழில் தொழில்கள் யாவற்றுள்ளும் சிறந்ததொன்றாகும். மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழிலாக விளங்குவதும் உழவுத் தொழிலே.

“உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்”

என்னும் பொதுமறைக்கமைய நாட்டின் உயிர்நாடியாகவிளங்குபவர் உழவர்.

தமிழரின் பொதுத் திருநாளாக விளங்கும் பொங்கல்திருநாள் தைமாத முதல்தேதியில் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தைத் தமிழர் யாபேரும் ஒருங்குசேர்ந்துகொண்டாடிக் களிப்பதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும். மார்கழி மாதப்பிற்கூற்றில் கதிரவன் தெற்கேயுள்ள மகரக் கோட்டிற்கு உச்சங்கொடுக்கின்றான். மார்கழி மாதத்தின் இறுதிநாட்களையடுத்து சூரியன் வடக்கேயுள்ள கடகக் கோட்டை நோக்கி அசைந்து செல்லுகின்றான். உலகிலுள்ள சக்திகள் யாவற்றிலும் முதன்மை பெற்றது சூரியன். சூரியனின் சக்தியே ஒளி, வெப்பம், மழை ஆகிய யாவற்றிற்கும் அடிப்படையாக விளங்குகின்றது. இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் சூரியன் வடக்கேயுள்ள பகுதிகளை நோக்கி அசைந்துவருவது தமிழ்மக்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தருவதாயிருந்தது. தமிழ்மக்கள் இத்தினத்தை ஒரு இன்பமான தினமாகக் கருதிவந்தனர். நாட்டில் வளம்பெருகவும் உழவுத் தொழில்மேம்படவும் சூரியனின் வருகையே காரணமாகவிருப்பதனால் இத்திருநாளன்று சூரியனுக்குப் பொங்கல் நடைபெறுகின்றது. இயற்கைச் சக்திகளுள் முதற்சக்தியாகவிளங்கும் சூரியனுக்குத் தலைவணங்கி விழாகொண்டாடும் நாளே பொங்கல் தினமாகும். இயற்கைச் சக்திகளுள் முதன்மை பெற்ற சூரியனுக்கு முதனாளில் விழாக்கொண்டாடும் தமிழ்மக்கள மறுநாள் உழவுத் தொழிலுக்குத் துணையாகவுள்ள மாட்டுக்குப் பொங்குவர். தம்மை அலங்கரிக்கத்தவறினும் மாட்டுக்குப் பொங்கி அதனை அலங்கரிக்க அவர் தவறுவதில்லை.

உழவர்களும் தொழிலாளரும் இன்பமாகக் கொண்டாடும் இப்பொங்கல் திருநாள் தமிழர் வாழ்விலேயே முக்கியமானதொன்றாகும். சாதிசமயக் கோட்பாடுகளினால் கட்டுப்படுத்தப்படாத பொங்கல்திருநாள் இன்று நேற்று எழுந்த ஒன்றல்ல. தமிழ்மக்கள் நாகரிகமுற்று விளங்கிய அக்காலத்திலேயே பொங்கல் விழாக் கொண்டாடப்பட்டுவந்தது.

## தெளிவு

— அந்தனி ஜீவா —

அந்தப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு ஆறுமுகத்தைக் கண்டால் பிடிக்காது. ஆசிரியர்களுக்குக்கூட அவனிடம் பிடிப்பதில்லை. அந்தப் பள்ளிக்கூட மாணவர்களுக்கே விஷமத்தனத்தில் முடிசூடா மன்னனாக விளங்கினான் ஆறுமுகம்.

ஆறுமுகம், கல்விகற்பதிலிருந்து மாணவர்களுக்கிடையே நடைபெறும் அடிதடிச் சண்டைவரை முதல்வனாகத் திகழ்ந்தான். இளமையில் ஆறுமுகத்திடம் ஆணவமும் வித்துவச் செருக்கும் நிறைந்திருந்தது.

ஆறுமுகத்திற்குக் கோபம் வந்தால் போதும். யாரென்றும் பார்க்கமாட்டான். கூடப்பிறந்த தம்பியென்றும் பார்க்கமாட்டான். அடித்து நொறுக்கி விடுவான்.

ஒற்றுமை என்ற வார்த்தைக்கு ஆறுமுகத்தின் அகராதியில் அர்த்தமே கிடையாது. பள்ளிக்கூடத்தில் மாத்திரமல்ல, வீட்டிலும்கூட உடன்பிறந்த தம்பி, தங்கைகளுடன் ஒற்றுமையாக இருக்கமாட்டான். அவர்கள் ஏதாவது ஒருவார்த்தை சொல்லிவிட்டால் போதும், பளீர் என்று சன்னத்தில் அறைந்து விடுவான்.

சாப்பிடும்போது கறி உருசியாக இல்லாவிட்டாலோ அல்லது அப்பா அம்மா ஏதாவது சொல்லிவிட்டாலோ போதும், சாப்பிட்டுக்கொண்டிருந்த பீங்கானைத் தூக்கி வெளியே எறிந்துவிடுவான். ஆறுமுகத்தை அவன் தாய் தந்தையர் கண்டிக்கப் பயந்தனர். ஏனோ தெரியவில்லை.

மாணவர்களுக்குப் பட்டப் பெயர் சூட்டி நையாண்டி பண்ணுவான். அவர்கள் ஆசிரியரிடம் புகார் பண்ணினால் போதும் பள்ளிக்கூடம் முடிந்து வெளியே வந்ததும் ஆறுமுகத்தின் கைகள் அவர்களைப் பதம் பார்க்கத் தயங்காது. இதற்காகவே மாணவர்கள் ஆறுமுகத்தைப்பற்றி ஆசிரியரிடம் புகார் செய்வதில்லை.

ஆறுமுகத்தின் போக்கு ஆசிரியர் முதற்கொண்டு தாய் தந்தையர்களுக்குக்கூட புரியாத போக்காக இருந்தது.

விளையாடும்போது கூட எல்லோருடனும் ஒற்றுமையாக நன்றாக விளையாடுவான். திடீரென்று யாரென்றும் பாராமல் ஒருவனை அடித்து விட்டு ஓடிவிடுவான்.

ஆறுமுகத்தை பள்ளிக்கூடத்தில் என்றோ “டிஸ்மிஸ்” பண்ணியிருப்பார்கள். படிப்பில் ஆறுமுகம் கெட்டிக்காரனாகத் திகழ்ந்ததால், அவனின் விஷமத்தனங்களைப் பொறுத்துக்கொண்டார்கள்.

ஆறுமுகத்தின் நுண்ணிய அறிவைக்கண்டு பாராட்டியவர்கள், அவன் செய்யும் விஷமத்தனங்களைக்கண்டு பயந்தார்கள். ஆறுமுகத்தை தனிரகம் என்றே கருதினார்கள். அறிவு இருந்த அளவுக்கு அவனிடம் அன்பாய்ப் பழகும் தன்மையில்லை.

* *

அன்று பள்ளிக்கூடம் முடிந்ததும் மாணவர்களுடன் சண்டையிட்டுக்கொண்டு திரும்பியிருந்தான் ஆறுமுகம். அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

வீட்டுவாசலில் ஆறுமுகத்தின் தம்பி மாரியப்பன் தனது பிஞ்சுக் கரத்தால் ஆறுமுகத்தின் பழைய கணக்குக் கொப்பியைக் கிழித்து, கப்பல்செய்து விளையாடிக்கொண்டிருந்தான். அந்தக் காட்சியைக் கண்டதும் ஆறுமுகத்தின் கோபம் பன்மடங்காகியது. ஆத்திரத்தால் அவன் முகம் சிவந்திருந்தது. மாரியப்பன் தன் பிஞ்சுக்கரதால் செய்திருந்த கப்பல்களைக் கிழித்தெறிந்தான்.

‘கழுதை! யாரைக் கேட்டுடா கொப்பியை எடுத்தாய்?’ என்று கூறியவாறு, அவன் கன்னத்தைப் பதம் பார்த்தான். ‘ஓ’ வென்று அலறியபடி ஓடிச்சென்று அம்மாவிடம், ‘அண்ணன் அடித்துவிட்டான்’ என்று முறையிட்டான்.

“ஏண்டா ஆறுமுகம் தம்பியை இப்படியா அறைவது?” என்று கேட்டவாறு வெளியே வந்து மாரியப்பனை அணைத்துக்கொண்டாள் தாய்.

“உனக்கு ஒன்றும் தெரியாதம்மா; நீ போ!” என்று கோபத்துடன் கூறியவாறு புத்தகங்களை ஒரு மூலையில் எறிந்தான் ஆறுமுகம்.

“ஆறுமுகம் கையைக் கழுவிக்கொண்டு சாப்பிடவாப்பா” என்று அன்னை அன்பொழுக அழைத்தாள்.

“எனக்கு ஒன்றும் வேண்டாம்” என்று கூறியவாறு “இந்த வீட்டில் இருந்தால் எனக்குப் பைத்தியந் தான் பிடிக்கும்” என்று கோபத்துடன் கூறியவாறு வீட்டைவிட்டு வெளியேறினான்.

ஆத்திரம் தீர்ந்தபின் ஆறுமுகம் திரும்புவான் என அறிந்த அவனது அன்னை பேசாமலிருந்தாள்.

ஆறுமுகம் தாயிடம் கோபித்துக்கொண்டு பூங்காவிற்குச் சென்றான்; ‘பெஞ்சின்’மீதமர்ந்தான். அவனது உள்ளக் குமைச்சல் இன்னும் தீரவில்லை.

“என்னை ஏன் எல்லாரும் வெறுக்கிறார்கள்?” என்று எண்ணி மனம் வெதும்பினான். “நான் எல்லோருக்கும் வேண்டாத — உப்பில்லாத பண்டமாகிவிட்டேன்” என்று எண்ணியவாறு தரையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். எறும்புகள் சாரைசாரையாகச் சென்றன. இறந்து கிடந்த

(8ம் பக்கம் பார்க்க)

### அறிவு வளருகிறதா ?

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கின்றன; இருந்தும் இந்தக் கேடுகளை நம்மால் உணரமுடியவில்லை.

மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திரமல்ல; அல்லது ஸ்தூல உடலுமல்ல; உணர்ச்சி மட்டுமோ? அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினால்தான் மனிதன் ஆகிறான் இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்விமுறையாகும். சுதந்திரம் அடைந்த பிறகுதான் இத்தகைய கல்வியளிப்பது சாத்தியமாகுமென்று கூறுவது, மாட்டுக்கு முன்னாலேயே வண்டியைப் பூட்டமுயலுகிற கதைதான். கோடிக்கணக்கில் இருக்கும் நமது மக்களை இயல்பாயுள்ள, மேற்சொன்னவை போன்ற தொழில்களைச் செய்யப் பழக்கவேண்டும்; அனைவருடைய பொதுநன்மையின் பொருட்டே அவர்கள் பணிபுரிகிறார்கள் என்பதையும் உணரச் செய்யவேண்டும்.

—காந்தியடிகள்

## தை வந்தது

— தி. சிவசாமி —

பொங்கு மிருள் திரை நீக்கியே - அருட்
புத்தொளி எங்கும் தேக்கியே
செங்கதிர் வானினைச் சேர்ந்தனன் - கவி
செய்து பலர் அதைப் பாடினர்.

பொன்னின் ஒளிக்கீற்றுப் பொலிந்தது -கடல்
பொங்கி ஒலித்தலை எறிந்தது
‘தண்’ணெனத் தென்றல் தவழ்ந்தது -
பொய்கைத்
தடங்களிற்றாமரை மலர்ந்தது.

வண்டுகள் கின்னர வாழ்த்தொடு - புது
மலர்களில் மதுவினைச் சேர்த்தன
எண்ணிற் பலப்பல எழிற்சுவை–வானத்
தேற்றி இரவி எழுந்தனன்.

செங்நெற் கதிர்குலை சிரித்திட–அதைச்
சென்று சிலபட்சி கொறித்தன
மண்ணின் மணம் உணர் மறவர்தோள் -மகிழ்
மண்டிப் புடைத்து மலைத்தன.

கன்னியர் கைவளை கலங்கிடச் - செய்ய
காலினிற் கிண்கிணி அலம்பிட
பண்ணிய கூத்தினைப் பார்த்துமே-விண்ணிற்
பரிதி எழுந்துலா வந்தனன்.

மாயம் புரிந்தது வானகம் - அன்பின்
மர்மம் புரிந்தது மண்ணகம்
தோயு மொளி வெள்ளம் உலகெலாம்-தமிழ்த்
தொன்மை விளங்கத் தை வந்தது.

★

## தைப் பொங்கல்

— அருள் - வேலழகன், கல்வயல் —

பல்லாயிரம் தொழில்கள்
பரந்திருக்கும் உலகினிலே
நல்ல தொழில் செய்வானடி — உழவன்
நாட்டிற் குழைப்பானடி !

ஆவணியில் விதைவிதைப்பான்
ஐப்பசியில் களையறுப்பான்
தாவணிபோல் மடல்விரியும் — கதிர்கள்
தலைவணங்கி நிற்குமடி !

மார்கழியின் கொடும்பிணியும்
மாரிமழை கடுங்குளிரும்
ஊரைவிட் டோடுமடி — தையில்
உழவுச் செல்வம் ஓங்குமடி !

தைபிறக்க வழிபிறக்கும்
தங்கநிற கதிர்விளையும்
மெய்குளிர தானியங்கள் — உழவன்
மனைகளிலே நிறையுமடி !

உழைப்பின் பலன்கிடைக்கும்
உழவன் மனங்களிக்கும்
செழித்தோங்கும் செல்வமடி — உழவன்
சிரிப்போங்கும் காலமடி !

முற்றத்தில் கோலமிட்டு
அற்புதமாய் ஆதவனின்
சர்க்கரைப் பொங்கலடி — உழவன்
தைத்திருப் பொங்கலடி !

செங்கரும்பு தேன்கதலி
கன்னலுடன் மாவிலையும்
செங்கதிரோன் பொங்கலடி — உழவன்
மங்களத் தைப்பொங்கலடி !

ஆதவனின் வெப்பநிலை
அவசியமாம் பயிர்விளைய
பேதமை இல்லையடி — உழவன்
பெருமை தருபொங்கலடி !

ஏருழவில் மனிதனுக்கு
பேருதவி மாடுகளாம்
சீர்மிகு பொங்கலடி — உழவன்
செய்தன்பு கொள்வானடி !

இயற்கைதரு செல்வங்களை
மறத்தமிழன போற்றுவது
செயற்குரிய செயலாமடி -- உழவன்
தைத்திருப் பொங்கலடி !

## சுதந்திர தினம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் செய்கிறது. தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக்கிளைகளின் உதவியுடன் இதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்கின்றனர். கொண்டாடும் முறைகள் பின்னர் விரிவாக வெளியிடப்படும்.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. இராசமாணிக்கமும், மட்டக்களப்பு எம். பி. திரு. இராசதுரையும் திரு. எஸ். ஜே.வி. செல்வநாயகத்தை அவருடைய இல்லத்தில் சந்தித்து கட்சி விடயங்கள் பலவற்றை ஆராய்ந்தனர். திரு. இராசதுரை துக்கதினத்தைத் மிகப் பெருமளவில் கொண்டாட வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

### பொங்கலன்று சைக்கிள் ஓட்டப்போட்டி

திருக்கோணமலை, சனி

சாம்பல்தீவு சித்தி விநாயகர் இளைஞர் விவசாயக் கழகத்தினுதரவில் எதிர்வரும் தைப் பொங்கல் திருநாளன்று சைக்கிள் ஓட்டப்போட்டியொன்று நடைபெறவிருக்கிறது. நிலாவெளி, கோபாலபுரம் அரசினர் பாடசாலையின் முன்னுல் ஆரம்பமாகும் இந்த சைக்கிள் ஓட்டப்போட்டி சாம்பல்தீவு மெ. மி. பாடசாலையில் முடிவடையும்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

காணத் தவறுதீர்கள்!!

ரீகல் (யாழ்ப்பாணம்)

தினசரி 3-30, 8-30, சனி ஞாயிறு காலை 10மணிக்கு மெட்னி.

11 அக்கடமி பரிசுகளையும், அவ்வருடத்தய சிறந்தபடமென்ற பாராட்டுதலையும் பெற்ற ஒப்பற்ற திரை ஓவியம்.

மெற்ரோ கோல்வின் மேயர் அளிக்கும்

வில்லியம் வைலருடைய 75 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட படம்

பென் - ஹர்

இதில் வரும் ரதப்போட்டி உங்களை மெய்மறக்கச் செய்யும் என்பது திண்ணம்.

பாஸ்களும், குறைந்தவிலை டிக்கற்றுகளும் அனுமதிக்கப்படமாட்டா.

இப்பொழுது நடைபெறுகிறது!

பொங்கல் திரை விருந்து !!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பதுளை)

ஸ்ரீகிருஷ் (திருகோணமலை) ஜூபிட்டர் (குருணுகலை) லக்ஷ்மி (இரத்தினபுரி)

தீவொளி (நுவரெலியா) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ரூகலை)

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்



எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
எம். என். நம்பியார், எம். என். ராஜம்
எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு
எம். எஸ். சரோஜா, மோகனு
மற்றும் பலர் நடித்த

ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

டைரக்ஷன் டி. யோகானந்த்

மனோகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், பத்மினி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த

உத்தம புத்திரன்

பொங்கலன்று (திங்கட்கிழமை) மட்டும்
ராணி சம்யுக்தா

# அழியா இலக்கியங்கள் உருவாகவேண்டும்

## தமிழ் இலக்கியவிழாவில் திரு. நடேசபிள்ளை உரை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இளைஞர்கள் தமிழ் இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கவேண்டும். இலக்கிய முயற்சிகளில் இளைஞர் ஈடுபடவேண்டும். காலப்போக்கில் மறைந்துபோகாமல் நமக்குப் பெருமையைத்தேடித்தரும் இலக்கியங்கள் உண்டாகவேண்டும். தமிழ் ஆயிரமாயிரம் ஆண்டுகாலம் வாழும் என்ற எண்ணத்தை எமக்குப் பண்டைய இலக்கியங்கள் தருகின்றன."

இவ்வாறு முன்னுள் தபால், தகவல் அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை இலங்கை சாகித்திய மண்டல ஆதரவில் யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நேற்றுக்காலை ஆரம்பமான தமிழ்இலக்கிய விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

விழாவைத் திரு. நடேசபிள்ளை திறந்துவைத்தார்.

திரு. சு. நடேசபிள்ளை தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

### வள்ளுவரின் பெருமை

பாண்டிய நாட்டிலே தான் தமிழ்ச் சங்கம் வளர்ந்தது. பாண்டிய மன்னர்களின் ஆதரவு தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாகவுள்ளது. மக்களின் வாழ்க்கைச் சித்திரங்களாகக் கவிதைகள் விளங்குகின்றன. தமிழுக்கு நிலைக்களனைப் பாண்டிய நாடு கூறப்படுகிறது. சங்கத்தமிழ் புறத்துணைப் பகுதி மக்களின் வீரவாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன. சிறந்த காதல் கவிகளை அக்காலத்திலிருந்த மொழிகளில் காண முடியாது. வடமொழி, கிரேக்கமொழிகளிலேகூட இக்கவிகள் இல்லை. பிற்காலத்தில் பல காதல் இலக்கியங்கள் தோன்றினும் அவை சங்க இலக்கியங்களுக்கு ஈடாகமாட்டாது. சங்க காலத்திற்குப் பின் தமிழ் வளர்ந்தது. ஒழுக்கத்தை வரையறுத்த பெருமை வள்ளுவருக்குரியது. எக்காலத்திற்கும், எத்தேசத்திற்கும் பொருந்துவதான கருத்தைத் திருக்குறள் விளக்கிக்காட்டுகிறது.

தமிழ் நாட்டிற்கே உரிய காவிய இலக்கியங்களாகச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இருக்கின்றன. தமிழில் இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகள் இருப்பதும் சிறப்புக்குக் காரணமாகின்றது. இயல், இசை, நாடகம் சம்பந்தப்பட்ட கவிகளையும் சங்க இலக்கியங்களில் காணலாம். தமிழ் மக்களுக்கே 'யாழ்' இசைக்கருவி உரியது.

தமிழ் நாட்டிற்கே பரதநாட்டியக்கலை உரியது. பிற்காலத்தில் தமிழ் இலக்கியம் பல் துறைகளிலும் வளரலாயிற்று. சங்க காலத்தின் பின்னரே தேவாரத் திருமுறைகள் எழுந்து பக்தி இலக்கியத்தை வளம்படுத்தின. திருமுறைகள் தமிழ் நாகரிகத்தை உயர்த்த வழிகாட்டின. சோழர் காலத்திலே பல உயர்ந்த காவியங்கள் தோன்றின. தமிழில் உள்ள பிரபந்தங்கள் போல வேறு எந்த மொழிகளிலும் இல்லை.

தமிழ் இலக்கியத்தில் பல புதுமைகளை ஏற்படுத்தியவர் மணிவாசகர். தமிழில் முன்னர் இருந்த இறுக்கத்தை மாற்றி எளிமையான தமிழ்நடையை உண்டாக்கியவரும் அவரே.

ஆங்கில ஆட்சிக்காலத்தின் ஆங்கிலமொழியின் ஆதிக்கமும் தமிழில் காணப்படுவதாயிற்று. ஆங்கில அறிவு படைத்தவர்கள் தமிழில் நூல்கள் எழுதினர்.

பலவிதரஸங்களை அபிநயங்கள் மூலம் கூத்தைச் சார்ந்த நாடகங்களே நாடகத் தமிழில் இருந்தன. வடமொழியில் உள்ள காளிதாசனின் சாகுந்தலம் போன்ற நாடகங்கள் இன்றும் தமிழில் தோன்றவில்லை.

### பொது கணக்கியல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றுறை எம். பி. யுமான திரு வி. ஏ. கந்தையா நேற்றைய தினம் பொது கணக்கியல் சபையின் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

லண்டன் சர்வகலாசாலை கணிதத்துறைப்பட்டதாரியான இவர் பலகாலமாக கொழும்பு செண். யோசப் கல்லூரியில் கணிதவிஞ்ஞானப் பேராசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவர் பின்னர் அத்துவக்காத்துதொழிலில் ஈடுபட்டார். சட்டக்கல்லூரியிலும் இவர் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

### தேவை

பண்டத்தரிப்புகோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திலுல் கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் தலைவர், பண்டத்தரிப்பு கோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு, பதிவுசெய்யப்பட்ட கடிதங்களில் அனுப்பப்படவேண்டும்.

(அ) பதவி: பண்டகசாலைப் பொறுப்பாளரும் கணக்காளரும் (Storekeeper CumAccountant)

(ஆ) தகமைகள்: விண்ணப்பகாரர் ஆங்கிலம் அல்லது தமிழ் சிரேஷ்ட தராதரப்பத்திரபரீட்சையில் சித்தியடைந்தவராயும், அப் பரீட்சையில் கணக்குப் பதிவியலிலும் (Book-keeping) தட்டெழுத்திலும் (Type-Writing) தேர்ச்சிபெற்றவராயும் இருத்தல் வேண்டும். பண்டசாலை சம்பந்தமான அனுபவம் சிறப்பாகக் கவனிக்கப்படும்.

(இ) வயது: 25-1-63-ல் 25 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(ஈ) பிணை:- காசு: ரூ.1000/=
ஆதனம்: ரூ. 3000/=

(உ) சம்பள விகிதம்:-
125 — 275
15 x 10

(ஊ) விண்ணப் பமுடிவு திகதி:- 25-1-63.

12-1-63

நீ. யேம்ஸ்,
தலைவர்.

643.

### வீடு வாடகைக்கு

இந்துக் கல்லூரிக்கும் மகளிர் கல்லூரிக்குமிடையில் நீராவியடியில், ஏழு அறை, கராச், மினசாரம், குழாய்த் தண்ணீர் மற்றும் வசதிகளுடன். கல்லூரி வீதி, 38-ல் விசாரிக்கவும்.

638

# இ. போ. ச. வேலை நிறுத்தம்?

கொழும்பு, சனி

இ. போ. ச. வைச் சேர்ந்த 3 தொழிற்சங்கங்களின் 9 கோரிக்கைகளுக்கும் இ. போ. ச. நிர்வாகம் இணங்க மறுத்ததைத் தொடர்ந்து இ. போ. ச. ஊழியர் எந்த நேரத்திலும் வேலைநிறுத்தம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் ஏற்பட்டால் அதை நிவிர்த்தி செய்ய என்ன விதத்தில் நடந்து கொள்ளவேண்டும் என்பது பற்றி இ. போ. ச. நிர்வாகம் ஆராய்ந்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச்செய்தி அச்சுக்குப்போகும் வரையில் இ. போ. ச. நிர்வாகத்தின் கூட்டம் கொழும்பில் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கிரிக்கெட்

சிட்னி, ஜன. 12

ஆஸ்திரேலியாவுக்கும், இங்கிலாந்திற்கும் இடையில் நடைபெற்றுவரும் 'டெஸ்' கிரிக்கெட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா ஐந்துவிக்கெட் நட்டத்துக்கு 212 ரன்கள் எடுத்துள்ளன. இங்கிலாந்து முதல் ஆட்டத்தில் 279ரன்கள் எடுத்தது.

# பென்-ஹர்

### பட விமர்சனம்

டைரக்டர் வில்லியம் வைலர் பென்ஹரை டைரக்ட் செய்ய என்ன பாடுபட்டிருப்பார் என்பதுஒரு புறமிருக்க இந்தச் சிந்தனைகளெல்லாம் அவரது மனதில் எப்படித் தோன்றின என்ற கேள்வியே பென்ஹரைப் பார்க்கும் பொழுது நமது மனதில் தோன்றும்.

யேசுநாதரின் முகத்தையே காட்டாது தெய்வத்தைத் தெய்வத்தின் நிலையிலேயே வைத்துப் படமாக்கியிருப்பது ஒரு புனிதமானபணி என்றுதான் கூறத்தோன்றுகிறது.

யேசுநாதரைச் சிலுவையில் அறையும் போது நமது இதயத்தில் ஆணி ஏற்றுவதுபோல் அவ்வளவு தத்ரூபமாக அந்தக் காட்சிகளை எடுத்திருக்கிருர் டைரக்டர். இசையமைப்பு இதற்குப்பெரிதும்உதவுகிறது.

பிரதான பாத்திரமான 'பென்ஹர்' பாத்திரத்தை ஏற்று நடித்துள்ள சால்டன் ஹேஸ்டன், நடிக்கிருர் என்று சொல்வதைவிட பென்ஹராக மாறி விட்டார் என்று கூறுவதே பொருந்தும். பாசத்தில் கட்டுண்டபோதும் எதிரியுடன் சவால் விடுக்கும் போதும். சித்திரவதைக்குள்ளாக்கும்போதும்கவலை, அன்பு, கோபம், பரிதாபம் இரக்கம், ஆத்திரம் அத்தனையும் முகபாவத்திலுல் மட்டுமல்ல உடல் முழுவதிலுமே காட்டுகிருர் அவர்.

யேசுநாதர் தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்து விட்டுச் செல்லும்போது அவரைப் பார்க்கும் பார்வை-நன்றி ஆச்சரியம். இப்படியெல்லாம் அவரால் எப்படிக்காட்ட முடிகிறது? வியக்கவேண்டியதுதான். எல்லாவற்றையும் சேர்த்துக் கூறிலுல் எம். ஜி. எம். ஸ்தாபனத்தார் பென்ஹர் பாகத்துக்கு மிகப் பொருத்தமான ஒரு நடிகரைத் தேர்ந்தெடுத்துப் போட்டிருக்கிருர்கள் என்று கூறலாம்.

மற்ற நடிகர்களெல்லோரும் தமது பாகத்தை உணர்ந்து நடித்திருக்கிருர்கள்.

சுமார் 15 நிமிடங்கள்வரை இடம்பெறும் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டிச் சவாரி படம் பார்க்கிருேமா அல்லது ரோமாபுரியில்தான் நிற்கிருேமா என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கத்தான் செய்யும். பொருட் செலவு மட்டுமல்ல துணிச்சலான முயற்சி.

காட்சி ஜோடனைகள் கண்களைக் குளிரவைக்கின்றன.

பென்ஹர் - பார்க்கவேண்டிய படம்.

—கணேஷ்

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.